ஐ.எஸ். அமைப்பின் திட்டம் இந்தியாவில் முறியடிப்பு
பக். 14 - 15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 218 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 17, வெள்ளிக்கிழமை 01.07.2016


முச்சந்தி முரளி



காணாமற்போனவைகளுக்கு அவைதான் பொறுப்பு என்றியளோ....

# ராணுவத்தைக் காவு கொடுக்கவே காணாமற்போனோர் அலுவலகம்

## போர்க்கொடி தூக்கியது மகிந்த அணி
## நாடாளுமன்றில் சட்டவரைவு தோற்கடிக்கப்படுமாம்

கொழும்பு, ஜூலை 1
நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த இராணுவத்தினரைக் காவு கொடுக்கும் ஒரு செயற்பாடே காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவும் நடவடிக்கை. எனவே இதனை அனைத்துத் தரப்பினரும் எதிர்க்க வேண்டும். இதற்கான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்க வேண்டும். இவ்வாறு போர்க் கொடி தூக்கியுள்ளது மகிந்த ஆதரவுக் கூட்டு எதிரணி.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
இது தொடர்பில் அவர் பக்.23

"பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினருக்கு எதிராக ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ளவர்கள் மீதும் குற்றச்சாட்டுப் பதிவுசெய்யும் ஒரு நடவடிக்கையே இந்தக் காணாமற் போனோர் அலுவலகமாகும்."

## தகவல் பரிமாற்ற அலுவலர்களாக 8000 பட்டதாரிகளுக்கு நியமனம்

### விரைவில் வழங்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 1
8, 000 பட்டதாரிகளை தகவல் பரிமாற்ற உத்தியோகத்தர்களாக அரச சேவையினுள் உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைகள் சட்டத்தை விரைந்து பலப்படுத்தும் நோக்கத்தை அடிப்படை பக்.23

## 1, 500 ஏக்கர் விடுவிப்புக்கு அமைச்சரவைப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
மயிலிட்டி - தையிட்டி உள்ளிட்ட ஆயிரத்து 500 ஏக்கர் நிலப் பரப்பை விடுவிக்க அனுமதி கோரும் அமைச்சரவைப் பத்திரம், அமைச்சரவைக்கு முன்னகர்த்தப்பட்டுள்ளது.
மீள்குடியேற்ற அமைச்சினாலேயே இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டது.
வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் இன்னமும் 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. இவற்றையும் விடுவிக்கவேண்டும் என்று அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். பக்.23

## வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவது கட்டாயம்

### பன்னாட்டுப் பிரதிநிதிகள் திட்டவட்டம்

இலங்கை அரசின் விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு கட்டாயம் இருக்கவேண்டும். இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தனர் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள்.
பன்னாட்டுப் பங்களிப்பு இருந்தால் மட்டுமே, பாதிக்கப்பட்டவர்களை நம்பிக்கை கொள்ளச் செய்ய முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர். (விரிவு : பக்கம் 10)

## ஐ.தே.கவில் பொன்சேகா ஐக்கியம்

ஜனநாயகக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான சரத் பொன் சேகா, ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று இணைந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் களனி அமைப்பாளராகவும் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டார். (விரிவு : பக்கம் 06)

## நம்பகமான நீதிப் பொறிமுறைக்கு பன்னாட்டுப் பங்களிப்பு அவசியம்

### ஜூரிகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

ஜெனிவா, ஜூலை 1
இலங்கை அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் பொறிமுறையை பன்னாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள் ஆகியோரின் பங்களிப்புடன் நிறுவ வேண்டும். நம்பகரமானதாகவும் சுயாதீனமாகவும் பக்கச் சார்பற்ற முறையிலும் நீதிப் பொறிமுறை இருக்கவேண்டுமாயின் பன்னாட்டுப் பங்களிப்பு இடம்பெற பக்.23

## இரண்டு பிரதேசங்களில் ஆயுத வேட்டை தோல்வி

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் இருக்கின்றன என்று தெரிவித்து இரண்டு வெவ்வேறு பிரதேசங்களில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகள், ஆயுதங்கள் எதுவும் மீட்கப்படாமலேயே கைவிடப்பட்டன.
வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதி வீடொன்றின் தரையின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் சிமெந்துப் பதுங்குகுழி அமைத்திருந்தனர். இந்தக் காணியினுள் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கையின் போது ஆயுதங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை.
இதேவேளை, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அருகில் உள்ள வளவுக்குள் ஆயுதங்கள் உள்ளன என்று தெரிவித்து பொலிஸார் தேடுதல் நடத்தினர். இதன் போது ஆயுதங்களோ, வெடி பொருள்களோ கண்டுபிடிக்கப்படவில்லை. (விரிவு : பக்கம் 02)

## மனித உரிமைகள் சபை விவகாரத்தை கூட்டமைப்பு நிதானமாகக் கையாண்டது

### இதனால் வெற்றி கிடைத்தது என்கிறார் இரா. சம்பந்தன்



யாழ்ப்பாணம், ஜூலை 1
ஐ. நா. மனித உரிமைகள் சபை விவகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிதானமாகக் கையாண்டது. அதனூடாகவே திருப்திகரமான வெற்றி கிடைக்கப் பெற்றிருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும், உறுப்பு நாடுகளும் வலியுறுத்திய விடயங்களை இலங்கை அரசு கவனத்தில் எடுத்துச் செயற்படும் பக்.23

## ஐ.நா. மனித உரிமைக் கிளை வடக்கு, கிழக்கில் வேண்டும்

### ஜெனிவாவில் வலியுறுத்தினார் சிவாஜிலிங்கம்

ஜெனிவா, ஜூலை 1
இலங்கையின் வடக்கு - கிழக்கில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கிளைகளைத் திறக்க வேண்டும். இவ்வாறு கேட்டுள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்.
ஜெனிவா, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு பக்.23

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை அரசு மீது நேற்றுக் காட்டம்

### மைத்திரியின் கருத்துக்களிலும் அதிருப்தி

ஜெனிவா, ஜூலை 1
ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அத்துடன் பன்னாட்டுப் பங்களிப்பை கேள்விக்கு உட்படுத்தும் விதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.
இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் குற்றம் சுமத்தியுள்ளது பன்னாட்டு மனித உரிமைகள்கண்காணிப்பகம்.
ஐ.நா. மனித உரிமை பக்.23


போன் ஒன்று பேர்சாக மாறியது

Digitized by Noolaham Foundation

# வட்டக்கச்சியில் ஆயுதம் தேடிய பொலிஸுக்கு மீண்டும் ஏமாற்றம்



யாழ்ப்பாணம், ஜூலை 1

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் இருக்கின்றன என்று தெரிவித்து பொலிஸ் மேற்கொண்ட தேடுதல் நிறுத்தப்பட்டது. ஆயுதங்கள் எதுவும் மீட்கப்படாமல் இந்த அகழ்வு நடவடிக்கை முடிவுறுத்தப்பட் டது.

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் வீடொன்றின் தரையின் கீழ் சிமெந்துப் பதுங்குகுழி அமைத்திருந்தனர். அந்த வீட்டில் இதுவரை காலமும் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். மக்கள் அந்தப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட காலத்திலிருந்து இராணுவத்தினரே அந்த வீட்டில் இருந்தனர். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னரே அதனை விடுவித்திருந்தனர்.

இந்தக் காணியினுள் வெடி பொருள்கள் இருக்கின்றன என்று இரகசியப் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது. நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு நேற்றுக்காலை அகழ்வு நடவடிக்கை பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த டி சில்வா முன்னிலையில் இந்த அகழ்வு நடத்தப்பட்டது. எந்த ஆயுதமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

(ற-5-ரி3)

# எரிபொருள் விற்பனை நிலையத்தின் ரூ.19 லட்சம் பணம் மாயம்

## முகாமையாளர் பொலிஸாரின் பிடியில் கம்பி எண்ணுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 1

தான் கடமையாற்றும் எரிபொருள் விற்பனை நிலையத்திலிருந்து பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் விற்பனை நிலையத்தின் முகாமையாளர், யாழ்ப்பாண விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

19 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் குறித்த இளைஞர் முகாமையாளராகக் கடமையாற்றுகின் றார். ஜனவரி மாத காலப்பகுதியில் அந்த நிறுவனத்திலிருந்து எரிபொருளை பெற்றுக் கொண்ட நிறுவனம் ஒன்றிட மிருந்து பெருந்தொகைப் பணத்தை அறவிட்டுள்ளார். அந்தப் பணத்தை எரிபொருள் நிரப்பு நிலைய கணக்கில் வரவு வைக்காமல் ஏமாற்றியுள்ளார் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

> எரிபொருள் விற்பனை நிலையம் இது தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே மோசடி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மோசடி செய்யப்பட்ட பணத் தொகை அண்ணளவாக பத்தொன்பது இலட்சம் என தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விற்பனை நிலையம் இது தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே மோசடி கண்டு பிடிக்கப்பட்டது. மோசடி செய்யப்பட்ட பணத்தொகை அண்ணளவாக பத்தொன்பது இலட்சம் என தெரிவிக்கப்படு கின்றது.

இச்சம்பவம் வெளியே தெரிய வந்ததைத் தொடர்ந்து அந்த முகாமையாளர் அங்கு கடமையாற்றும் இரண்டு ஊழியர்களைப் பயமுறுத்தி போலியாகக் கணினியில் பதிவுகளை மேற்கொண்டார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

குறித்த நபர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

குறித்த எரிபொருள் விற்பனை நிலையம் தமிழ் அரசியல்வாதி ஒருவரின் உறவினரின் பெயரில் இயங்கி வருகிறது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த காலங்களில் குறித்த அரசியல்வாதியின் வலதுகரமாக செயற்பட்டவர் என்றும் குறித்த நபருக்கு எதிராக பல வழக்குகள் நீதிமன்றில் உள்ளன என்றும் தெரிய வருகின்றது.

(ற-4,103)

# முல்லைத்தீவிலும் தேடுதல் படலம் ஆயுதங்கள் எவையும் சிக்கவில்லை

முல்லைத்தீவு, ஜூலை 1

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அருகில் உள்ள வளவுக்குள் ஆயுதங்கள் உள்ளன என்று தெரிவித்து பொலிஸார் தேடுதல் நடத்தினர். அதில் ஆயுதங்களோ, பொருள்களோ கண்டுபிடிக்கப்படவில்லை.



தனியார் வீட்டு வளவினுள் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று புலனாய்வுப் பிரிவினருக்குத்தகவல்கிடைத்ததன் பிரகாரம் குறித்த இடத்தைத் தோண்டுவதற்கு முல்லைத்தீவு நீதிவானிடம் அனுமதிபெறப்பட்டது. குறித்த பிரதேசம் கனரக வாகனம் கொண்டு இராணுவத்தால் தோண்டப்பட்டது. நீதிவான் முன்னிலையில் தேடுதல் நடத்தப்பட்டது. ஆயுதங்கள் எவையும் அகப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைப்பகத்தின் நகை புதைக்கப்பட்டுள்ளது என்றும் தருமபுரம், விசுவமடுப் பகுதிகளில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தும் இவ்வாறு முன்னரும் தேடுதல் நடத்தப்பட்டிருந்தது. அதன்போதும் எவையும் கண்டெடுக்கப்படவில்லை.

(ற-101)

# பாவனையாளர் அதிகார சபையின் புதிய முறைப்பாட்டுப் பிரிவு

## யாழ். குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் யாழ். மாவட்டத்தில் முறைப்பாட்டு பிரிவு புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுப் பிரிவுக்கு பாவனையாளர்கள் 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும்.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தனது சேவையை மேம்படுத்தும் முகமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் பாவனையாளர் முறைப்பாட்டுப் பிரிவு ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. யாழ். மாவட்டத்திலும் முறைப்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்த அதிகார சபை செயற்படும். அதற்குப் பொறுப்பாக புலனாய்வு அதிகாரி மு.றம்ஸீன், ம.பிரியங்கன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.சிவரூபன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய வியாபார உலகில் பாவனையாளர்கள் வர்த்தக நடவடிக்கை பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கும் விரைவில் சிறந்த நிவாரணம் மற்றும் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கும் முறைப்பாட்டுப் பிரிவை தொடர்பு கொள்ள முடியும்.

0213219000, 0770139307 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ, நேரடியாக அல்லது தபால் மூலமாக மாவட்ட இணைப்பதிகாரி, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, மாவட்டச் செயலகம் என்னும் முகவரியின் ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும். மின்னஞ்சல் ஊடாகத் தொடர்பு கொள்வதாயின் Jaffd.caa@gmail.com மின்னஞ்சல் முகவரியின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் - என்றார்.

(ற-ஐ-5)

# பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுக்க வருகிறார் மீள்குடியேற்ற அமைச்சர்

வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்காக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த ஜனவரி மாதம் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில், மீள்குடியேற்ற அமைச்சின் நிதியில் குடிதண்ணீர் வழங்கல் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

8.4 மில்லியன் ரூபா செலவில் 7 இடங்களில் முன்னெடுக்கப்பட்ட இந்த குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் அமைச்சர் சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

பலாலி வடக்கில் அரச காணியில், காணியில்லாத மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டிருந்தனர். குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் 8 லட்சம் ரூபா வீட்டுத் திட்டத்தில் 104 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்ட வீடுகளுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு அமைச்சர் சம்பிரதாயபூர்வமாக வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லை நடவுள்ளார்.

கடந்த ஆண்டு மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட வலி. கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் அக்கரை பிரதேசத்தில், 13.5 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தை அமைச்சர் ஆரம்பிக்கவுள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியில் மருதங்கேணியில் அமைக்கப்பட்டுள்ள படகுதிருத்தும் தொழிற்சாலையையும் அமைச்சர் திறந்து வைப்பார் என தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-5)

# நீதிமன்றக் கட்டளைக்கு மாறாகப் பாடசாலை வளாகத்தில் குழப்பம்

## சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு

சாவகச்சேரி ஜூலை 1

நீதிமன்றக் கட்டளைக்கு மாறாகப் பாடசாலை வளாகத்தில் அமைதிக்குக் குழப்பம் விளைவிக்கும் வகையில் செயற்பாடு இடம்பெற்றது என்று நீதிமன்றுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அது தொடர்பாகப் புலன் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துக.

இவ்வாறு சாவகச்சேரி நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவனை ஆசிரியர் தாக்கி செவிப்பறையில் பாதிப்பை ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. குறித்த மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார். வைத்தியசாலையில் இரு ஆசிரியர்கள் தன்னை அச்சுறுத்தினார்கள் என மாணவன் பொலி[illegible] அந்த இரு ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை விளக்கமறியலில் வைக் கப்பட்டனர்.

அவர்களைப் பிணையில் விடக்கோரி நேற்று நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டன. பிணை மனுக்களை நீதிவான் நிராகரித்தார். அதன் பின்னர் மேற்குறித்த உத்தரவு பொலிஸாருக்கு வழங்கப்பட்டது.

தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் கடந்த செவ்வாய்க்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

(ற-4.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து மேலும் சில நாடுகள் வெளியேறும் அபாயம்

## தனித்தனி உடன்படிக்கைகளுக்கு தயாராகிறதாம் கொழும்பு அரசு

கொழும்பு, ஜூலை 1
ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியுள்ள நிலையில், ஏனைய சில நாடுகளும் வெளியேறும் அபாயம் இருப்பதால், அந்த நாடுகளுடன் தனித்தனியே வர்த்தக உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.
இவ்வாறு தெரிவித்தார் நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியுள்ளதானது உலகப் பொருளாதாரத்தில் பெரியளவில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இன்னமும் எமது நாட்டின் நிதி முகாமைத்துவத்துக்குப் பெரும் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. எமது நாட்டுக்குக் கடன் கொடுக்கமுடியாது என்று இதுவரை உலகில் தீர்மானிக்கப்படவில்லை.
அத்துடன், நாம் பெற்றுக்கொண்டுள்ள கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையில் எமக்கு வருவாய் உள்ளது. ஆனால், அரச வருவாயை அதிகரிக்கவேண்டிய ஒரு முக்கிய பிரச்சினை உள்ளது.
மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 76 வீதமான வருமானம் நாம் பெற்றுக்கொண்டுள்ள கடனைத் திருப்பிச் செலுத்தவே பயன்படுத்தப்படுகின்றது. 1993 ஆம் ஆண்டு 19.7 வீதமாக இருந்த அரச வருமானம் கடந்த 2014ஆம் ஆண்டு 11.4 வீதமாகக் குறைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டு இந்த வீதம் 1.6 ஆல் அதிகரித்துள்ளது.
அரச வருமானத்தை அதிகரிக்கும் முனைப்பில் தேசிய அரசு வேலைத்திட்டங்களை வகுத்துள்ளது. 20 வீதம் வரை அரச வருமானத்தை அதிகரிக்காவிடின், இலங்கையின் பொருளாதாரம் எதிர்காலத்தில் சிக்கல் நிறைந்ததாக மாறிவிடும்.
பிரிட்டனை உடனடியாக விலகுமாறு ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. அதுவும் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தும். பிரிட்டனுடன் வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்ள அரசு தயாராகி வருவதுபோல், ஏனைய ஐரோப்பிய நாடுகளுடனும் நாம் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார்.
(வ-சி)

# தகுதியுடைய அதிபர்களுக்கு பாடசாலை வழங்காமைக்கு எதிராகப் போராட்டம்

## மாகாண ரீதியில் முன்னெடுக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 1
தகுதியுடைய அதிபர்களுக்கு பாடசாலைகளைபெற்றுக்கொடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாகாண ரீதியாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை அதிபர் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.
இந்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் வட மேல் மாகாணத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் பியசிறி பிரணாந்து தெரிவித்தார்.
அதிபர் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகள் தொடர்பான மிகச் சரியான அறிக்கைகளை சில வலயக் கல்விக் அதிகாரிகள் மறைத்துள்ளனர். தற்பொழுது, அதிபர் காணப்படாத சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிபர்களாகப் பதவி வகித்து வருகின்றனர். இவர்களைத் தொடர்ந்தும் அந்தப் பதவிகளில் வைத்திருப்பதற்காகவே இவ்வாறு சரியான அறிக்கைகளை மறைத்துள்ளனர்.
தற்பொழுது, நியமனம் பெற்றுள்ள புதிய அதிபர்கள் 3 ஆயிரத்து 859 பேரும் இதனால் பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. தகுதியுடைய அதிபர்களுக்கு பாடசாலைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு- என்றார் பியசிறி பிரணாந்து.
(வ-5)

**புகைப்படப்பிரதியாக்கம்**
4R-8/=
பாஸ்போட். விசா, N.I.C
அளவிலான
புகைப்படப்பிரதிகளையும்
கலர்பிறிண்ட் மற்றும்
டியுறோ, கிளாஸ் பிறேம்களையும்
உடனுக்குடன் பெற்றுக்
கொள்ளலாம்.
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ் வீதி, மானிப்பாய்.
T.P: 077 949 5065

# பயங்கரவாதச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படும்

## சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க.
பன்னாட்டு, சித்திரவதைகளுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு சித்திரவதைகளுக்கு முற்றுப்புள்ளி என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பேரணியில் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் கலந்து கொண்டிருந்தார்.
இதன்போது உரையாற்றிய அமைச்சர் சாகல தெரிவித்ததாவது:
மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சித்திரவதைகளை இல்லாதொழித்தல் தொடர்பில் அரசின் கவனம் திரும்பியுள்ளது. காலத்திற்கு ஏற்ற சட்டங்களை மாற்றியமைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, புதிய பெயரில் அறிமுகப்படுத்தப் படவுள்ளது.
அதுமட்டுமன்றி கூட்டுக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவும் புதிய சட்டமொன்றைக் கொண்டு வர உத்தேசித்துள்ளோம்.
பயங்கரவாத தடைத்தட்டத்தின் கீழ் 72 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படும் அதிகாரத்தையும் மாற்றியமைத்து, மக்களுக்கு ஏற்றதும், தற்காலத்திற்குப் பொருத்தமானதுமான நியாயமான சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளவிருக்கின்றோம். பலாத்காரமாக இவற்றைச் செய்வதை விடுத்து, விழிப்புணர்வுகளின் மூலம் சித்திரவதைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுப்போம். இதற்குப் புதிய சட்டங்கள் தேவையில்லை. நடைமுறையிலுள்ள சட்டங்களே இவை அனைத்திற்கும் போதுமானவை என்றார்.
(வ-5)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 517
சீட்டிழுப்பு திகதி 2016.06.30
வெற்றி இலக்கங்கள்
07 09 43 49 E
ரூ. 61,668,460/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1275
சீட்டிழுப்பு திகதி 2016.06.30
வெற்றி இலக்கங்கள்
32 46 48 56 W
ரூ. 18,468,960/=

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**


திரு. கனகரத்தினம் மகிந்தன்
(B.A(Hons)Eco.Spe,PGDE,MEd(Hons),SLPS-III)
எமது கல்லூரி ஆசிரியர்
திரு.க. மகிந்தன் அவர்கள்
இலங்கை அதிபர் சேவை தரம்-III இற்கு
பதவி உயர்வு பெற்றமையிட்டு இவரை
மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும்
பல பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ள
வேம்பிய விநாயகனை வேண்டுகின்றோம்.
கல்லூரிச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

# ஒரே கிராமத்தைச் சேர்ந்த மூவர் வீதி விபத்தில் சாவு

மட்டக்களப்பு, ஜூலை 1
மட்டக்களப்பு, கொழும்பு பிராதன வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தனர்.
மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் அவற்றைச் செலுத்திச் சென்ற மாணவர்கள் இருவரும், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவரும் உயிழந்தனர். அவர்களுடன் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.
இந்தச் சம்பவம் வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள மட்டக்களப்பு, கொழும்பு நெடுஞ்சாலையிலுள்ள ஜெயந்தியாய எனுமிடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றது.
ஜெயந்தியாய கிராமத்தைச் சேர்ந்த ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி பயிலும் கரீம் கஸ்மீர் (வயது-15), ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் தரம்- 11இல் கல்வி பயிலும் சனூஸ் இம்தாத் (வயது - 16), நிஸ்தார் மிஸ்பாக் (வயது-20) ஆகியோரே உயிரிழந்தார்.
இருவரின் சடலங்கள் வெலிக்கந்தை வைத்தியசாலையிலும், மற்றொருவரின் சடலம் பொலன்னறுவை வைத்தியசாலையிலும் நேற்று வைக்கப்பட்டிருந்தன.
மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின்னால் அமர்ந்து சென்ற முஹம்மத் சியாம் (வயது 30) என்பவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்த விபத்து தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(வ-சி)

60 ஆவது அகவை கண்டு மணிவிழாக் காணும்

நற்சேவையாளர்
சு.சேய்சோதிகாந்தன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
புதுக்குடியிருப்பு) அவர்களது
சேவைநலன்
பாராட்டு விழா
இடம் : மத்திய கல்லூரி மண்டபம்
மு/புதுக்குடியிருப்பு
காலம் : 2016.07.02 (சனிக்கிழமை)
நேரம் : முற்பகல் 10.00 மணி
கோட்டக்கல்விப்பணிப்பாளர், அதிபர்கள்
கோட்டக்கல்வி பணிமனை
மு/புதுக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமகுரு
## அனுராதபுரம் அருள்மிகு கதிரேசன் கோயில்

1985 இல் நடைபெற்ற வன்செயலில் மேற்படி ஆலயம் சேதமடைந்ததன் பின்னர் பூஜைகள் நடைபெறாது காடு மண்டிக் கிடந்தது யாவரும் அறிந்ததே. 2000 ஆம் ஆண்டு மீண்டும் ஆலயத்தில் பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை நானே கோயிலின் பிரதம குருவாகக் கடமையாற்றுகிறேன்.

1985 இன் பின்னர் இன்றுவரை ஒரு நாளாவது இவ்வாலயத்தில் பூஜை செய்யாத ஒரு குருக்கள் ஐயா அவர்கள் அனுராதபுரம் அருள்மிகு கதிரேசன் ஆலய பிரதமகுரு என தனிப்பட்ட கடிதத்தலைப்பைப் பாவித்துக்கொண்டும் மற்றைய ஆலய விசேட நிகழ்வுக் கிரியைகளில் ஈடுபடும்போது அவ்வாலய அழைப்பிதழ்கள் மற்றும் விளம்பர அறிவித்தல்களில் தன்னை அனுராதபுரம் அருள்மிகு கதிரேசன் ஆலய பிரதமகுரு என அறிமுகப்படுத்தி குறிப்பிடுவதாகவும் அறியப்படுகிறது. இதனால் பிரதம குருவாகிய நான் பலவித அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆகவே இத்தால் சகலருமறியத்தருவது அனுராதபுரத்தில் அமைந்திருக்கும் ஒரே ஒரு கதிரேசன் கோயிலின் பிரதம குருவாகக் கடமையாற்றுவது நானே என்றும் மேலும் இன்று முதல் மேற்படி கடிதத்தலைப்பு பாவிப்பவர் மற்றும் இவரை அனுராதபுரம் கதிரேசன் ஆலய பிரதம குரு என விளம்பரப்படுத்தும் அல்லது அறிமுகப்படுத்தும் தனிப்பட்டவர் அல்லது ஆலயங்களின் நிர்வாக சபையினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கநேரிடும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**சமாதானத் தூதுவர், சமாதான நீதிவான், " சேவாகீர்த்தி ",**
**" தேசமான்ய ", " தேசாபிமானி" .**
**கலாநிதி பா. ஞானச்சந்திரன் குருக்கள்,**
**பிரதம குரு, கதிரேசன் கோயில்,**
**ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம்,**
**தொ.பே. ஆலயம் - 025 222 5436, 077 615 3160**

(சி.22156) (13.18)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும்**
**தொலைக்கல்வி நிலையம்**

## கலை முதற்தேர்வு - 2013 (வெளிவாரி)
## மீள்பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நடத்தப்பட்ட கலை முதற்தேர்வு- 2012 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 29.07.2016 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக்கட்டணம் ரூபா.500/= ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா. 300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா. 300/= இற்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா. 70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், **உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள்
பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்

**முக்கிய குறிப்பு:** **கலைமாணிக் கற்கை நெறி தொடர்பாக, கல்வியாண்டு 2011 / 2012 இல் இருந்து அரையாண்டு பருவ அடிப்படையிலான, கற்கைக்கால அளவுப் பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை (Semester based course unit system and Grade Point Average evaluation) அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், ஏற்கனவே கலைமாணிக் கற்கை நெறிக்கு பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், கலைமாணிக் கற்கைநெறி தொடர்பான பரீட்சை ஒழுங்கு விதிகளின் பிரகாரம், பழைய பாடத்திட்டத்தின் கீழான கலைமுதற் தேர்வு மீள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு மேலதிகமாக இன்னுமொரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும் என்பதையும் கவனத்திற்கொள்ளவும்.**

**மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.**

**பதிவாளர்**
**30.06.2016**

(சி.22157) (13.18)

---

# சான்றிதழ் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் 2006-2007 கல்வியாண்டு ஆசிரியர்களின், பெறுபேற்று மூலச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித்தார். "சான்றிதழ்கள் கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகப் பிரிவில் இருந்து எமக்குக் கிடைத்துள்ளன. உரியவர்கள் தங்களது ஆள் அடையாளத்தைச் சமர்ப்பித்து, சான்றிதழ்களை கலாசாலை கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்" என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-ரி)

---

## அறிவித்தல்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**
**வடக்கு மாகாணம்**

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் சனசமூக அபிவிருத்தி**
**உத்தியோகத்தர் தரம் III**
**பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை - 2016**
**மற்றும்**
**வடக்கு மாகாண பொதுச்சேவையின் ஆய்வு உத்தியோகத்தர்**
**சேவையின் தரம் III**
**பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும்**
**மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016**

தமிழ் / சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த மற்றும் மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி 2016.07.27 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டுத் தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரூ.வரதலிங்கம்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**

(சி.22156) (13.18)

---

# நாடகவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.
பாடசாலை அதிபர் மே.இந்திரபாலா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், தலைமை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக ஆங்கில மொழித்துறை மூத்த விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனும், சிறப்பு விருந்தினராக முத்துத் தம்பி மகா வித்தியாலய ஆசிரியர் எஸ்.வி.தயாநிதியும் கலந்துகொள்வர். (ற-ஐ-ரி)

---

# ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு எட்டு மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 1
தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்படும் வறுமையில் திறமை நிதியம் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு எட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
செல்வகுமார் சுகன்யா (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), கந்தசாமி சகிலன் (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), மேனாகரன் மாதுமை (கச்சாய் அ.த.க.பாடசாலை), கார்த்திகேசு ரவிராஜ் (மிருசுவில் அ.த.க. பாடசாலை), இராசதுரை பிரவீணா (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), குகதாசன் மதுஜா (கச்சாய் அ.த.க.பாடசாலை), நடராசபிள்ளை அனிந்தினி (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), நடராசா வித்தகி (வரணி மத்திய கல்லூரி) ஆகிய எட்டுப் பேருக்குமான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் அண்மையில் வழங்கப்பட்டன. அவர்களுக்கு மாதாந்தம் ரூபா இரண்டாயிரம் வீதம், இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படவுள்ளது. (ற-ஐ-122)

---

**தேவை**
கொழும்பிலுள்ள சில்லறைக்கடைக்கு ஆள் தேவை. தங்குமிடவசதி உண்டு. மூன்று வேளை உணவு இலவசம். மாதாந்தம் சம்பளம் 25 000/= தரப்படும்.
**077 700 8187, 011 313 7535**

---

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)
### Procurement of Construction Work

The Chairman Regional Procument Committee on behalf of the Regional Directorate of Health Services, Jaffna invites Sealed Bids from qualified Bidders For the construction works described in the table below. Bids should be delivered in duplicate.

| Tender No | Work Item | ICTAD Registration Reguired | Non Refundable Tender Fee | Bid Security | Basic Cost Estimate (Millions) |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/B/2016/01 | Construction of Premature Baby Unit at Base Hospital Pointpedro | C 8 or above (Building) | 5000.00 | 50 000.00 | 5.0Mn |

1. Bids Should be made only on the forms provided by the officer of Regional Director of Health services, 572/3 Hospital Road Jaffna (021 222 2278/4557. ext 20)
2. Bidding Documents can be obtained from the above mentioned office on payment of non -refundable tender from 04.07.2016 between 9.00 am and 3.pm on working days
3. Bids will be opened at 10.00 am on 22.07.2016 at the office. Late Bids will be rejected, Bids shall be delivered or sent by registered post or deposited in the tender box available at the Room of Accountant. Bidders and their authorized representatives can participate at the opening.
4. The Name of Bid and Tender No. should be mentioned on the left upper side of the bidding envelop.
5. The decision of the Procument Committee with regard to acceptance or rejection of any or all bids or awarding of the tender is final.

Dr.K.Nanthakumaran
Chairperson,
Regional Procurement Committee,
RDHS Office, Jaffna.

(C/22147) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் வர்த்தக சந்தேகநபர்கள் மூவர் கைது

கொழும்பு, ஜூலை 1
கொழும்பு நகரில் அமைந்துள்ள களியாட்ட விடுதிகளைச் சார்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப் பொருள் வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட முக்கிய மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 49 போதை வில்லைகள் மற்றும் போதையூட்டும் 200 மாத்திரைகள் என்பன பொலிஸ் போதைப் பொருள் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்புரையின் பேரில், நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விசேட நடவடிக்கைகளில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் போதைப் பொருள்களை விலைக்கு வாங்குவதற்கு வருகை தந்தார்கள் என சந்தேகிக்கப்பட்ட களியாட்ட விடுதிகளில் நடனமாடும் இரு யுவதிகள், பிரபல பாடசாலை ஒன்றின் விளையாட்டுத் துறைப் பயிற்சியாளர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பேர் விசாரணைகளின் நிமித்தம் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

> "கைப்பற்றப்பட்டிருந்த போதைப் பொருள்களின் பெறுமதியானது 6 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டதாக இருக்கும் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது."

கைப்பற்றப்பட்டிருந்த போதைப் பொருள்களின் பெறுமதியானது 6 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டதாக இருக்கும் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(ற-ஐ-ரி,22)

# பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் சாவு

கொழும்பு, ஜூலை 1
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவிருந்த நிகழ்வில், பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவரின் உயிரிழப்புக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேகாலைப் பிரதேசத்தில் நிகழ்வு ஒன்றில் இன்று கலந்து கொள்ளவிருந்தார். அந்த நிகழ்வில் இடம்பெற இருந்த மைதானத்துக்கு நேற்று முன்தினம் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இதற்கு ரம்புக்கனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கடமையில் ஈடுபட்டிருந்த 52 வயதான பொலிஸ் அதிகாரி மலசல கூடத்துக்கு அதிகாலை சென்றுள்ளார். இதன் பின்னர் அவர் வரவில்லை. அங்கிருந்த ஏனைய பொலிஸார் அவரைத் தேடினர். இறுதியில் அவர் மலசலகூடத்துக்கு அருகில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ற-ஐ-5)

## கருத்துப் பரிமாற்றமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜூலை 1
தேசிய இலக்கியப் பேரவையில் இந்த மாத வாசகர் வட்டத்தில் தமிழினியின் "ஒரு கூர்வாளின் நிழலில்" என்னும் நூல் தொடர்பான கருத்துப்பரிமாற்றங்களும், கலந்துரையாடலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு 121 ஹம்டன் லேன், வெள்ளவத்தையில் அமைந்துள்ள தேசிய இலக்கிய பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெறும். (ற-ஐ-ரி)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கரணவாய் ஜூலை 1
இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் இன்று இரவு 7.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம் பெறும். (ற-ஐ-108)

★ ★ ★

இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.774 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெறும். (ற-ஐ-ரி)

# இப்படியும் ஒரு போராட்டம்

### பாடசாலையில் சிறார்களை இணைப்பதற்காக



கொழும்பு, ஜூலை 1
பாடசாலைக்கு சிறுவர்களை இணைத்துக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிராக, கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் பாலித்த தேவப் பெரும உயிரை மாய்க்கமுயற்சிசெய்துள்ளார். பாடசாலை வளாகத்துக்குள் அவர் இந்த முயற்சியை மேற்கொண்டார். உடனடியாகவே காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பகுதியில் உள்ள பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

மத்துகம மீகாதென்ன ஆரம்ப பாடசாலை நிர்வாகம், தரம் ஒன்றுக்கு விண்ணப்பித்தவர்களில் 10 சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் பாலித்த தேவரப்பெரும செவ்வாய்க் கிழமை மாலை மத்துகம வலையக் கல்விப் பணிமனைக்கு எதிரில் உணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இரண்டு நாள் கடந்தும் பாடசாலை நிர்வாகமோ, வலயக் கல்விப் பணிமனையோ, விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட சிறுவர்கள் பத்து பேரையும் இணைத்துக் கொள்ளவில்லை.

அதையடுத்து பாடசாலைக்குள் புகுந்த பிரதியமைச்சர் அங்கிருந்த மின்விசிறியில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார்.

அங்கிருந்த பொலிஸாரும், அவரது ஆதரவாளர்களும் அவரைக் காப்பாற்றி வைத்தியசாலையில் சேர்த்தனர். இந்த நிலையில் பத்து சிறுவர்களையும் இணைத்துக் கொள்ள மீகாதென்ன ஆரம்பப் பாடசாலை அதிபர் இணக்கம் தெரிவித்தார். (ற-ஐ-5)

**அழகுக் கலை பயிற்சி வகுப்புக்கள்**

ஆஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்திருக்கும் பிரபல
அழகுக்கலை நிபுணர்
**திருமதி தர்சினி ரஞ்சன்** அவர்களால்

மணப்பெண் அலங்காரம்,
சிகை அலங்காரம்
முக அலங்காரம்
போன்ற அலங்கார வகுப்புக்கள்
(Workshop) நடத்தப்படவுள்ளன.



**வகுப்புக்கள்**
**03.07.2016 ஞாயிறு தொடக்கம்**
**08.07.2016 வெள்ளி வரை**
இலவச அறிமுக வகுப்புக்களும்
அதனைத் தொடர்ந்து குறைந்த
கட்டணத்தில் பயிற்சி வகுப்புக்களும்
நடைபெறும்.
**அரிய சந்தர்ப்பத்தை**
**நழுவ விடாதீர்கள்.**
**தொடர்புகளுக்கு:**
**திருமதி தர்சினி றஞ்சன்**
தொ.பே.இல: 0711103612 /
021 222 5158
e-Mail: harishi09@gmail.com
179/5, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

காரைநகர், யாழ்ற்றன் கல்லூரி
ஆசிரியர்

**திரு ஆறுமுகம்**
**யோகலிங்கம்**



அவர்கள் 09.05.2016 ஆம் திகதி
தொடக்கம் இலங்கை அதிபர் சேவை
தரம் III இற்கு பதவி உயர்வு
பெற்றுள்ளமையையிட்டு அவரை
மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று
நற்பணியாற்ற வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்
யா/ யாழ்ற்றன் கல்லூரி காரைநகர்.
(வெ/1773)
(12,18)

# இலங்கை மக்களின் ஆயுள்காலம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 1
இலங்கையர்களின் ஆயுள் காலத்தில் ஆண்களின் வயது 72 ஆகவும், பெண்களின் வயது 78 ஆகவும் அதிகரித்துள்ளது. பொதுசன மதிப்பீடுகள் மற்றும் புள்ளி விவரங்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பொதுசன மதிப்பீட்டில் பெறப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய, 2011 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த இறப்புக்களின் எண்ணிக்கை அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2000 ஆம் மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுள் காலம் கணிக்கப்பட்டது. அந்த அறிக்கைக்கு அமைய பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆண்களின் வயது 68 ஆண்டுகள் 8 மாதங்களாகவும், பெண்களின் வயது 77 ஆண்டுகள் 2 மாதங்களாகவும் இருந்தன.

இதுவரை வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் மற்றும் ஒப்பீடுகளின் போது, இந்தப் புதிய அறிக்கையில் காணப்படுவதே எதிர்பார்க்கப்படும் அதி உச்ச காலமாக இருக்கின்றது என்று மேற்படி திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் உள்ள தரவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ற-ஐ-ரி2,22)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலையில் ஆசிரியப் பணிபுரிந்து, அதிபர் சேவை, தரம் III
பதவியினைப் பெற்றுக் கொண்ட எமது ஆசிரியர்கள்



**திரு. பாலசுப்பிரமணியம்**
**பார்த்தீபன்** SLPS III



**திரு. சுப்பிரமணியம்**
**பிறேமன்** SLPS III

இவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
**பாடசாலைச் சமூகம்**
**யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்தவரின் ஆவியைப் போன்று மகிந்த மீள ஆட்சியைக் கைப்பற்றலாம்

## எச்சரிக்கின்றார் அமைச்சர் சரத் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 1
உயிரிழந்தவரது ஆவியைப் போன்று மீளவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியைக் கைப்பற்றும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

இவ்வாறு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்தார்.

அமைச்சர், ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று வியாழக்கிழமை இணைந்து கொண்டு களனி அமைப்பாளர் பதவியைஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது:

ராஜபக்ச குடும்பத்தினரின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து மக்களைக் காப்பாற்றவே நான் அரசியலில் பிரவேசித்தேன். அந்த நோக்கத்துக்காகவே ஐக்கியதேசியகட்சியில் இணைந்து கொண்டுள்ளேன்.

நாட்டில் நல்லாட்சி என்பதை நிலை நாட்ட வேண்டும் என்று 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் மேடையில் வைத்து கூறியிருந்தேன். நல்லாட்சி என்பது இதற்கு முன்னர் இந்த நாட்டில் அறியப்படாத பொருளாக இருந்தது. அதற்கு அப்போதிருந்த அரசியல்வாதிகளும் விருப்பம் தெரிவிக்கவில்லை. நாங்கள் கூறியிருந்த நோக்கங்கள் அனைத்தும் இன்று நிறைவேறியுள்ளன.

ராஜபக்சவின் ஆட்சியிலிருந்து நாட்டை மீட்டுள்ளோம். வெறித்தனம், லஞ்சம், தரகுப்பணம் சூறையாடல், மது ஆகியவற்றை விடுத்து சிறந்த அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த நல்லாட்சி அரசு தலைமைத்துவத்தை ஏற்றிருக்கிறது. மகிந்த சிந்தனையின் அச்சுறுத்தல் இன்னும் இந்த நாட்டிலிருந்து முழுமையாக நீங்கவில்லை. அதனை நாங்கள் கீழ்ப்படுத்தியிருக்கின்றோம். உயிரிழந்தவரது ஆவியைப் போல, அது மீண்டும் எழும்பப் பார்க்கின்றது. இந்த அச்சுறுத்தலிலிருந்து நாட்டை காக்க வேண்டுமாயின் ஜனவரி 8 ஆம் திகதி ஒன்றிணைந்த 62 இலட்சம் பேரும் தொடர்ந்தும் சேர்ந்திருக்கவேண்டும். ஒன்றிணைந்து அந்த அச்சுறுத்தலுக்கு முடிவு கட்ட வேண்டும்.

மகிந்த சிந்தனை என்ற அச்சுறுத்தலையும், மோசடிக்காரரை மீண்டும் ஆட்சி பீடத்தில் அமர்த்துவதற்கான முயற்சியையும் தோற்கடிப்பதற்கு நாம் அணிதிரள வேண்டும். 2020ஆம் ஆண்டில் நடைபெறும் தேர்தலை வெற்றி கொள்ள வேண்டியது அவசியம். இந்த நாட்டை சுதந்திரக் கட்சி 20 வருடங்களாக ஆட்சி செய்தது.

இந்த ஆட்சிக் காலத்தின் இறுதி 10 வருடங்கள் மிகவும் கேடான காலமாக அமைந்திருந்தது. மீண்டும் அந்த கேடு நிறைந்த காலம் உருவாவதைத் தடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி 2020ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றி நாட்டை வழிநடத்தவேண்டும் - என்றார். (ற-ஐ-5)

# இலங்கையின் பொறுப்புக் கூறலில் பன்னாட்டுப் பங்களிப்பு அவசியமானது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்

ஜெனிவா, ஜூலை 1
"இலங்கையின் பொறுப்புக் கூறல் செயன் முறைக்கு பன்னாட்டுப் பங்களிப்பு அவசியமானது. இந்த விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தொடர்ந்தும் பற்றுதியுடன் இருக்கின்றார். இதனை வரவேற்கின்றோம்".

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில், இலங்கை தொடர்பான விடயம் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது. அங்கு அவர் உரையாற்றினார் என அந்தக் கட்சியால் அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை அரசின் நீதித்துறையானது நம்பகத் தன்மையற்றது என்பதால், சுயாதீனமானதும் பக்கசார்பற்றதுமான பொறுப்புக்கூறல் செயன்முறைக்கு பன்னாட்டுப் பங்களிப்பு அதியாவசியமானதொரு கடப்பாடு என்பதில், மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் இருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம்.

இலங்கை அரசால் இழைக்கப்பட்ட பெரும் குற்றங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாகிய தமிழர்களும், இதே காரணத்துக்காகவே பொறுப்புக்கூறல் செயன்முறைகள் உள்ளக ரீதியாக நிர்வகிக்கப்படுவதை நிராகரித்தும், பன்னாட்டுப் பொறுப்புக்கூறல் செயன் முறையின் அவசியத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்தியும் வருகிறார்கள்.

இருந்தபோதிலும், துரதிர்ஷ்டவசமாக இந்தச் சபையில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது, ஏறத்தாழ ஓர் உள்ளகப் பொறிமுறையை ஏற்படுத்தி, அதில் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஈடுபடுத்தப்படுவதை ஊக்குவிக்கின்றது என்று தெரிவித்து இருந்தது.

குறிப்பிடத்தக்க தளர்வுப் போக்கை இலங்கை அரசுக்கு, மனித உரிமைகள் சபை வெளிப்படையாகக் காட்டியிருந்தபோதிலும், இலங்கை அரசானது பொறுப்புக் கூறல் செயன் முறையின் மிக அடிப்படையான விடயத்திலிருந்து பின்வாங்கிச் செல்வதில் மிக முனைப்புடன் செயற்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள, பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டுப் பங்குபற்றல் தொடர்பாக இந்த அவைக்கு எவ்வாறான வாக்குறுதிகளை வழங்கினாலும், அரசில் அவரைவிடப் பொறுப்பும் அதிகாரமும்மிக்க ஜனாதிபதியும், பிரதமரும் இந்த அவைக்கு வெளிவிவகார அமைச்சரால் வழங்கப்படும் வாக்குறுதிகளை, தொடர்ச்சியாக நிராகரிக்கும் விதமாக பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டுப் பங்குபற்றல் இருக்காது என்ற வாக்குறுதியை, தமது வாக்கு வங்கியாகிய சிங்கள மக்களுக்குத் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகிறார்கள் என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும். இந்தச் செயற்பாடுகள், பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசின் அரசியல் விருப்பின்மையை தெட்டத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான தண்டனைகளில் இருந்து குற்றவாளிகளைத் தப்பவைக்கும் விடயத்தில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகள், உறுதியாக இருந்து வந்துள்ளன.

தமிழ் மக்கள், தமக்கு எதிராக இன அழிப்பு நடைபெற்றது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கும் நிலையில், பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டுப் பங்குபற்றல் என்ற அடிப்படை வாக்குறுதியிலிருந்து இலங்கை அரசானது விலகாதிருக்க, உறுப்பு நாடுகள் காத்திரமான நடவடிக்கை எடுக்கும்படி ஆணித்தரமாக வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ற-ஐ-5)

# தொழிற்பயிற்சி போதனாசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வடக்கு மாகாணத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில், போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அழகுக்கலை மற்றும் சிகையலங்கரிப்பவர், காய்ச்சி ஒட்டுபவர், மோட்டார் வாகன திருத்துநர், மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ திருத்துநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சமையலாளர், வெதுப்பக உற்பத்தியாளர், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துநர், கட்டட கைவினைஞர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. சாதாரண தரத்தில் ஓர் அமர்வில் தமிழ் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், குறித்த தொழிற்பயிற்சி கற்கை நெறியில் என்.வி.கியூ. மட்டம் 5 அல்லது அதற்கு மேலானதகைமையும், குறைந்தது ஒரு வருடம் உள்நாடு அல்லது வெளிநாட்டு அனுபவமும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி 18 வயது தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் உதவிக் கல்விப் பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, வீரசிங்கம் மண்டபம் (1ஆம் மாடி) இல.12 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 01.06.2016 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர் திருமதி
**லீலாவதி புஸ்பராசா**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியை (29.06.2016) புதன்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.07.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

14, குறோசெற் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 5947


# ஞாபகார்த்த பரிசளிப்பு விழா

அகில இலங்கை இந்துக்குருமார் அமைப்பும், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையும் இணைந்து நடத்தும் சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசுவாமி ஞாபகார்த்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெறும்.

அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெறும் விழாவில், இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தலைமை விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், கல்வி அமைச்சின் இந்து சமய [illegible] [illegible] ஆகியோர் கலந்துகொள்வர். (ற-ஐ-11)

# பள்ளிமுனையில் குடும்பஸ்தரை காணவில்லை

மன்னார், ஜூலை 1
மன்னார் - பள்ளிமுனையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை காணாமற்போயுள்ளார் என்று அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்டு காணாமற்போனவர், மன்னார் - பள்ளிமுனை தெற்கைச் சேர்ந்த 38 வயதுடையவர் என்றும் அவர் 3 பிள்ளைகளின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர் உயிலங்குளம் சென். பீற்றர் ஆலய பங்குப் பணிமனையில் கடமையாற்றி வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களுக்குக் காணி உறுதிகள்

## வடக்கு முதலமைச்சர், மீள்குடியேற்ற அமைச்சர் இணைந்து நேற்றுக் கையளித்தனர்

வவுனியா, ஜூலை 1

வவுனியா, சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களுக்கு காணி உறுதிகள் நேற்று வழங்கப்பட்டன.

காணிகளுக்கான நில அளவை மேற் கொள்ளப்பட்டு, பகிர்ந்தளிக்கப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர், உறுதி வழங்கும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வடக்கு அரசின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் கொழும்பு அரசின் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் சம்பிரதாயபூர்வமாக இந்த நிகழ்வில் பங்கெடுத்தனர்.

1992 ஆம் ஆண்டு, 1996ஆம் ஆண்டு காலப்பகுகளில் போரால் வவுனியா மக்கள் இடம்பெயர்ந்தனர். அவர்கள் சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்கினர். அது அரச காணி. தமக்குச் சொந்தக் காணி இல்லாததால் தாம் தங்கிய நலன்புரி நிலையத்திலேயே காணிகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டது. நலன்புரி நிலையக் காணி



நில அளவை செய்யப்பட்டு பங்கீடு செய்யப்பட்டது. தற்காலிக வீடுகள் மற்றும் மலசல கூடம் அமைப்பதற்கான உதவியும் வழங்கப்பட்டது.

காணி வழங்குவதற்கான நிகழ்வு மூன்று மாதங்களுக்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டது. வடக்கு அரசின் முதலமைச்சர் மற்றும் கொழும்பு அரசின் மீள்குடியேற்ற அமைச்சர் இருவரதும் ஒருங்கிணைந்த நேரத்தைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. அதனால் உறுதி வழங்கப்படவில்லை.

நேற்று இருவரினதும் ஒருமித்த நேரம் பெறப்பட்டு நிகழ்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வைத்து பத்துப் பேருக்கு உத்தியோகபூர்வமாக அமைச்சர் சுவாமிநாதன், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் காணி உறுதிகளை வழங்கினர். இவர்கள் சிதம்பரநகர் என்று அந்தக் கிராமத்துக்குச் சூட்டப்பட்ட பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்தனர்.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப் பினர்களான இ.இந்திரராசா, ம.தியாராசா, ஜெயதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-5-402)

### தேவார பண்ணிசை பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

அகில இலங்கை திருமறை மன்றத்தால் தேவார பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றன என்று மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

பயிற்சி வகுப்புக்களில் பாடசாலை ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மூத்தோர்கள் கலந்துகொள்ளலாம்.

பயிற்சி வகுப்புக்கள் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3.15 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியிலும், மாலை 4.30 மணி முதல் மாலை 6.15 மணி வரை யாழ். சிவத்தொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்திலும் நடைபெற்று வருகின்றன. (ற-ஜ-ரி)

### மழலைகளின் கலைச் சங்கமம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஆவரங்கால் நட்ராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் மழலைகளின்கலைச் சங்கம நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்துகொள்வார். (ற-ஜ-ரி)

## கழிவு மீள் சுழற்சியை ஆரம்பித்தது வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை

### நீர்வேலி தரவைப் பகுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வலி. கிழக்குப் பிரதேச சபையால் அகற்றப்படும் திண்மக் கழிவுகளை நீர்வேலி தரவைப் பகுதியில் வைத்துத் தரம் பிரித்து மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் அகற்றப்படும் திண்மக் கழிவுப் பொருள்கள் யாவற்றையும், நீர்வேலி தரவையில் கொட்டுவதற்கான இடமும் ஒதுக்கப்பட்டது. கழிவுப்பொருள்கள் அனைத்தும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களால் தரம் பிரிக்கப்பட்டு வருகின்றன.

உக்கும் திண்மக் கழிவுகளை நிலத்தில் புதைப்பதற்கு ஏற்ற நடவடிக்கையைப் பிரதேச சபை மேற்கொள்ளும் என்று சபையின் செயலாளர் தெரிவித்தார்.

தரம் பிரிக்கப்படும் கழிவுகளில் பிளாஸ்ரிக், கண்ணாடிகள், இரும்புகள் போன்றவை வேறாக்கி சேமிக்கப்படும். சபையால் முன்னெடுக்கப்படும் திண்மக் கழிவகற்றும் நடவடிக்கைகள் இனித் துரிதப்படுத்தப்படவுள்ளன.

கழிவுகளைக் கொட்டுவதற்காக இடவசதி ஒதுக்கப்பட்டுள்ளதால், கழிவுகளை அகற்றுவதில் உள்ள சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-17)

## கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினது சேமிப்பு மாதமாக ஜூலை அறிவிப்பு

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடமாகாண கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சேமிப்பு மாதமாக ஜூலை மாதம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடமாகாண கூட்டுறவு அமைச்சால் கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், மே மாதம் 15ஆம் திகதியில் இருந்து 100 நாள் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே, கூட்டுறவாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக, ஜூலை 1ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதி கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின்சேமிப்புமாதமாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாலும், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களாலும் வடக்கில் 69 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கிராமிய வங்கிகளால் பல்வேறு வகையான சேமிப்புத் திட்டங்கள் மற்றும் இலகு கடன் வசதிகள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றின் மூலம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வாடிக்கையாளர்கள் வடக்கில் பயன்பெற்று வருகின்றனர்.

கிராமிய வங்கிகளைக் கணினி மயப்படுத்தி, சேவைகளை விரிவுபடுத்தி வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனேயே ஜூலை மாதம் கிராமிய வங்கிகளின் சேமிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு வட மாகாண கூட்டுறவு அமைச்சாலும், கிராமிய வங்கிகளாலும் இந்த மாதத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ற-ஜ-5)

### தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் விருந்தோம்பல் கற்கை நெறிகள் மற்றும் ஏனைய கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர் ஆகிய கற்கை நெறிகளுக்கும் மற்றும் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக்கர மற்றும் ஒட்டோ திருத்துநர், அலுமினியப் பொருத்துநர், வீட்டு மின் இணைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகிய கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கவிரும்புவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் இல. 12 கே.கே.எஸ்.வீதி வீரசிங்கம் மண்டபம் 1 ஆம் மாடியில் அமைந்துள்ள, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் அல்லது வலந்தலை சந்தி காரைநகரில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். (ற-ஜ-ரி)

### விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஜூலை 1

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் உள்ளூர் மற்றும் புலம்பெயர் நாடுகளில் வதியும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் பங்களிப்புடன் விளையாட்டு விழா நடத்தப்படவுள்ளது.

பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் மற்றும் மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 6, 7 திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

விண்ணப்பங்கள் கழகங்களிடமிருந்தும், அதிபரின் பரிந்துரையுடனான மாணவர்களிடமிருந்தும் கோரப்பப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் தென்மராட்சி அபிவிருத்திக் கழகம், தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கழகச் செயலாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

சங்குவேலி மானிப்பாய் விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறும்.

முன்பள்ளி போசகர் தே.திருமுருகராஜன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொள்வார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைகளுக்கு எதிராக நேற்று கவனவீர்ப்புப் பேரணி


## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது




யாழ்ப்பாணம், ஜூலை 1
'சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி' என்னும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் பேரணி நடத்தப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பமான பேரணி, கன்னியர்மடம் வீதி வழியாக வேம்படிச் சந்தியை அடைந்து அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுர வீதியின் ஊடாக, யாழ்.ஆஸ்பத்திரி வீதியை அடைந்தது. அங்கிருந்து காங்கேசன்துறை வீதியைச்சென்றடைந்துபேரணி முற்றவெளியில் நிறைவடைந்தது.
மதகுருமார்களின் ஆசியுரைக்குப் பின்னர், சித்திரவதைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கருத்துரை வழங்கினார்.
மனித நேயத்தை உருவாக்குவோம், சித்திரவதைகளை முற்றாக ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் நாடகம் அரங்கேற்றினர்
மதத்தலைவர்கள், இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொலிஸார், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இலங்கையில் தொடர்ந்தும் சித்திரவதைகள் இடம்பெற்று வருகின்றது என்று பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்களும் அறிக்கையிட்டு வருகின்றன.
(ற-ஜ-5-101-106)

# பெயரளவில் மட்டுமே மும்மொழிக் கொள்கை

## நல்லாட்சி அரசிலும் தொடரும் அவலம்



யாழ்ப்பாணம், ஜூலை 1
மும்மொழிக் கொள்கை நல்லாட்சி அரசிலும் பெயரளவில் மாத்திரமே இருக்கின்றது. அரச அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்களுக்கு தனிச் சிங்கள மொழியிலேயே பதில் வழங்கப்படுகின்றது என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.
ஓய்வூதியம் பெற்றுக் கொண்ட ஒருவருக்கு, ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து தனிச் சிங்கள மொழியில் அமைந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தை 500 ரூபா பணம் செலுத்தியே அவர் மொழி பெயர்த்தார்.
மும்மொழிக் கொள்கை தொடர்பில் நல்லாட்சி அரசில் பேசப்படுகின்றதே தவிர செயலில் எதுவும் இல்லை என்று பாதிக்கப்பட்ட ஓய்வூதியர் தெரிவித்தார்.
"இந்த விடயம் மும்மொழிக் கொள்கைக்கும் தேசிய நல்லிணக்கத்துக்கும் குந்தகமானது. இவ்வாறு ஒரு சில திணைக்களங்களில் தற்போதும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இதனை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார். (ற-ஜ-5-101)

# ஆன்மிக விழிப்புணர்வு திட்டக்கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 1
ஆன்மிக விழிப்புணர்வுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலத்தில் நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்தது.
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இந்து மக்கள் மத்தியில் குறிப்பாக இளஞ்சிறார்கள் மத்தியில் இந்துசமயம் மற்றும் ஆன்மிகஒழுக்கவிழுமியங்கள் தொடர்பான கருத்துக்களை மேம்படுத்தல் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.
(ற-ஜ-ரி)

## பெருந்திருவிழா

ஆவரங்கால் சிவன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-ஜ-11)

## மின் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 1
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக, இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கீழ் குறிப்பிட்ட இடங்களில் மின்சாரம் தடைப்படும்.
யாழ். பிரதேசத்தில் கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில் பலாலி வீதி, கோண்டாவில் யாழ்.வீதி, மயிலங்காடு ஒரு பகுதி, புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குரும்பைசிட்டி, வசாவிளான், மஸ்கன் வீதி, விக்கிரமராட்சி பிறைவேற் லிமிட்டெட் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.
வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோயில், மாமடு சந்தியிலிருந்து பதவியாவரை, சி.இ.சி. கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

# பூட்டப்பட்ட வீட்டிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு



மன்னார், ஜூலை 1
மன்னார் எமில் நகர் கிராமத்தில் பூட்டப்பட்ட வீட்டில், தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் உடல் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
றொபட் பெரேரா (வயது-17) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.
இளைஞனின் தாய் வெளிநாட்டில் உள்ளார். தந்தை மற்றும் தம்பியுடன் பெரேரா வசித்து வந்தார். கடந்த முதலாம் திகதி தனது பிறந்த தினத்தையும் கொண்டாடினார். எழுத்தூர் பகுதியில் உள்ள கடை ஒன்றில் இவர் வேலை செய்தார்.
சில தினங்களுக்கு முன்னர் அவருக்கும், அவரது தந்தைக்கும் முரண்பாடு ஏற்பட்டது. அதன் பின் வீட்டைவிட்டு வெளியில் சென்றார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நண்பர்களுடன் இருந்து விட்டு மாலை ஜீவபுரம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் தங்கினார்.
குறித்த வீட்டுக்கு வந்த பின்பு எவருடனும் கதைக்கவில்லை. 4 நாள்களாக குறித்த இளைஞனை காணாத நிலையில் நண்பர்கள் நேற்றுமுன் தினம் காலை அந்த இளைஞனின் தந்தையிடம் கேட்டனர். என்னுடன் சண்டை போட்டான் கதைக்கவில்லை. எங்காவது நண்பர்களின் வீட்டுக்குப் போயிருப்பான். வருவான் என்று தந்தையார் கூறியுள்ளார் - என்று பொலிஸார் தெரிவித்தனர்.
4 நாள்களாகப் பூட்டப்பட்டுள்ள வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அயல் வீட்டார் நேற்றுமுன் தினம் காலையில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.
அங்கு சென்று பார்த்த போதே வீட்டினுள் தூக்கில் தொங்கிய நிலையில் - உருக்குலைந்த நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது. என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4,56)

# வெடிக்காத குண்டு மீட்பு

சாவகச்சேரி, ஜூலை 1
விவசாயம் செய்வதற்குத் துப்புரவு செய்த காணிக்குள் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று, சாவகச்சேரி டச்சு வீதி முருகமூர்த்தி கோவில் வீதியில் மீட்கப்பட்டது.
சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த நபரொருவர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து, சாவகச்சேரி பொலிஸார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பாதுகாப்பை ஏற்படுத்திய பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.
அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் யாழ். விசேட அதிரடிப் படையினர் மூலம் குண்டை மீட்டு செயலிழக்கச் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
இதனையடுத்து விசேட அதிரடிப் படையினர் குண்டை மீட்டு செயலிழக்கச் செய்தனர்.(ற-ஜ-9)

## இளைஞன் மீது தாக்குதல்

அளவெட்டி, ஜூலை 1
இளம் பெண்ணிடம் தொலைபேசி இலக்கம் கேட்டார் எனக் கூறப்படும் இளைஞன் பெண்ணின் சகோதரனால் தாக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் குப்பிளான் மடத்தடியில் அண்மையில் இடம் பெற்றது. குறித்த இளைஞன், தனது வீட்டுக்கு முன்னால் நின்றபோது, அங்கு வந்தவர் "எனது சகோதரியிடமா தொலைபேசி இலக்கம் கேட்டாய்" என்று தன்னைத் தாக்கினார் என்று தெரிவித்தார்.
தான் தொலைபேசி இலக்கம் யாரிடமும் கேட்கவில்லை எனவும் தாக்கப்பட்டவர் தெரிவித்தார். (ற-ஜ-36)

## சின்னம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1
நெல்லியடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் மூத்த மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் நடைபெறும்.
பாடசாலை அதிபர் க.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் அ.அரியரத்தினம் கலந்து கொள்வார். (ற-ஜ-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச, தனியார் பஸ் துறைகளிடையே குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 1
இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும், தனியார் போக்குவரத்துத் துறையினருக்கும் இடையே சுமுகமான உறவு உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அதைக் குழப்பும் நோக்குடன், திட்டமிட்டுச் செயற்படும் சிலரே, பஸ்கள் மீது கல்வீசித் தாக்குதல் மேற்கொள்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளை கண்டிக்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் தெரி வித்ததாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது கல் வீச்சு நடத்தப்பட்டது. அதில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவ்வாறான கீழ்த்தரமான செயல்களை எமது மாகாணத்தில் ஒருசிலரே முன்னெடுக்கின்றனர்.

> பதுங்கியிருந்து கல்வீசி விட்டு தலைமறைவாகுவது ஒரு கோழையின் செயற்பாடு. முதுகெலும்புள்ளவர்களாக இருந்தாலோ அல்லது தங்களது பக்கம் நியாயம் இருக்கும் பட்சத்திலோ நேருக்கு நேர் நின்று நியாயமான முறையிலே அதனை அடைய முற்பட வேண்டும்.

எமது மாகாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. பதுங்கியிருந்து கல்வீசி விட்டு தலைமறைவாகுவது ஒரு கோழையின் செயற்பாடு. முதுகெலும்புள்ளவர்களாக இருந்தாலோ அல்லது தங்களது பக்கம் நியாயம் இருக்கும் பட்சத்திலோ நேருக்கு நேர் நின்று நியாயமான முறையிலே அதனை அடைய முற்படவேண்டும்.

சம்பவங்களில் காயப்படுத்தப்படுகின்றவர்கள் உங்களது தந்தை, தாய், மனைவி, அல்லது பிள்ளைகளெனில் அதனை உங்களால் ஏற்றுக் கொள்ள முடியுமா?.

"திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற கூற்றுக்கு அமைவாக, இதனோடு தொடர்புபடுகின்றவர்கள், சற்று தூர நோக்கோடு சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

தற்போது இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறையினருக்கிடையில் ஓர் சுமுகமான உறவு ஏற்படும் இந்தத் தறுவாயில் இதனைக் குழப்ப வேண்டும் என்று ஒரு சிலர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர் என்று உணர முடிகின்றது.

இந்த விடயத்தில் பொலிஸார் அதிக கவனம் செலுத்த வேண்டும் – என்றுள்ளது. (ற-ஐ-5)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
நெல்லியடி மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் பாடசாலை அதிபர் க.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும்.

பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்கான பெற்றோர் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். பிள்ளைகளின் கல்வி, ஒழுக்க மேம்பாடு தொடர்பாகவும், விசேடமாக பிள்ளைகளை வழிப்படுத்துவதில் பெற்றோரின் பங்கு தொடர்பாகவும், "அஞ்சலியகம்" உள சமூக ஆற்றுப்படுத்தல் நிறுவனத்தின் இயக்குநர் வண பிதா செபஸ்ரியன் சிறப்புரை வழங்குவார். (ற-ஐ-35)

## திருக்குறள் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 1
கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கம் நடத்தும் 13ஆவது திருக்குறள் மாநாடு இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கருத்தரங்கும், திருவள்ளுவர் விழாவும், பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறும்.

காலை நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். கிளிநொச்சி தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் தலைமையில் நிகழ்வு நடைபெறும். பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும். தமிழ்ச் சங்கத்தின் தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொள்வார். (ற-ஐ-ரி)



கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்துக்கான மாடி கட்டடத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நாடா வெட்டி திறந்து வைத்தார். ஜப்பானிய அரசு மற்றும் ஜப்பான் மக்களின் நன்கொடை நிதி மூலம் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. (ற-ஐ-ரி3)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1
வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.(ற-ஐ)

★ ★ ★

வியாபாரி மூலை பத்திரகாளி அம்பாள் சமேத ஆதி வீரபத்திர சுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-ஐ-108)

★ ★ ★

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த் தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-ஐ-9)

## போசணை மாதத்தை முன்னிட்டு போட்டிப் பரீட்சை

தேசிய போசணை மாதத்தை முன்னிட்டுவடமராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்படும் அறிவு அளவீட்டு போட்டியின் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

"அழகாக இருப்பதற்கு அளவாக உண்போம்," என்ற தொனிப் பொருளில் ஜூன் மாதம் தேசிய போசாக்கு மாதமாக பிரகடனப் படுத்தப்பட்டது.

அதை முன்னிட்டு நடத்தப்படவுள்ள பரீட்சையில், வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் மேற்கொள்ள வேண்டும் என்றும் போசணை, சுகாதார மேம்பாடு, தொற்றா நோய்கள் சுற்றுப்புறச்சூழல் சுகாதாரம் ஆகிய பாடப்பரப்புக்களுக்குள் பரீட்சை இடம்பெறும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-ஐ-108)

# தமிழரின் பாரம்பரிய இசைக் கருவிகளை சிறார்களுக்கு பயிற்றுவிக்கவேண்டும்

## வடக்கு மாகாண உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 1
தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு இசைக் கருவிகளை சிறுவர்களுக்குப் பயிற்றுவித்து, எமது பண்பாட்டு விழுமியங்களை காக்க வேண்டும். தமிழ் மண்ணில் தமிழர் பண்பாட்டு இசைக் கருவிகளை வழங்கும் முன்னெடுப்பை நான் கடந்து மூன்றாண்டுகளாகச் செய்து வருகின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் சிவநகர் ஆதி கணபதி முன்பள்ளியில் அண்மையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுக்கு அவர் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். அங்கு கருத்துத் தெரிவிக்கும்பேதே இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும், ஐந்து மாணவர்களுக்கு சைக்கிளும் எனது 2016ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவு நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு மேலைத்தேய இசைக்கருவிகளை பெற்றுத் தரவேண்டும் என்று நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது. அது எனது கொள்கைக்கு முரணான கோரிக்கை.



தமிழ் மண்ணில், தமிழர் பண்பாட்டு இசைக் கருவிகளை வழங்கும் முன்னெடுப்பையே நான் கடந்து மூன்றாண்டுகளாக மேற்கொள்கின்றேன். தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு இன்னியம் இசைக் கருவிகளை சிறுவர்களிடத்தே பயிற்றுவித்து எமது பண்பாட்டு விழுமியங்களை காக்க வேண்டும். இது உங்களால் முடியாததல்ல. தமிழர்களுடைய இசைக் கருவிகளுக்காக ஒரு லட்சம் ரூபாவை எனது நிதியில்இருந்து ஒதுக்குகின்றேன் – என்றார்.

[illegible] பிரதேச செயலர் அணிருத்தனன், முன்பள்ளிகளின் ஆசிரியைகள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகள் அவசியம்

## பன்னாட்டுப் பிரதிநிதிகள் வலியுறுத்து

ஜெனிவா, ஜூலை 1
இலங்கை அரசு போர்க் குற்ற விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு நிச்சயம் உள்வாங்கப்பட வேண்டும்.
இவ்வாறு பன்னாட்டுப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

> இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கையை ஆணையாளர் ஹூசைன் சமர்ப்பித்தார். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பதிலளித்தார். இதன் பின்னர் ஒவ்வொரு நாடுகளினதும் பிரதிநிதிகள் தமது கருத்துக் களைத் தெரிவித்தனர்.

இலங்கையின் முன்னேற்றங்களை வரவேற்கின்றோம். பொறுப்புக்கூறும் பொறிமுறை அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். அதற்காக இலங்கை இன்னும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அதிகமாக உள்ளன. போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவது அவசியமானது.
இவ்வாறு அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஜப்பான் நாட்டுப் பிரதிநிதிகள் மனித உரிமைகள் சபையில் வலியுறுத்தினர்.
இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கையை ஆணையாளர் ஹூசைன் சமர்ப்பித்தார். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பதிலளித்தார். இதன் பின்னர் ஒவ்வொரு நாடுகளினதும் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.
ஆணையாளரின் வாய் மூல அறிக்கையை வரவேற்கிறோம். இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஊக்குவிக்கிறோம். நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் இலங்கை அரசை ஊக்குவிக்கிறோம். அரசமைப்பு மற்றும் காணாமற்போனோருக்கான அலுவலகம் அமைக்கப்பட்டமை, காணிகள் விடுவிக்கப்படுகின்றமை போன்றவற்றில் முன்னேற்றம் காணப்படுகின்றன. இன்னும் அதிகம் செய்ய வேண்டியுள்ளன. பொறுப்புக் கூறல் முறையானது சுயாதீனமாக இருக்க வேண்டும். அதில் அர்த்த முள்ள பன்னாட்டுப் பங்களிப்பும் அமைவதானது பாதிக்கப்பட்டவர்களை நம்பிக்கைக் கொள்ள செய்யும்- என்று கனேடியப் பிரதிநிதி தனது கருத்தைப் பதிவு செய்தார்.
இலங்கையின் உள்ளக விசாரணையின் பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பும் அவசியமானதாகும். இது மிகவும் முக்கியத்துவம் மிக்கது. ஜப்பான் இந்தச் செயற்பாட்டில் பங்கேற்பதற்காக சட்டத்தரணி ஒருவரை வழங்குவதற்கு தயாராக உள்ளது - என்று ஜப்பான் பிரதிநிதி தெரிவித்தார்.
இலங்கையில் தற்போது அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து, மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால், நீதி பொறிமுறையில் இன்னும் பல படிகள் பயணிக்க வேண்டியுள்ளது. இதற்கு தேவையான முழுமையான உதவிகளை செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம்- என்று அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்தார்.
இலங்கை அரசு மனித உரிமை பாதுகாப்பு, சிவில் சமூக பாதுகாப்பு என்பவற்றில் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளை பாராட்டுகிறோம். காணாமற்போனோர் விவகாரம் மற்றும் விசேட ஆணையாளர் விடயத்தில் இலங்கையின் அர்ப்பணிப்பை பாராட்டுகின்றோம். இலங்கையால் பிரேரணை நடைமுறைப்படுத்தலில் இன்னும் பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாட்டில் பன்னாட்டுப் பங்களிப்புப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்- என்று டென்மார்க் பிரதிநிதி தெரிவித்தார்.
கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை நடைமுறைப்படுத்துவதில் அரசு முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்களை வரவேற்கிறோம். கடந்த வாரம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் நோர்வே வந்திருந்த போது பல விடயங்களை பகிர்ந்து கொண்டார். தற்போது முன்னெடுக்கப்படும் புதிய அரசமைப்பு உருவாக்கமானது நல்லிணக்கத்தின் பல்லினத் தன்மையை அடையும் என்று நம்புகிறோம். அது மட்டுமன்றி உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கான பொறிமுறையில் பொதுநலவாய மற்றும் பன்னாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் பாதிக்கப்பட்டோரின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்று நோர்வே பிரதிநிதி தெரிவித்தார்.
அரசு மேற்கொண்ட முன்னேற்றத்தை வரவேற்கின்றோம். ஆனால், நல்லிணக்க செயற்பாடுகளின் விரைவான நடைமுறை அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்- என்று ஆஸ்திரேலிய பிதிநிதி தெரிவித்தார்.
இலங்கை பல முன்னேற்றங்களை வெளிக்காட்டியுள்ளது. இலங்கையின் பொறுப்புக் கூறல் பொறுமை செயற்பாட்டில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என்பதை வலியுறுத்துகின்றோம் - என்று நியூஸிலாந்துப் பிரதிநிதி தெரிவித்தார். (ந-ஐ-5)

# புதிய கட்சி விவகாரத்தில் பின்னடிக்கின்றார் மகிந்த

## தேசிய அமைப்பையே கட்டியெழுப்புவாராம்

கொழும்பு, ஜூலை 1
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எப்போது புதிய கட்சியை ஆரம்பிப்பார் என்ற கேள்வி பல மாதங்களாகவே அரசியல் களத்தை ஆக்கிரமித்துள்ளது.
தற்போது, தான் புதிய கட்சியை ஆரம்பிக்கப் போவதில்லை என்று அவர் திட்ட வட்டமாகக் தெரிவித்தார்.
கட்சிக்குப் பதிலாக புதியதொரு தேசிய அமைப்பைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.
இப்தார் நிகழ்வொன்றில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைமைப் பதவிகளை மகிந்த இழந்தார். அவர் புதியதொரு அரசியல் கட்சியை ஆரம்பிப்பார் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. அவரது சகாக்களும் இதற்கு வலுச் சேர்க்கும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டனர்.
தேசிய அமைப்பொன்றைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கும் என்று மகிந்த தற்போது கூறியுள்ளார். இந்த அமைப்பை ஆரம்பிப்பது குறித்த அறிவிப்பு கொழும்பில் வைத்து விரைவில் விடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
தேசிய அரசின் கடன் கொள்கை மீதும் அவர் சீற்றத்தை வெளிப்படுத்தினார். தனது அரசு பல வருடங்களில் பெற்ற கடனை இந்த அரசு 11 மாதங்களில் விஞ்சியுள்ளது என்று மகிந்த சுட்டிக்காட்டினார். (ந-ஐ-5)

# கோத்தாவுக்கான பாதுகாப்பை தொடர்வது குறித்து பரிசீலனை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 1
பாதுகாப்பு முன்னாள் செயலாளரான கோத்தபாய ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பை நீக்குவதா? அல்லது நீடிப்பதா? என்பது குறித்து பரிசீலிக்கப்படும்.
இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.
எனக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பு நீக்கப்படவுள்ளது என்று அறிய முடிகின்றது. பல்வேறு தரப்புகளால் எனது உயிருக்கு இன்னமும் அச்சுறுத்தல் உள்ளது. இராணுவப் பாதுகாப்பை நீடிக்குமாறு பாதுகாப்புச்செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்- என்று கோத்தபாய கூறியிருந்தார்.
பிரமுகர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்குவது என்ற நிலைப்பாட்டிலேயே அரசு உள்ளது. இருந்தாலும், முன்னாள் பாதுகாப்புச் செயலரின் கோரிக்கை பற்றி பரிசிலிக்கப்படும்–என்று இதுகுறித்துக்கருத்து வெளியிட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறினார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு முழுமையாக விலக்கப்பட்டு, தற்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ந-ஐ-5)

# எதிர்க்கட்சித் தலைவருக்கான வீடு தேடும் படலம் தொடர்கிறது

## அமைச்சர் கயந்த கருணாதிலக கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 1
எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு பொருத்தமான வீடு தேடும் படலம் தொடர்கிறது.
இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான கயந்த கருணா திலக தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டதா? எனக் கேள்வி எழுப்பினார்.
எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக [illegible] இவை [illegible] பதால் தனக்குப் பொருத்தமாக அமையாது. கீழ் தளம் உள்ள வீடே தனக்குத் தேவை எனக்கூறி, எதிர்க்கட்சித் தலைவர் அதை நிராகரித்து விட்டார். அவருக்காக வீடுதேடும் படலம் நடைபெற்று வருகின்றது.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கான உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிக்கும் [illegible] நிலையில் உள்ளன. விரைவில் முன்னாள் ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வ இல்லம் கையளிக்கப்படும் – என்று அமைச்சர் கயந்த கருணாதிலக பதிலளித்தார். (ந-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிப்பு எனில் அரசிடம் அறிவிக்கலாம்

வற் வரி அதிகரிப்பால் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக உணர்கின்றீர்களா? எந்தத் தயக்கமும் இன்றி அரசிடம் நீங்கள் அதனை அறிவிக்க முடியும்.
இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
அரசதகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அதிகரிக்கப்பட்டுள்ள வற் வரி குறித்து பொய்யான கருத்துக்கள் நாட்டில் பரவுகின்றன. வரி அதிகரிப்பால் சிறு வியாபாரிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பொய்யான செய்திகள் பரப் பப்படுகின்றன. அவை திட்டமிட்டுப் பரப்பப்படும் செய்திகளே தவிர அவற்றில் உண்மையில்லை.
நாம் சாதாரண மக்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வரியை அதிகரிக்கவில்லை. நாம் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆட்சியில் அமர்ந்துள்ளோம். வற் வரி அதிகரிப்பால் எவருக்கேனும் அநீதி இழைக்கப்பட்டிருந்தால், உடனடியாக அது தொடர்பாக அரசிடம் அறிவிக்க முடியும். அவ்வாறு அறிவிக்கும் பட்சத்தில் நாம் அது குறித்து நடவடிக்கை எடுப்போம் – என்றார். (ந-ஐ-5)

# இந்திய – இலங்கை மீனவர்கள் பேச்சு விரைவில் நடத்தப்படும்

## இந்திய நடுவண் அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

இலங்கை மற்றும் இந்திய மீனவர் பிரதிநிதிகளுக்கு இடையிலான நான்காம் கட்டப் பேச்சு இன்னமும் ஒரு மாத காலத்துக்குள் நடத்தப்படும். இவ்வாறு இந்திய நடுவண் அரசு அறிவித்துள்ளது.

> இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டுள்ள கச்சதீவை மீட்டுத் தர வேண்டும் என்று கோரப்பட்டது. இந்த விடயம் தொடர்பான விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், சுஷ்மா சுவராஜ் கருத்துத் தெரிவிக்கவில்லை

தமிழக மீனவப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்று தமிழக மீனவ சங்கப் பிரதிநிதிகள் கூறினர்.


அவர்கள் தெரிவித்ததாவது:

அண்மைய நாள்களாக இலங்கைக் கடற்படையால் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ள சுமார் 103 மீன்பிடி படகுகளையும் மோசமான நிலையில், பராமரிப்பின்றி இலங்கை அரசு வைத்துள்ளது.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் விடுதலைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். இலங்கை கையகப்படுத்தியுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது குறித்தும், அந்த நாட்டு அரசுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய – இலங்கை மீனவ பிரதிநிதிகள் பங்கேற்கும் நான்காம் கட்ட பேச்சை நடத்த ஒரு மாதத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றும் தெரிவித்ததாக அவர்கள் கூறினர்.

இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டுள்ள கச்சதீவை மீட்டுத் தர வேண்டும் என்று நாம் கோரினோம். இந்த விடயம் தொடர்பான விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், சுஷ்மா சுவராஜ் அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை – என்றனர். (ற-ஜ-5)



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துப் பேசினார். ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை, ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்க முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ற-ஜ-5)

# ஜப்பான் வாகனங்களின் விலை மீள அதிகரிக்கும்

ஜெனிவா, ஜூலை 1

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட வுள்ளன.

இவ்வாறு இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் யென்னின் பெறுமதி அதிகரிப்புடன், வாகனங்களின் விலைகளும் உயர்வடையும் என்று சங்கத்தின் தலைவர் மகிந்த சரத்சந்திர தெரிவித்தார்.

இலங்கை ரூபாவுடன் ஒப்பிடும்போது, ஜப்பான் யென்னின் பெறுமதி ஒன்று தசம் 45 வீதத்தால் உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கார், ஜீப் மற்றும் வான் போன்ற வாகனங்களின் விலைகள் 3 லட்சம் ரூபாவில் இருந்து நான்கு இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்படும் – என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் மகிந்த சரத்சந்திர தெரிவித்தார். (ற-ஜ-5)

# சகல பீடை கொல்லிகளினதும் இறக்குமதியைத் தடை செய்க

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை

கொழும்பு, ஜூலை 1

சகல வகைகளையும் சேர்ந்த பீடை கொல்லிகளை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன் படுத்தலை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தடை செய் யுங்கள் என்று ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.



நச்சுத்தன்மையற்ற உணவுகளை வழங்கி நாட்டு மக்களை சுகதேகிகளாக மாற்றுவதற்கு அரசு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

பீடைக் கொல்லி, கிருமிநாசினி மற்றும் இரசாயன பொருள்களை அதிகளவு பயன்படுத்துவதால் மக்களின் சுகாதார நிலமைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களின் ஆரோக்கியத்துக்குப் பாதிப்பாக அமையும் பீடைக்கொல்லியான கிளைபோசியேட்டை இறக் குமதி செய்வதை தடை செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கிளைபோசியேட் அமோனியம் என்ற இரசாயன பீடைக்கொல்லி பல்வேறு வர்த்தக நாமங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி, எல்லா வகையான முழுமையான பீடைக் கொல்லிகளினதும் இறக்குமதியைத் தடைசெய்யுங்கள் என்று ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். (ற-ஜ-5)

# வெலகெதரவுக்கு வழங்கப்பட்ட தண்டனை ஜனாதிபதியால் ரத்து

கொழும்பு, ஜூலை 1

கடற்படைத் தளபதியால் அமைக்கப்பட்ட இராணுவ நீதிமன்றால் குற்றவாளியாக இனம் காணப்பட்டு, பதவியிறக்கம் செய்யப்பட்ட, கடற்படைப் புலனாய்வு அதிகாரியான லெப்.கொமாண்டர் கே.சி.வெலகெதரவுக்கான தண்டனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரத்துச் செய்துள்ளார்.

கடற்படைத் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தாமல், வெளிநாடு சென்றமை, கடற்படையினரின் கடத்தல் தொடர்பான தகவல்களை வெளியிட்டமை போன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட லெப். கொமாண்டர் கே.சி.வெலகெதரவுக்கு எதிராக இராணுவ நீதிமன்று விசாரணை நடத்தியது.

அதில் குற்றவாளியாகக் காணப்பட்ட நிலையில், லெப்.கொமாண்டர் வெலகெதர நான்கு ஆண்டுகள் பதவியிறக்கம் செய்யப்பட்டார்.

அவர் ஆயுதப் படைகளின் பிரதம தளபதியான, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்திருந்தார். அதையடுத்து அவரது பதவியிறக்கம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கடற்படை பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதே குற்றச்சாட்டு லெப். யோசித ராஜபக்ச மீது சுமத்தப்பட்டுள்ளபோதிலும், அவருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படாதுள்ளமை குறித்து கடற்படைப் பேச்சாளரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

லெப்.கொமாண்டர் வெலகெதர மிக மூத்த அதிகாரி. லெப். யோசித ராஜபக்ச இளநிலை அதிகாரி. இவர்கள் இருவருக்குமான தண்டனைகள் சமமானவையல்ல.

கடற்படையில் பணியாற்றிய போது, யோசித ராஜபக்ச 74 தடவைகள் வெளிநாடு சென்றுள்ளார். 24 சந்தர்ப்பங்களில், முறையான அனுமதி பெறப்படவில்லை.

யோசித ராஜபக்சவுக்கு எதிராக தற்போது முன்னெடுக்கப்படும், நிதிக்குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் முடிவடைந்த பின்னர், கடற்படையின் விசாரணைகள் ஆரம்பமாகும்- என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார். (ற-ஜ-5)

# இலங்கையின் உள்விவகாரத்தில் வெளித் தலையீடுகள் வேண்டாம்

## வலியுறுத்துகின்றது ரஷ்யா

ஜெனிவா, ஜூலை 1

இலங்கையின் உள் விவகாரங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்போது, அதில் வெளியாரின் தலையீடுகள் இருக்கக் கூடாது.

இவ்வாறு ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விடயம் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டது. அதில் ரஷ்யா தனது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியது.

இலங்கையின் உள் விவகாரங்களில் வெளியாரின் தலையீடு இருக்கவே கூடாது என்று ரஷ்யப் பிரதிநிதி சபையில் குறிப்பிட்டார்.

விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் அவசியம் என்று ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். (ற-ஜ-5)

# மங்களவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது

## குணதாச அமரசேகர கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 1

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக வழக்குத்தாக்கல்செய்யப்படவுள்ளது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆணையாளரின் இலங்கைக்கு எதிரான தேசத்துரோக அறிக்கையை தயாரிப்பதற்கு மங்கள சமரவீரவே துணை நின்றுள்ளார்.

இது தேசத் துரோகம். இதனால் மங்கள சமரவுக்கு எதிராக நாட்டைக் காட்டிக் கொடுத்த குற்றச்சாட்டுக்காக வழக்குத் தொடரப்படவுள்ளது – என்றார். (ற-ஜ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஏய்க்காட்டும் போக்கு அரசுக்குத் தேவைதானா...?

இந்த நல்லாட்சி அரசில், எல்லாமே தலைகீழாக, சந்தர்ப்பத்தைப் பொறுத்துச் சட்டையை மாற்றிக் கொள்ளும் போக்காக மேலோங்கி வருகிறது. ஏற்கனவே வெளிப்படுத்திய கருத்து நிலைப்பாட்டை உள்ளே விழுங்கிவிட்டு, அதற்கு முற்றுமுழுக்க எதிர்மாறான ஒன்றை உயர்த்திப் பிடிப்பது, மிகமிகச் சர்வசாதாரணமாக உயர்ந்து, எழுந்து வருகிறது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளின்போது, அனைத்துலகப் பங்களிப்பை இலங்கை அரசு ஒருபோதும் உதாசீனம் செய்யாது என்று தேசத்தின் (உத்தியோகபூர்வ) வெளிவிவகார அமைச்சர், உறுதி அளித்த சில மணி நேரத்தில்--

அதனைத் தூக்கி எறிந்துவிட்டு--

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணை குறித்து அனைத்துலகத்தின் பங்களிப்பை நிராகரிக்கிறோம்--என்று அரசு சார்பில் உறுக்கிக் கூறப்பட்டுள்ளது!

இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பில் சுயாதீனத் தன்மை இல்லை என்று எவரும் கூறிவிட முடியாது.

புலம்பெயர் தமிழர்கள்தான், இலங்கையின் நீதித்துறை சுயாதீனமற்றது என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். அவர்களின் கருத்துக்கு நாம் இணங்க இயலாது.

எமது நீதித்துறையின் கீழேயே விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு. அதிலிருந்து, எந்தக் காரணம் கொண்டும் பின்வாங்க இயலாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, பிரதி அமைச்சர் ஒருவரும், இராஜாங்க அமைச்சர் ஒருவரும் இணைந்து, அடம் பிடித்த நிலையில், உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே என்று விளாசித் தள்ளி உள்ளனர்!!

உள்ளூர்ந்து நோக்கின், ஜனநாயகம் முழு அளவில் ஊன்றிப் பருத்துள்ள ஒரு நாட்டில், குறிப்பிட்ட ஒரு விடயத்தில், அமைச்சர் ஆக்க பூர்வமாகவும், பிரதி அமைச்சர்கள் அதற்கு நேர் எதிர்மறையாகவும் கருத்து வெளியிடும் போக்கு, இலங்கை நாட்டில் மட்டும் தான் வெளிச்சம் காட்டுகிறது.

அனைத்துலக மாநாடொன்றில் வைத்து, பொறுப்பு வாய்ந்த அமைச்சர் தெரிவித்த நிலைப்பாட்டை, கருத்தை, கபளீகரம் செய்து, தமது மனதில் பட்டதை வெளிப்படுத்தும் போக்கு, ஒரு ஜனநாயக விரோதச் செயற்பாடு என்று கொள்வதை விட, வேறு எந்த வகையில் விவரிக்க இயலும்.

அவ்வாறில்லையேல்--

நீ அடிப்பது போல் அடி; நான் அழுவது போல் நடித்து நாம் நினைத்ததை ஒப்பேற்றுவோம் என்று நல்லாட்சி அரசு நாடகம் ஆடுகிறதோ என்ற ஐயுறவும் எழுகிறது!

ஒட்டுமொத்தத்தில்--

உலக மாநாட்டில் வைத்து பொறுப்பு வாய்ந்த அமைச்சர் தெரிவித்த கருத்தை, பிரதி அமைச்சர்கள் வளம் திருப்புவது இலங்கை அரசின் கயமைத் தனமா அன்றி--அனைத்துலக நாடுகளை, அவர்களின் தலைமைகளை ஏமாற்றும் போக்கா...?

வினை விதைத்தால், அதனை அறுக்கத்தான் வேண்டும்.

இது வெறுமனே தமிழ் மக்களினது விவகாரம் என்று கணித்தால், நட்டம் நல்லாட்சி அரசுக்குத்தான் என்பதை மறந்துவிட வேண்டாமே!



இரா.பிரம்மா

இழந்த, பறித்தெடுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தொழில்நுட்பத்தை திருப்திகரமாக பயன்படுத்தும் மனித சமுதாயத்துடன் போட்டி போட்டு அவர்களைமுறியடிக்க இலங்கை இராணுவத்துக்கு இன்னமும் 60 ஆண்டுகள் தேவை. ஏனென்றால், இவர்கள் மக்களைத் தாக்கவும், அவர்களின் சாதாரண நடமாட்டத்தில் சந்தேகம் கொண்டு கைது செய்யவும், அப்பாவி மக்களைத் தேசியப் பாதுகாப்புக் கருதி கைது செய்து தமது பணி உயர்வை நிலை நிறுத்தும் நோக்கிலும் கூலிப்படைகளாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர், இவர்கள் உடலுக்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டு வெளியேறினாலும், வாழும் இயல்பு நிலை கொண்ட ஆரோக்கிய சமூகம், இராணுவ பிரசன்னத்துக்கு எதிராக உரிமைக் குரலெழுப்பியிருக்கும். தம் சிந்தனையை மாற்று வழிகளினூடாகப் பயன்படுத்தியிருக்கும். பயிற்சி பெற்று வெளியேறிய இராணுவம், தொழில்நுட்பத்தைக் கையாண்டு அதனூடாகத் தமது கட்டுப்பாடுகளை விதிக்க 60 வருடத்துக்கும் கூடிய கால அவகாசம் தேவை. அந்தவேளையில், இலங்கையில் புதிய குழந்தைகள் பிறந்து, வரலாற்றுச் சம்பவங்களைக் கற்றுக்கொண்டு, உரிமைக் குரல் எழுப்பத் தயாராகி விடுவார்கள். இதுதானே இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இலங்கையில் ஒருபுறம் படைப் பயிற்சி களைப் பெற்று இராணுவ ஆட்சிக்கு ஏதுநிலை தேடிக் கொண்டிருக்கும் நிலைப்பாடு நிலவுகிறது. மறுபுறத்தில் வடக்கு கிழக்கில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை அகற்றும் நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்படும் என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்திருந்தார். எதையாவது நிறைவேற்றும்படி கட்டளை இடப்பட்டால், அது நிறைவேற்றப்பட மாட்டாது அடுத்துவரும் சந்திப்புக்களில் குறித்த கட்டளை சார்பாகச் செயற்படுவோம்; அதைப் பற்றி யோசிக்கின்றோம்; வேலை நடக்க இருக்கின்றது. சட்டம் இயற்றிக்கொண்டிருக்கின்றோம், எனும் பதங்களைப் பயன்படுத்தி இராணுவ நிலைப் [illegible] [illegible] கிடைக்கும்? இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றங்கள் எதுவுமே செய்யவில்லை; அவர்களுக்கு எதுவுமே தெரிய வாய்ப்பில்லை. ஆனாலும், அந்த விசாரணைகளில் இருந்து இராணுவ வீரர்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது. இலங்கையின் தற்போதைய அரசுக்கு. அப்படியானால், இலங்கை இராணுவத்தினர் பயன்படுத்திய ஆயுதங் களையும் அவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்த அரச அனுமதி பெற்ற முகவர்களை யும் விசாரணை செய்யுங்கள். ஏனென்றால், இலங்கை இராணு வத்தினருக்கு அது பற்றி எதுவுமே தெரியாது. அவர்கள் தேசியப்படை வீரர்கள்; நாட்டிலே பயங்கரவாதத்தை ஒழித்துப் (அடி யோடு) பாராட்டுப் பெற்றவர்கள்.

### இராணுவத்துக்கு வக்காலத்து வாங்கும் போக்கு அகலவேண்டும்

இந்த எண்ணம் அகன்றால் தான், ஐ.நா. சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். பயங்கரவாதம் உலகத்தால் வெறுக்கப்பட்டு, இழந்த உரிமைகளை பெற்றுக் கொள்ள குரல் கொடுத்த அமைப்புக்கள்கூட பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. அரசுகள் திருப்திப் பட்டு வெளிநாட்டுறவைச் சரியான முறையில் பேணுவதற்காக இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இலங்கை அர சின் பொய்யுரைகளை நம்பி, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் இடம்பெறச் செய்தனர். நீங்கள் போடுங்கள், நாங்கள் பார்க்கின்றோம். போட்டார்கள்; பார்த்தார்கள். முடிவு, போர்க் குற்ற விசாரணை. ஆதாரங்கள் எல்லாம் தொழில்நுட்பத்தால் வளர்ச்சியடைந்த சமூகத்தின ரின் கைகளுக்குள் இருப்பதால் பெரும் திணறல் ஏற்பட்டுள்ளது.

ஆகவே உள்ளகப் பொறிமுறையிலான விசாரணையை வலியுறுத்தி வருகின்றனர். இலங்கையின் நீதித்துறைச் சுதந்திரம் பறித்தெடுக்கப்பட்டிருக்கின்றது. வலு வேறாக்கம் தெளிவாக இல்லை. இலங்கையின் நீதித்துறையின் பிரதம நீதியரசரில் இருந்து, அத்தனை நீதிபதிகளின் செயற்பாடுகளிலும் (நியமனம், சம்பளம், பதவி உயர்வு, இடமாற்றம், பணிநீக்கம்) நிர்வாகத்துறை நேரடியாக தலையீடு செய்யும் போது உள்ளக விசாரணையைஎவ்வாறுநம்பமுடியும்? எனவே தான் வலுவேறாக்கம் கொண்ட அல்லது நீதித்துறைச் சுதந்திரத்தைப் பெற்ற வெளிநாட்டு நீதித் துறையினரின் முன்னால் பகிரங்க விசாரணை வலியுறுத்தப்படுகின்றது. கொலைகாரனை நீதிபதியாக இருத்தி, அவனிடமே கொலை செய்யப்பட்ட தரப்பினர் நீதி கேட்டால், கொலையை நியாயப்படுத்துவான். எனவே நீதி கிடைக்குமா?

இலங்கையில் புதிதாகப் பயிற்சி பெற்ற படைச் சிப்பாய்கள் பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர், நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள், நாம் எமது வேலையைச் செய்கின்றோம் என்றவாறு. தமிழ் மக்கள், தாம் அடைந்த துன்பங்களுக்கும் அநீதிகளுக்கும் தீர்வு தேடித் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இலங்கை அரசு நல்லாட்சி எனும் கம்பளியைப் போர்த்திக் கொண்டு இராணுவ ஆட்சி நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஆக , இங்கே நடப்பது ஒரு ஜனநாயகப் படுகொலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தரப்பைப் பகைக்க விரும்பாது இரட்டை வேடம்போடும் நல்லாட்சி அரசு

உள்ளகப் பொறிமுறையூடான விசாரணை நடந்தால், தீர்வு இதோ; இலங்கை இராணுவத்தினர் தேசிய பாதுகாப்புக் கருதி தேசப்பற்றுடன் மேற்கொண்ட போர் நடவடிக்கையில் நிகழ்ந்த சம்பவங்களை, தேசியப் பாதுகாப்பு, எனும் விடயங்களுக்குள் பாரப்படுத்துகிறது இந்த மன்றம், அனைவரும் நாட்டின் நலன் கருதித்தான் அழிக்கப்பட்டனர் என இந்த மன்றம் தீர்ப்பளிக்கின்றது என்று சொல்வதைக் கேட்பதற்காகவா உள்ளகப் பொறிமுறை விசாரணை?

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நியாயப்படுத்த முயற்சி**

மேலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தொடர்ந்து வைத்திருக்க முடியாது என்று இலங்கை அரசுக்கு வலியுறுத்தப்பட்டிருந்தது. முன்னைய அரசின் வெற்றி விழா, பயங்கரவாதத்தை அடியோடு அழித்தோம் என்பதற்காக என்பதால் தற்போது அந்தச் சட்டத்தை நீக்க வேண்டும். ஆனால், "பயங்கரவாதம் பற்றிய சிந்தனை மீண்டும் காணப்படுகின்றது. எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கினால், மீண்டும் அது குறித்த சிந்தனை தலை தூக்கும்" என ஆட்சித் தரப்பால் தற்போது கூறப்படுகிறது. தற்போது உணர்ச்சிபூர்வமான தொழில்நுட்பத்தால் சமூகம் வளர்ச்சியடைந்து வருகின்றது. தகவல்களை இரகசியமாகப் பரிமாறி மீண்டும் போருக்குத் தயாராகலாம் என்பதால், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதே சட்டத்தைப் பகுதி பகுதிகளாக்க வேண்டிய நிலை. ஐ.நாவின் மனித உரிமைகள் சபையில் அதற்கு அரசு வாக்குறுதி அளித்திருப்பதால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி திணறிப் போயுள்ளார்.

பெயர்மாற்றம் செய்து மோதகத்தைக் கொழுக்கட்டை என மாற்றுவதுபோல, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைச் சற்று நீட்டி மூன்று பிரிவுகளாக வீக்கமடையச் செய்ய எண்ணுகின்றனர். அவையாவன:

1. தேசிய பாதுகாப்புச் சட்டம்,
2. அமைப்பு ரீதியான குற்றங்களைத் தடுக்கும் சட்டம்,
3. புலனாய்வுச் சட்டம் என்பவையாகும்.

இவற்றை இலங்கை இராணுவ நலச் சட்டப் பிரிவுகளாகக் கொள்ள வேண்டும்.

1. இலங்கையில் தீவிரவாதம் மீண்டும் தலையெ டுப்பதைத் தடுப்பதற்கும்,
2. சமூக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவும்,
3. சட்டத்தின் ஆட்சி மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும்,

பயங்கரவாதப் பதில் சட்டம் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது- என்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர். ஆனால், சமூக நல்லிணக்கத்தை போர்க் குற்றமிழைத்த இராணுவத்தால் ஏற்படுத்த முடியுமா? சமூகத்தின் சாதாரண இயக்கத்தில் மாறுதல் ஏற்பட்டால், நீதித்துறையை இறுதியாக நாடும்போது, நீதித்துறையின் செயற்பாடுகளுக்கு அப்பால் இராணுவத்தின் விசாரணை எதற்கு?. சட்டத்தின் ஆட்சியை (Rule of Law) இராணுவம் பயன்படுத்த முடியுமா?. சமூக நலன் கருதி மக்களின் நல்வாழ்வுக்காக சட்டங்களை மக்கள் பிரதிநிதிகள் சட்டத்துறையூடாக இயற்றி நடைமுறைப்படுத்தப்படும்போது ஜனநாயக ஆட்சியை மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால் இலங்கையில் நாடாளுமன்றத்தில் இராணுவ நலச்சட்டங்களை இயற்றி, அதனை எதிர்க்கும் மக்கள் பிரதிநிதிகளின் மீது பாய்ந்து அச்சப்படுத்தி, அடக்குமுறைக்குள் வைத்திருக்க ஆசைப்படுகின்ற னர். இங்கு எதிர்ப்பவர்கள் எதிர்க்க, இராணுவ நலன்பேண் சட்டங்கள் இயற்றப்படுகின்றன, நீதித்துறையின் செயற்பாட்டை நெருக்கடிக்குள்ளாக்கி, ஆட்சிப் பொறி முறையைக் கவிழ்த்துக் கொண்டிருக்கும் ஆபத்தான தன்மையை நாடி பிடித்துப்பார்க்கக்கூடியதாய் இருக்கின்றது.



**புறந்தள்ளப்படும் சட்ட ஆட்சித் தத்துவம்**

சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பது சட்டவாட்சியின் ஓர் தத்துவம். அப்படியானால், எந்தச் சட்டத்தின் முன் மக்கள் சமமானவர்களாக இருக்க வேண்டும்? இதனை மக்கள் சிந்திக்காதவரை, இராணுவ ஆட்சி வாழைப்பழத்தில் ஊசி ஏறியது போல இலகுவாக நடந்தேறும். தாம் கொண்டுவரும் சட்டங்களுக்கு முன் சகலரும் சமம் என்று கருதிக் கொண்டு இராணுவ மயப்படுத்தல் நடந்தேறுகிறது. குழந்தைகளில் இருந்து வளர்ந்தோர்வரை அச்ச நிலையில் வாழ்வது தெரிகின்றது. இலங்கை இராணுவம் என்றாலே பயம், பீதிதான். ஆனால் தட்டிக் கேட்க முடியாது.

ஏனென்றால் வாழும் உரிமை பறித்தெடுக்கப்பட்ட சட்டம். இராணுவத்தின் கையை மீறிச் செயற்பட்டால், நீ பயங்கரவாதி. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாய் செயற்பட்டுள்ளாய் என்ற குற்றச்சாட்டுக்கு உட்படும் வாய்ப்பே அதிகம். ஆகவே உன்னைச் சிறையில் அடைக்கின்றோம். சித்திரவதை செய்து புனர்வாழ்வு அளிக்க. எனவே இலங்கையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட பிரசைகளைக் கொண்ட நலிந்த அரசு என சர்வதேசம் சுட்டிக்காட்டி உதாரணப்படுத்த வேண்டுமானால், இராணுவ ஆட்சி நோக்கி நகர்த்த உள்ளகப் பொறிமுறை விசாரணையை மேற்கொண்டு உங்களை நீங்களே பார்த்து கேள்விகளைக் கேளுங்கள். ஆகவே முதுகிலே புண் இல்லாதவன், காடு நுழையப் பயப்படமாட்டான் என்பதற்குகொப்ப பாதிக்கப்பட்டோருக்காகக் குரல் கொடுப்போர், இலங்கை போர்க் குற்றவாளிகளை சர்வதேசத்தின் கண்காணிப்பில், வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடனான பகிரங்க விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள்.

ஆனால், இலங்கையில் புதிதாக பயிற்சி பெற்ற படைச் சிப்பாய்கள் பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். "நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள்; நாம் எமது வேலையைச் செய்கின்றோம்" என்றவாறு.

தமிழ் மக்கள், தாம் அடைந்த துன்பங்களுக்கும் அநீதிகளுக்கும் தீர்வு தேடி துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இலங்கை அரசு நல்லாட்சி எனும் கம்பளியைப் போர்த்திக் கொண்டு இராணுவ ஆட்சி நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஆக இங்கே நடப்பது ஒரு ஜனநாயகப் படுகொலை.

# இலவச மருத்துவ சிகிச்சையும் அத்தியாவசியத் தேவையே!

2008 ஆம் ஆண்டிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலையில், கண் கிளினிக்கில் குளுக்கோமா (GLAUCOMA) நோய்க்கு சிகிச்சை பெற்று வருகிறேன். நோய்க்கான மருந்துகளும் அங்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்தன.

இரு வகையான மருந்துகள் கண்ணுக்கு விடப் பரிந்துரை செய்யப்பட்டு இருப்பினும், அவற்றில் கண்ணுக்கு விடும் ஒரு வகை சொட்டுமருந்து (EYE DROPS) வைத்தியசாலையில் இல்லையெனக்கூறி வெளியில் தனியார் மருந்தகங்களில் வாங்கும் படி வைத்தியர்கள்கூறியதன் பேரில், ஒரு குப்பி 1,580 ரூபாவுக்கு வாங்கி உபயோகித்துவரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ( LUMIGAN BIMATOPROSTOPHTTHALMIC SOLUTION.) என்ற அந்தச் சொட்டு மருந்து ஒரு நாளுக்கு ஒரு தடவை இரவில் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டிய ஒன்று. இந்த மருந்தை வாங்கிப் பாவிக்க ஒருமாதத்துக்கு ஒருமுறை 1580 ரூபா செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்.

யாழ். மாவட்டத்திலிருந்தும், வன்னிப்பகுதியில் இருந்தும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் கண்கிளினிக்குக்கு வருகை தருகிறார்கள். அவர்களில் அனேகமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள். அவர்களால் குறிப்பிட்ட மருந்தை வாங்கப் பெரும் தொகை செலவு செய்ய முடியாது என்பது வெள்ளிடைமலை.

சகல வைத்தியசாலைகளிலும் எல்லா மருந்து வகைகளும் கையிருப்பில் உள்ளதாக மத்திய சுகாதார அமைச்சர் கூறியுள்ளதாக அண்மையில் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்தது. அப்படி ஏதாவது மருந்துக்குத் தட்டுப்பாடு இருப்பின், அயலில்உள்ள வைத்திய சாலைகளில் பெற்று நோயாளர்களுக்கு விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவை நடைமுறையில் உள்ளனவா என்பதுதான் மக்களின் ஆதங்கம்.

குளுச்கோமா கண் வருத்தத்துக்கு தகுந்த சிகிச்சை பெறாவிடில், கண் குருடாகப் போய்விட பெருமளவில் வாய்ப்புண்டு என்பது பலருக்குத் தெரியாது. எனவே மேற்குறிப்பிட்ட விடயம் குறித்து யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் உரிய அக்கறை செலுத்தி, நோயாளர்கள் நலன் காக்க ஆவன செய்ய வேண்டு மென்பது எனது வேண்டுகோள். அந்த வகையில் இந்த விடயம் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்குச் சமர்ப்பணம்.

இதனோடு தொடர்புடைய மற்றொரு செய்தி, கொழும்பில் உள்ள அரச மருந்துக் களஞ்சியங்களில் 10.1 பில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் பாவனைக்காலம் காலாவதியான நிலையில் தேங்கிக் கிடக்கின்றன என்பதாகும்.

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்ற விதத்தில், உரிய முகாமைத்துவம் இன்மையால் இத்தகைய சிரமங்களைத் தாம் எதிர்நோக்க நேர்ந்துள்ளதாக நோயாளர்கள் ஏங்குகின்றனர்.

கலாபூசணம் மு. மாசிலாமணி.


வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதக் குண்டுத் தாக்குதல் ஆப்கனில் 40 பேர் உயிரிழப்பு



காபூல், ஜூலை 1
ஆப்கன் தலைநகர் காபூலில் நேற்று நடத்தப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். பொலிஸ் வாகனத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு தலிபான் அமைப்பு உரிமை கோரியுள்ளது.
தாக்குதலால் பலர் காயமடைந்துள்ளனர் என்று பக்மன் மாகாண ஆளுநர் ஹஜி முகமத் தெரி வித்தார். இராணுவப் பயற்சி முடிந்து முடிந்து காபூலுக்குத் திரும்பிய சிப்பாய்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ற-ரி4)



சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக நடக்கும் உள்நாட்டுப் போரால் பாடசாலைகள் உ
மணிநேரங்கள் அரபு, ஆங்கிலம், கணிதம் மற்றும் சமய பாடங்கள் கற்பிக்கப்படுகின்ற

## தொடுதிரைக் கைபேசியை திருமணம் செய்த மனிதர்

நியூயோர்க், ஜூலை 1
அமெரிக்கர் ஒருவர் தன் தொடுதிரைக் கைபேசி மீது கொண்ட அதீத காதலால் அந்தக் கைபேசியையே கிறிஸ்தவ முறைப்படி திருமணம் செய்து கொண்டார். இந்தச் சம்பவம் தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
உயிரற்ற தொழில்நுட்ப சாதனங்கள் மீதான மனிதர்களின் ஈடுபாடு நாளுக்கு நாள் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அதிகரிக்கின்றது. அதற்குச் சமீபத்திய உதாரணமாக இந்தத் திருமணம் சுட்டிக்காட்டப்படுகின்றது. லாஸ் வேகாஸ் நகரத்தை சேர்ந்த கலைஞரும் இயக்குநருமான ஆரோன் சேர்வேனக், அண்மையில் லாஸ் வேகாஸ் நகரத்தில் தனது கைபேசியைத் திருமணம் செய்து கொண்டார். தேவாலயத்தில் நடந்த திருமண நிகழ்சியில் பாதிரியார் ஒருவர் திருமணத்தை நடத்தினார்.
கிறிஸ்தவ வழக்கப்படி பாதிரியார் ஆரோனிடம் "இந்த கைபேசியை சட்டப்படி உங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்கிறீர்களா? நீங்கள் இந்தக் கைபேசியை நேசிப்பீர்கள் என்றும், மரியாதை அளிப்பீர்கள் என்றும், ஆறுதலாக இருப்பீர்கள் என்றும் சத்தியம் செய்யத் தயாரா?"



என்று கேட்டுள்ளார். இதற்கு ஆரோன் "ஆமாம்" என்று பதில் அளித்துள்ளார். "மக்கள் தங்கள் தொடுதிரைக் கைபேசியை அதிகமாக நேசிக்கிறார்கள். காலை கண் விழிப்பதில் ஆரம்பித்து இரவு தூங்கச் செல்வது வரை தொடுதிரைக் கைபேசி கூடவே இருக்கிறது. என் தொடுதிரைக் கைபேசியுடன் எனக்கு நீண்ட நாள் உறவு உள்ளது. எனது கைபேசியுடன் உணர்ச்சிகரமான உறவைக் கொண்டுள்ளேன். எனக்கு ஆறுதலும், அமைதியும் அளிக்கும் வகையில் கைபேசி உள்ளது. இது கிட்டத்தட்ட ஒரு மனித உறவு போன்றதுதான்." என்று ஆரோன் கூறினார்.
எனினும் இந்தத் திருமணம் சட்டப்படி அங்கீகரிக்கப்படவில்லை. (ற)

## பலஸ்தீனம், இஸ்ரேல் பேச்சு

ஜெனிவா, ஜூலை 1
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடர் சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெறுகின்றது.
பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பேச்சு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவால் 2014 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டு தோல்வியில் முடிவடைந்த பேச்சு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாள்களுக்கான இருதரப்புப் பேச்சாக இது அமைந்தது.
பேச்சின்போது தமது தரப்பு நிலைப்பாட்டினை முன்வைத்த பலஸ்தீனிய சமாதானப் பேச்சாளர் "நாம் சமாதானப் பேச்சைக் கைவிடவில்லை, நாம் எவ்வாறு அதைத் தவிர்ப்பது? இஸ்ரேல், காசா, மற்றும் மேற்குக் கரை போன்ற பகுதிகளில் சுமார் 6 மில்லியனுக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் எங்கு போவது?" என்று குறிப்பிட்டுள்ளார்.
"ஜெருசலேம் இஸ்ரேலுக்கு சொந்தமான பகுதி என்றும், இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதலை பலஸ்தீனியர்கள் தொடரும் பட்சத்தில் தாமும் பதில் தாக்குதல்களில் ஈடுபட நிர்பந்திக்கப்படுகின்றோம்" என்றும் இஸ்ரேல் பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## ஐ.எஸ்.ச
## இந்திய

### 11 பேரை வளை

புதுடில்லி, ஜூலை 1
இந்தியாவின் ஹைதராபாத் நகரில் குண்டு வெடிப்புகள் நடத்தத் திட்டமிட்ட ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 11 பேர் கைது செய்யப்பட்டனர் என இந்திய தேசிய விசாரணை ஆணையம் தெரிவித்தது.
கைது செய்யப்பட்டவர்கள் சன நெருக்கடியான வணிக வளாகங்கள், மக்கள் கூடும் இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர். இந்து ஆலயங்களில் கலவரங்களைத் தூண்டவும் திட்டமிட்டனர். இந்து ஆலயங் களில் மாமிசங்களை வீசுவதன் மூலம் கலவரம் ஏற்படுத்தத் திட்டமிட்டனர்.
கைது செய்யப்பட்டவர்கள் பொலி



இந்திய சினிமாத்துறையில் இதுவரை இல்லாத அளவுக்கு திரைப்படம் ஒன்றுக்கு மிகப் பெரிய விளம்பர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. நடிகர் ரஜனிகாந் நடித்து வெளிவரவுள்ள கபாலி திரைப்படத்துக்கு விமானத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படத்தில் ஏயார் ஏசியா [illegible] முறையில் பங்கு வகிக்கின்றது. ஏயார் ஏசியா விமானத்தில் இந்த விளம்பரம் பதிக்கப்பட்டுள்ளது.(ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்திறன் கொண்ட வீதி

வொஷிங்டன், ஜூலை 1
உணர் திறன் கொண்ட வீதியை வடிவமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர் அமெரிக்கத் தம்பதியினர்.
ஸ்கொட், ஜூலி ஆகிய இருவரும் வீட்டின் முன்பாக மாதிரி வீதியை உருவாக்கியுள்ளனர். அறுகோணி சிறிய தகடுகளாக உறுதியான கண்ணாடியால் வீதி அமைக்கப்பட்டுள்ளது. கண்ணாடித் தகடுகளில் உணர்திறன் கருவி பொருத்தப்பட்டிருக்கும். நடமாட்டத்தின் போது ஒளி உருவாகக் கூடியதாக வடிமைக்கப்பட்டிருக்கும் இந்த வீதியால் விபத்துக்கள் தடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி4)







ள் உருக்குலைந்துள்ளன. கற்பித்தல் தற்போது குகைகளில் நடக்கின்றது. இட்லிப் மாநிலத்தில், ரம்லா கிராமத்தில் தினமும் 4
கின்றன. (ற-ரி4)

# லண்டன் சொத்துக்கு கடன் வழங்குவதை நிறுத்தியது சிங்கப்பூர் வங்கி

சிங்கப்பூர் சிற்றி, ஜூலை 1
சிங்கப்பூர் வங்கியான யு.ஓ.பி. லண்டன் சொத்துகளுக்கு கடன் கொடுப்பதை நிறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகியதை அடுத்தே இந்த அறிவிப்பை குறித்த வங்கி வெளியிட்டது.

பிரிட்டனில் நடந்த வாக்கெடுப்பு முடிவுகளை அடுத்து பிரிட்டனின் நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. சிங்கப்பூர் டொலர் மதிப்பு 10 சதவீதத்தால் அதிகரித்தது.

2015ஆம் ஆண்டு லண்டனில் சொத்துக்கள் கொள்வனவு செய்வதில் சிங்கப்பூர் மக்கள் முதலிடத்தைப் பிடித்தனர். தற்போதைய பொருளாதார நிலைமையைக் கொண்டு லண்டன் சொத்துகளுக்குக் கடன் வழங்குவது இடைநிறுத்தப்பட்டது என்று யு.ஓ.பி. வங்கி தெரிவித்தது.

(ற-ரி4)

# .அமைப்பின் திட்டம் யாவில் முறியடிப்பு

## ளைத்துப் பிடித்தது பொலிஸ்

ஸாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் பல மாதங்களாக இருந்தனர்.

அவர்கள் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக ஐ.எஸ். அமைப்பின் இந்தியாவுக்குப் பொறுப்பான அர்மாருடன் தொடர்பில் இருந்தனர்.

கடந்த மாத இறுதியில் அவர்களுக்கு வெடிகுண்டுகளின் அளவுகள், கலவரத்தைத் தூண்டுவதற்கான அறிவுறுத்தல்கள் தொலைபேசி ஊடாக வழங்கப்பட்டன.

அவை டுபாயில் இருந்து வழங்கப்பட்டன. உசாரடைந்த பொலிஸார் 11 பேரையும் வளைத்துப் பிடித்தனர்.

இந்தியாவில் ஐ.எஸ். அமைப்பின் வலைப்பின்னல் இயங்குகின்றது என்பது உறுதியாகியது. கைது செய்யப்பட்டவர்கள் 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட வர்கள். பட்டதாரிகள், கணினிப் பொறியியலாளர்கள் என அனைவரும் சிறப்பான வேலையில் உள்ளனர். அவர்களின் குடும்பப் பின்னணிகளும் சிறப்பாக உள்ளன – என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 15 லட்சம் ரூபா (இந்திய நாணய மதிப்பு) பணம் கைப்பற்றப்பட்டது. வெடிபொருள் வாங்குவதற்காக இந்தப் பணத்தை அவர்கள் வைத்திருந் திருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகின்றது.

(ற-ரி4)



# சிரித்தவாறு இறந்த கன்னியாஸ்திரி

லண்டன், ஜூலை 1
ஆர்ஜென்ரீனாவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரி ஒருவர் சிரித்துக் கொண்டே இறந்துள்ளார். அந்தப் படங்கள் இணையத் தளங்களில் வேகமாகப் பரவி வருகின்றன. கன்னியாஸ்திரியான சிசிலியா மரியா (வயது–43) கடந்த 6 மாதங்களாக நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் தன் நோய் பற்றிக் கவலை கொள்ளாது இறை ஊழியத்தில் ஈடுபட்டார்.

சில நாள்களுக்கு முன்னர் அவரின் உடல் நிலை மோசமானது. சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். உயிரிழக்கும்போது 'அனைவரும் அன்பைப் பகிருங்கள்' என்று எழுதி வைத்துவிட்டு சிரித்தவாறு இறந்தார். அவர் இறந்தபின்னரும் பல மணி நேரம் உதடுகள் சிரித்தவாறே இருந்தன. அந்தப் படங்கள் தற்போது இணையத்தளத்தில் வேகமாகப் பரவி வருகின்றன. (ற-ரி4)



# சோமாலியாவில் குண்டுத் தாக்குதல் 18 பேர் சாவு

மொகடிசு, ஜூலை 1
சோமாலியாவின் லபோல் நகரில் நேற்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர். மினி வான் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வீதியில் குண்டு புதைக்கப்பட்டு தூர இருந்து இயக்கும் கருவி மூலம் வெடிக்க வைக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். படையினரின் வாகனத்தை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

தாக்குத லுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை. அண்மைக்காலமாக சோமாலியாவில் அல்–பாப் அமைப்பு இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. (ற-ரி4)



# மும்பையில் தீ விபத்த எண்மர் கருகிச் சாவ

மும்பை, ஜூலை 1
இந்தியாவின் மும்பை நகரில் நேற் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரே குடும்பத் சேர்ந்த 8 பேர் உயிரிழந்தனர். இறந்த களில் 5 பேர் சிறுவர்கள், 3 பேர் பெண்க ஜாகு – காலி பகுதியில் உள்ள குடியிருப் 2ஆவது மாடியில் தீ ஏற்பட்டது. வீட் கீழ்ப் பகுதி மருத்துப் பொருள்களி களஞ்சியமாகும். விபத்து காலை 6 மணி நடந்தது. வீட்டில் இருந்த அனைவ உறக்கத்தில் இருந்தனர். அதனால் தப்பி முடியவில்லை. தீயணைப்பு வீரர்கள் மணி நேரப் போராட்டத்துக்குப் பின் தீயைக் கட்டுப்படுத்தினர். விபத்துக்கா காரணம் அறியப்படவில்லை. (ற-ரி

# தி; தயாரிப்பில் அமெ. தம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் 9 பலன்கள்

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 9 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

இயற்கையிலேயே துடிப்பும், வேகமும் கொண்ட 9 எண்காரர்களின் சிறப்பு இயல்புகளை இங்கு விவரமாகப் பார்ப்போம். இந்த எண்ணின் கடவுள் முருகப் பெருமான். அவரே தேவர்களுக்குச் சேனாதிபதியாவார். எனவே சேனாதிபதிக்குள்ள கட்டுப்பாடும், திறமையும், சவால்களைத் துணிந்து எதிர்கொள்ளும் தன்மையும் இவர்களுக்கு உண்டு. குருதியைப் பார்த்து இவர்கள் பயப்பட மாட்டார்கள். தெருச்சண்டை, போர்க்களம் போன்ற இடங்களில் இவர்களைப் பார்க்கலாம். மேலும் அதிகாரமுள்ள காவல்துறை, இராணுவம் ஆகிய தொழிலில் மிகவும் விருப்பம் உடையவர்கள் இவர்கள்தான். மற்றவர்கள் பயப்படும் காரியங்களைத் துணிந்து ஏற்றுக் கொள்வார்கள். துணிவே துணை என்று நடைபோடுவார்கள்.

இவர்களுக்கு முன்கோபமும் படபடப்பும் உண்டு. உடலும் சற்றுமுறுக்கேறி நிற்கும். நான்கு எண்காரர்களைப் போல் இவர்களுக்குக் கோபம், ரோசம், தன்மானம் ஆகிய மூன்று குணங்களும் நிறைந்திருக்கும். எனவே இவர்களுக்கு எதிர்ப்பு இருந்து கொண்டே இருக்கும். இவர்கள் எந்தத் தொழிலிலும், பதவியிலும், நிர்வாகத்திலும் வல்லவர்கள். இவர்கள் ஓரளவு ஒல்லியானவர்களே. ஆண்களில் பெரும்பாலோர் மீசை வளர்ப்பதில் விருப்பம் உடையவர்கள். நாவன்மை மிகுந்தவர்கள். இவர்களில் அதிர்ஷ்டசாலிகள் மேன்மேலும் அதிர்ஷ்டசாலிகளாகவும், துரதிர்ஷ்டசாலிகள் தொடர்ந்து துரதிர்ஷ்டசாலிகளாகவும் இருப்பார்கள். இந்த எண்காரர்களுக்கு உடலில் அடிக்கடி காயங்கள், விபத்துக்கள் போன்றவை ஏற்படும். ஆயினும் அதைக் கண்டு பயப்படமாட்டார்கள். 9 ஆம் எண்ணில் பிறந்தவர்களின் பெயர்கள் 8 ஆம் எண்ணில் மட்டும் இருந்து விட்டால் தற்கொலை முயற்சிகளும், வாகனங்களால் விபத்தும் உண்டு.

இந்தச் செவ்வாய்க்கிரக ஆதிக்கத்தால் சைக்கிள், மோட்டார் சைக்கிள், நீச்சல் போட்டிகள், மிருகவேட்டை, உடற்பயிற்சிகள் ஆகியவற்றில் மிகவும் விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள். சாகச விளையாட்டுக்களில் விருப்பத்துடன் ஈடுபடுபவர்கள் இவர்கள்தான். கார், சைக்கிள், பஸ் ஆகியவற்றை மிகவும் வேகமாக ஓட்டுபவர்கள் இவர்கள்தான்.

இவர்கள் எதற்கும், எப்போதும் பயப்பட மாட்டார்கள். மேலும், தங்களது நோக்கத்துக்காகக் கடுமையான உழைக்கவும் தயங்க மாட்டார்கள். இவர்கள் எப்போதும் அலைபாயும் மனத்தை உடையவர்களாக இருப்பார்கள். இறைவன் இவர்களின் மனத்தை அமைதியாக வைத்திருக்க அனுமதிப்பதில்லைபோலும். இவர்கள் நடப்பதில் மிகவும் பிரியமுடையவர்கள். இவர்களுக்கு என்ன தான் வசதியிருப்பினும் கால் தேய நடந்து செல்வதில் இவர்களுக்கு விருப் பம் அதிகம். எந்த ஒரு அரச அலுவலகத்திலும், தனியார் ஸ்தாபனங்களிலும் தலைமைப்பதவியிலிருந்து இவர்கள் நன்கு புகழ் பெறுவார்கள். இவர்கள் உழைப்பதில் சுகம் காண்பார்கள். சோம்பலை இவர்கள் வெறுப்பவர்கள். ஊர் சுற்றுவதிலும் அலாதிப் பிரியம் உடையவர்கள்.

நடுவீதியில் ஒரு நோஞ்சானை ரௌடி ஒருவன் தாக்கினால் அதைக் கண்டு பொறுக்காமல், அந்த முரடனுடன் தைரியமாகச் சென்று சண்டையிடுபவர்கள் இவர்கள்தான். சிறு வயதுகளில் மிகவும் சிரமப் பட்டாலும், தங்களது மனஉறுதியாலும், விடாமுயற்சியினாலும், இவர்கள் எப்படியும் பிற்காலத்தில் முன்னேறி விடுவார்கள்.

இவர்கள் சுதந்திரப் போக்கு உடையவர்கள், அவசரக்காரர்கள், உணர்ச்சிமயமானவர்கள், பிடிவாத குணம் இயற்கையிலேயே உண்டு. ஆபத்து மிகுந்த தொழிலில் இறங்கி விடுவார்கள். அதில் வெற்றியும் பெறுவார்கள். இவர்களின் சண்டைக் குணத்தால், குடும்பத்தில் அடிக்கடி குடும்பப் பிரச்சினைகள் ஏற்படும். தங்களை எல்லோரும் மதிக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற நினைப்பு இவர்களுக்கு எப்போதும் உண்டு. எந்த நிர்வாகத்திலும் தலைமைப் பதவி அல்லது பொறுப்புக்கள் கிடைத்தால்தான், இவர்கள் அவற்றில் மிகவும் தீவிரமாகவும், சிறப்பாகவும் ஈடுபட்டு, அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பார்கள்.

# தலைவிரிகோலம் இனியும் வேண்டுமா?

திரேதா யுகத்தில் கைகேயி தலை விரித்ததால் இராமனுக்கும் இராவணனுக்குமிடையே பெரிய போர் நடந்து, அரக்கர்குலம் அழிந்தது. துவாபரயுகத்தில் பத்தினிப் பெண் பாஞ்சாலி விரித்த கூந்தலால் குருஷேத்திரப் போர் மூண்டு கௌரவர்கள் அழிந்தனர். கற்புக்கரசி கண்ணகி விரித்த கூந்தலால் மதுரை மாநகரமே எரிந்து அழிந்தது. ஆனால் கலியுகமாகிய இன்று-எமது யாழ்.மண்ணில் வாழும் பெண்குலத்தினர் தலைவிரிகோலத்துடன் உலா வருகின்றனர். எண்பது வயதுப் பாட்டி தொடக்கம் எட்டுவயதுப் பூட்டி வரை தலைவிரி கோலம் தான். இதனால் எமது மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் இயற்கை இடர்கள், மனித அச்சுறுத்தல்கள் என்பவற்றைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.



ஆலய நிர்வாக அறங்காவலர் சபையினர் வழிபட வருவோர் தலைமுடிகளை முடிந்து அல்லது பின்னிவருமாறு அறிவுறுத்தல் விடுக்கின்றனர். உண்மையில் இது தேவைதானா? எமது சைவப் பண்பாடு எங்கே போய்விட்டது என்பதை எண்ணி வெட்கித் தலைகுனியவைக்கின்றது. ஆலயங்களில் முடி உதிர்வது தவிர்க்கப்பட வேண் டிய செயற்பாடு என்பதைக் காலம் காலமாக அறிகின்றோம். கர்ப்பூரச் சட்டி எரிப்போர், பால்குடம் ஏந்திச் செல்வோர் என [illegible] மாகவே [illegible]. அன்றைய நாள்களில் பெண் பிள்ளைகள் தலை வாரிப் பின்னிப் பூமாலை சூடி காலில் கொலுசு அணிந்து அழகுப் பாவைகளாக வலம் வந்த காட்சியையும் இன்று தலைவிரி கோலத்தில் பூமாலை சூடி அலங்கோலமாக உலா வருவதையும் எண்ணும்போது எமது தமிழ் கலாசாரத்தின் விழுமியப் பண்பு எங்கே போய் வீழப் போகின்றது என எண்ணத் தோன்றுகின்றது.

பஸ்களில் பிரயாணம் செய்யும்போது விரிந்து பறந்து கொண்டிருக்கும் இந்த முடிகளால் பிரயாணம் செய்யும் பயணிகள் அனு பவிக்கும் அசௌகரியங் களை சம்பந்தப்படுவோர் உணர்வதில்லை. கண், வாய், முகம் எல்லாம் உரசுவதால் அவஸ்தைப்படுவோர் பலரைக்காணலாம். திருமண நிகழ்வு மிகவும் பவித்திரமானதாகவும் மங்கலகரமாகவும் நடைபெறுவது வழமை. அந்த மண மேடையில் மணப் பெண்ணின் தோழி உட்பட மணமேடையில் பவனி வருவோரில் பெரும்பாலானோர் தலை விரிகோலம்தான்.

சம்பந்தப்பட்ட நிகழ்வில் பங்குபற்றும் மூத்த உறுப்பினர்கள் இத்தகைய கலாசாரப் பிறழ்வுகளைத் திருத்த முன்வரவேண்டும். மூத்த உறுப்பினர்கள் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி, இளம் சமூகத்தினரையும் அதன் வழிவாழவகைசெய்யும்பணியை மேற்கொள்ள வேண்டும். வள்ளுவர் குறளில் 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' என்று கூறப்பட்டுள்ளது. எமது இளம்பிள்ளைகள் விழுமியப் பண்புகளை மதித்து கலாசாரச் சீரழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சங்கற்பம் பூணுவோம்.

உதயன் வாசகி


அன்றைய நாள்களில் பெண் பிள்ளைகள் தலை வாரிப் பின்னிப் பூமாலை சூடி காலில் கொலுசு அணிந்து அழகுப் பாவைகளாக வலம் வந்த காட்சியையும், இன்று தலைவிரி கோலத்தில் பூமாலை சூடி அலங்கோலமாக உலா வருவதையும் எண்ணும் போது, எமது தமிழ் கலாசாரத்தின் விழுமியப் பண்பு எங்கே போய் வீழப் போகின்றது என எண்ணத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வன்முறையும்

# முதியவர்களைப் பேணாமையும்

சி.நற்குணலிங்கம்



இல்லத்து வன்முறை அல்லது குடும்ப வன்முறைஎன்பதுமேலோட்டமாக நெருக்கமுறையான உறவுக்குட்பட்ட ஒருவரினாலோ அல்லது இருவரினாலோ நிகழ்த்தப்படுகின்ற துன்புறுத்தலான ஒரு நடத்தைப்போக்கு எனலாம். பெண்களுக்கெதிராக பிரதானமாக ஆண்களினால் நிகழ்த்தப்படும் அதிகார துன்புறுத்தலாக இல்லத்து வன்முறை பரவலாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

சமூக விஞ்ஞானிகளின் அண்மைக் கால ஆய்வுகளின்படி வீட்டினுள் இடம்பெறும் வன்முறை நடவடிக்கைகளி



னால் அதிகமாகப்பெண்களும்பிள்ளைகளுமே பாதிக்கப்படுகின்றனர் என்பதாகும். ஒரு குடும்பச் சூழலில் ஒரு திறத்தவர் மற்றுமோர் திறத்தவர் மீது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் விதிக்கும்போது குடும்ப வன்முறை தோன்றுகின்றது. இல்லத்து வன்முறை என்பது ஒரு பாரதூரமான குற்றமாகும்.

இல்லத்தில் நாம் காணும் வன்முறை கள் பல. வீட்டில் உரக்கக்கத்தி அவ யாதை செய்தல், குடும்பத் துணைவ குப் பணம் கொடுக்காமை, உழை கும் பணம் முழுவதையும் குடும் துணைவர் எடுத்துக் கொள்ளல், துணை வரால் பாலியல் கொடுமை, அடித்த மற்றும் துன்புறுத்தல், சட்டபூர்வமற் கருக்கலைப்புப் பயமுறுத்த வார்த்தைகளால் துன்புறுத்தல், உதை தல், கடித்தல், தள்ளுதல், குறை பிரசவத்தை ஏற்படுத்தல், தற்கொலை செய்யத் தூண்டுதல், சாதாரண காயம் ஏற்படுத்தல், படு காயமே படுத்தல், முறையின்றித் தடுத்து வை தல், பிள்ளைகளைக் கொடு மை படுத்தல், பலாத்காரம் பிரயோகித்த ஆள் கடத்தல், கொடூரமா

மனிதாபிமானமற்ற கீழத்தரமான அல்லது இழிவுபடுத்தும் நடத்தை, ஆக்ரோசமாகத் திட்டித் தீர்ப்பது, தடுக்கப்பட்ட உறவு முறையுடன் தகாத உறவு கொள்ளல் என்பன இல்லத்து வன்முறைகளாகக் கருதப்படுகின்றன. நான்கு பெண்களுக்கு ஒருவர் தமது வாழ்நாளில் இல்லத்து வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

சிறுபராயத்தில் இல்லத்து வன்முறைகளுக்கு உள்ளான பிள்ளை பிற்காலத்தில் குற்றச்செயல் புரிபவராக வளர்வதற்கு உரிய வாய்ப்புக்கள் அதிகமாகும் என்பது தெரியவருகின்றது. அவ்வாறான பிள்ளைகள் பெரியவர்களானதும் சமூகத்தில் உள்ள ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்றபோது பல்வேறுவகையான பிரச்சினைகளையும் பிணக்குகளையும் ஏற்படுத்திக்கொள்வதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களைப் பிள்ளைகள்தான் பராமரிக்க வேண்டும். நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்க்க எவ்வளவு கஷ்டப்படுகின்றீர்கள்? உங்கள் பிள்ளைகளால் எவ்வளவு துன்பப்படுகின்றீர்கள்? அதே கஷ்டம் அதே துன்பம் உங்கள் பெற்றோர்க்கும் ஏற்பட்டிருக்கும் என்பதை மனதில் சற்று நிறுத்திப் பாருங்கள். நீங்கள் உங்கள் பெற்றோரை கவனிக்காது விடுவீர்களானால் உங்களைப் பார்த்து உங்கள் பிள்ளைகளும் உங்களது வயதான காலத்தில் அந்தவிதமே நடக்க முனைவர். உங்கள் எதிர் காலத்தை நினைத்தவாறு உங்களது முதிய பெற்றோர்களை மரியாதையாக நடத்திக் கொள்ளுங்கள்.

முதுமையிலும் மிகவும் கொடியது என்ன தெரியுமா? அது தான் முதுமையில் ஏற்படும் இயலாமை. அதாவது வயதான காலத்தில் தனது தேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்திருப்பது. வேகமான வாழ்க்கைமுறை, நவீன கலாசாரமோகம், பிள்ளைகள் வேலைக்குச் செல்லல், பெற்றோரை சொந்த நாட்டில் விட்டுவிட்டு பிள்ளைகள் வெளிநாடு செல்லல், பெற்றோரைப் பராமரிப்பதில் மகன் - மருமகள், மகள் - மருமகன் என்போருக்கிடையிலான முரண்பாடுகள் போன்ற காரணிகளால் முதிய பெற்றோர் அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும் பாசத்துக்காகவும் ஏங்குகிறார்கள்.

இந்த அதிகரிக்கும் முதியோர் ஏக் கங்களுக்கு உண்மையில் முதியோர் இல்லங்கள் தீர்வல்ல. மூத்தோர் சமூகத்தில் வைத்து பிள்ளைகளால் அல்லது உறவுகளால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டியவர்கள். எல்லோருக்கும் பல பிரச்சினைகள் இருக்கலாம். வாழ்வுச் சிக்கல்கள் இருக்கலாம். எதுவானாலும் அவற்றைச் சகித்து, சமாளித்து முதியோரைக் கவனிக்க வேண்டும். முதியோரின் இறுதிக் காலத்தை அவமாக்கி அவர்களைச் சாவை நோக்கி விரைவுபடுத்த வேண்டுமா?

சமூகத்தில் மூத்த பிரசைகள் சிலர் பணத்தை வைத்துக்கொண்டு ஒரு நேர உணவைக்கூட வாங்கி உண்ண முடியாமல் இருக்கின்றார்கள். அந்த உணவை நம்பிக்கையுடனும் அன்புடனும் பரிமாறிக் கொள்வதற்கோ அல்லது உரிய வேளைகளில் குளிப்பாட்டி, உடைகளைத் தோய்த்து உலர்த்திக் கொடுப்பதற்கோ இன்று மனிதர்கள் இல்லாது போய்விட்டார்கள். முதுமையில் கொடுமை தனிமை என்பார்கள். தனிமையை இவருக்குக் கொடுத்து விட்டுப் பிள்ளைகள் சொந்த நாட்டிலும் வெளிநாடுகளிலும் சுகமாக வாழ்கிறார்கள். வெளிநாட்டில் உள்ள பிள்ளைகள் பணத்தை மட்டும் அனுப்பலாம். அது முதியோர் இல்லங்களில் இருப்பவர்களுக்கு சாதகமாக அமையலாம். ஆனால் நோயுற்று நடமாட முடியாது மதிமயங்கி, சுயநினைவிழந்த பெற்றோர் நிலை என்ன? இவர்களை முதியோர் இல்லங்களில் இணைக்க முடியுமா? முழுமையாக இவர்களைப் பராமரிக்கும் வசதிகள் அங்கு உண்டா? என்று பார்த்தால் விடை எமது பிரதேசத்துக்கு பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது.

குடும்பத்தின் ஆணிவேராக இருந்த முதியவர்கள் பிள்ளைகளின் அரவணைப்பின்றி தனிமையிலே காலத்தைக் கழிக்கும் அவலநிலை இன்று அதிகரித்து வருகின்றது. நடமாடக் கூடிய முதியவர்களுக்கு முதியோர் இல்லங்கள் துணையாக உள்ளன. ஆனால் முழுமையாக நடமாட முடியாதவர்கள் விடயத்தில் நாம் கூடிய கவனம் எடுக்கவேண்டியுள்ளது. இவர்களுக்கு சமூகத்தில் முக்கிய இடம் கொடுக்கப்படவேண்டும். இவ்வாறான மூத்தோர் பிரச்சினைகளைத் தீர்க்க, மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வந்து இவர்களை எவ்வாறு பராமரிக்கலாம் எனச் சிந்தித்து செயற்படுவதன் மூலம் அவர்களது இறுதிக் காலம் சுகமாக அமையும். அவர்களது ஆத்மாவும் சாந்தியடையும். எனவே முதியோருக்கு உதவும் கரங்களாக நாம் எம் கரங்களை மாற்றுவோம். இதனால் கிடைக்கின்ற ஆன்ம திருப்தியை முழுமையாக அனுபவிப்போம்.

**பெற்றோர்களை பிள்ளைகள்தான் பராமரிக்க வேண்டும். நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்க்க எவ்வளவு கஷ்டப்படுகின்றீர்கள்? உங்கள் பிள்ளைகளால் எவ்வளவு துன்பப்படுகின்றீர்கள்? அதே கஷ்டம், அதே துன்பம் உங்கள் பெற்றோர்க்கும் ஏற்பட்டிருக்கும் என்பதை மனதில் சற்று நிறுத்திப் பாருங்கள். நீங்கள் உங்கள் பெற்றோரைக் கவனிக்காது விடுவீர்களானால் உங்களைப் பார்த்து உங்கள் பிள்ளைகளும் உங்களது வயதான காலத்தில் இவ்விதமே நடக்க முனைவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையும் மதிப்பும்

ஒரு வணிகன் முக்கிய உணவுப் பொருள்களை அடுத்த ஊர்ச் சந்தைக்குக் கொண்டு போய் நல்ல விலைக்கு விற்றுப் பணத்தை ஒரு பையில் போட்டுப் பூட்டிக் கொண்டு ஊருக்குத் திரும்பினான்.

வழியில் ஒரு கோயிலைக் கண்டான். அங்கே போய் வணங்கிவிட்டுத் திரும்பிச் சென்றான். பணப்பையைக் கோயிலில் மறந்து வைத்துவிட்டான்.

கோயிலுக்கு வந்த பள்ளி ஆசிரியர் கடவுளை வணங்கித் திரும்பும்போது அந்தத் தோல் பையைப் பார்த்தார். அருகில் எவரும் இல்லாததால், அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார். அவருடைய வீடு கோயில் வீதியிலேயே இருந்தது. வீட்டுக்குப் போனதும், ''பணப் பையை இழந்தவர் இங்கே விசாரிக்கவும்" என்று ஓர் அட்டையில் எழுதி, வீட்டு முகப்பில் தொங்கவிட்டார்.



வழியில் போய்க் கொண்டிருந்த வணிகனுக்குப் பணப்பையின் நினைவு வந்தது. பரபரப்போடு கோயிலுக்கு ஓடி வந்து விசாரித்தான். எவருக்கும் தெரியவில்லை. மிகவும் துக்கத்தோடு திரும்பிப்போய்க் கொண்டிருக்கும்போது ஒரு வீட்டின் முகப்பில் காணப்பட்ட அறிவிப்பைப் பார்த்தான். உள்ளே போய் விவரத்தைக்கூறி, சாவியைக் காட்டி பையைப் பெற்றுக்கொண்டான்.

உடனே பையைத் திறந்து பாதித்தொகையை அந்த ஆசிரியரின் முன்வைத்து "உங்களுடைய நேர்மைக்காக நான் பரிசு அளிக்கிறேன். எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னான் வணிகன்.

"உன் பணம் எனக்கு எதற்கு?" என்று கூறி அதைத் தொட மறுத்து விட்டார் ஆசிரியர்.

வணிகனும் எவ்வளவோ கூறினான். ஆசிரியர் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

அந்தத் தொகையை அங்கேயே வைத்துவிட்டு, பையை எடுத்துக் கொண்டு வணிகன் ஓடினான்.


"திருடன், திருடன்" என்று கூறிக்கொண்டே ஆசிரியர் அவரைத் துரத்தினார்.

வழியில் சென்றோர் வணிகனைப் பிடித்து நிறுத்தி, "என்ன திருடினாய்?" என்று கேட்டனர். அங்கே வந்த ஆசிரியர் "என்னுடைய நேர்மைய்யையும், இதுவரை நான் காப்பாற்றி வந்த மதிப்பையும் திருடிக் கொண்டான்" என்று கூறி, நடந்ததை விவரமாகக் கூறினார்.

## என்றும் மறவேன் அம்மா



அணைத்த கை உனை நினைக்குதம்மா
ஆசை உன் மேல் கொள்ளுதம்மா
இனிக்கும் இன்பம் தந்திடம்மா
ஈன்ற எந்தன் தாய் நீயம்மா
அள்ளி உணவு தந்த உம்மை
பார்க்க ஆசை பொங்குதம்மா
வெள்ளி நிலவில் உன் முகமும்
வெள்ளையாகத் தெரியுதம்மா
உறங்கும் போது உன் நினைவு
உயிர் கலந்து கொள்ளுதம்மா
பாசம் மிகுந்த உன் உறவு
பாரில் எங்குண்டு சொல்லம்மா
வேதம் எத்தனை கற்றிடலாம்
வேண்டிய பணமும் சேர்த்திடலாம்
என்றும் மறவேன் உன் உருவம்
ஏக்கம் தானே தினமம்மா





## வரலாற்றில் இன்றைய தினம்

1770 - வரலாற்றில் பதியப்பட்ட மிக அண்மித்த தொலைவில் பூமியை லெக்ஸெல் வால் நட்சத்திரம் கடந்து சென்றது.

1837 - பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு, குடியியல் பதிவு முறைமை இங்கிலாந்திலும், வேல்ஸ்சிலும் ஆரம்பிக்கப்பட்டது.

1862 - ரஷ்ய அரச நூலகம் மொஸ்கோவில் மொஸ்கோ பொது அருங்காட்சியகம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

1878 - கனடா சர்வதேச தபால் சங்கத்தில் இணைந்து கொண்டது.

1881 - உலகின் முதலாவது சர்வதேச தொலைபேசி அழைப்பு கனடா மற்றும் அமெரிக்கா இடையே மேற்கொள்ளப்பட்டது.

1890 - கனடாவும், பேர்முடாவும் தொலைபேசிக் கேபிள் மூலம் இணைக்கப்பட்டன.

1903 - ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டி முதன் முதலில் தொடங்கப்பட்டது.

1921 - சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது.

1922 - ஈழத்தின் மூத்த எழுத்தாளர் வரதர் பிறப்பு.

1923 - கனடா நாடாளுமன்றம் சீனர்களின் குடிவரவை இல்லாது ஒழித்தது.

1962 - ருவாண்டா சுதந்திரமடைந்தது.

- புரூண்டி சுதந்திரமடைந்தது.

1963 - முன்னாள் இராஜதந்திரி இம்பில்பி சோவியத்தின் முகவராகச் செயற்பட்டதாகப் பிரிட்டன் அரசு ஏற்றுக் கொண்டது.

1966 - கனடாவில் முதலாவது வர்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பு ரொறண்டோவில் தொடங்கப்பட்டது.

1991 - பராகுவேயில் உத்தியோக பூர்வமாக வோர்ஸோ ஒப்பந்தம் கலைக்கப்பட்டது.

2002 - வடக்கு-கிழக்கு எல்லைகளிலுள்ள படையினரை அகற்றக் கூடாதென சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு கோரிக்கை.

- புலிகள் போர்ப் பிரியர்கள் அல்ல; அவர்கள் அமைதியையே விரும்புவதாக சர்வமதக் குழுவின் பிரதிநிதிகள் தெரிவிப்பு.

- சீனாவில் தங்கச் சுரங்க விபத்தில் 46 பேர் உயிரிழந்தனர்.

2005 - அமைதி முயற்சிகளை மீளவும் தொடங்க அரசு ஆலோசனை; புலிகளின் கருத்தறியவும் முயற்சி.

- ஆழிப்பேரலையின் பின்னர் வடமராட்சியில் மீண்டும் முழுவீச்சில் கடற்றொழில்.

2007 - அனைத்துப் பொது உள்ளக அரங்குகளிலும் புகைப்பிடித்தல் இங்கிலாந்தில் தடை செய்யப்பட்டது.

2013 - ஐரோப்பிய ஒன்றியத்தின் 28 ஆவது உறுப்பு நாடாகியது குரேஷியா.

# வர்ணம்

## தீட்டுவோம் வாங்க....





க.கனிமொழி,
தரம் - 4 ஏ.
மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான முறையில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை எம்.பி.அருளானந்தன்



# பேரழகு நிறைந்த இந்துமதம்

இந்துமதம் இவ்வுலகில் நிலவும் மதங்கள் அனைத்துக்கும் ஆதியானது. ஏனைய மதங்கள் போல தீர்க்க தரிசிகளால் இது நிறுவப்படவில்லை. பிறமதங்கள் தோன்றிய காலத்தைக் கணக்கிட முடியும். ஆனால் இந்து மதத்தின் காலத்தைக் கணக்கிட முடியாது. இந்து சமயத்தில் சமயவெறி கிடையாது.

சனாதன தர்மம் அல்லது நிலையாய மதம் என்று இந்துமதம் தெரிவிக்கப்படுகிறது. வேதமதம் என்பதால் வைதீக தர்மம் என்றும் இதைக் கூறுவர். இந்துமதத்தின் அடிப்படை நூல்கள் வேதங்கள் ஆகும். ஆதிகால ரிஷி முனிவர்கள் தங்கள் ஆத்மீக அனுபவங்களை உபநிடதங்களின் மூலம் தெரிவித்துள்ளார்கள். அவர்களின் அனுபவங்கள் நேராகப் பெறப்பட்டவை. இந்த அரிய அனுபவங்களையே அதன் பிரமாணமாக இந்துமதம் கருதுகிறது. எண்ணற்ற வருடங்களாக இந்து ரிஷிமுனிவர்கள் கண்டு பிடித்துள்ள விலைமதிக்க முடியாத பொக்கிசங்களே இந்து மதத்தின் பெருமைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

மனிதனின் பகுத்தறிவு செயற்பட இந்துமதம் பரிபூரண சுதந்திரம் அளிக்கிறது. இச்சாசக்தியை அது கட்டுப்படுத்துவதில்லை. சிந்தனை வளர்வதற்கு அது தடையாக அமைவதில்லை. வழிபாடுகளில் இந்துமதம் ஒருவனுக்குப் பூரண சுதந்திரத்தை அளிக்கிறது இறை நிலை. ஆத்மாவின் தன்மை, படைப்பின் விசேடம், வழிபாட்டுமுறை, வாழ்க்கையின் இலட்சியம் ஆகியவற் றைக் குறித்த வினாக்கள் சம்பந்தமாக இந்துமதம் மனித சிந்தனைக்குப் பூரண சுதந்திரம் வழங்குகின்றது.

ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டையே அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும். அல்லது குறிப்பிட்ட வழிபாட்டு முறையையே அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகப் பொய்க் கூற்றுக்களைக் கூறி பிறரை ஒப்புக்கொள்ளச் செய்ய இந்துமதம் முயலுவ தில்லை. அனைவரும் சிந்தித்துச் சொந்த முடிவுக்கு வர இந்துமதம் அனுமதிக்கிறது. எனவேதான் பல்வேறு விதமான சமயக் கொள்கைகள். அநேகவிதமான வழிபாட்டு முறைகள், விதவிதமான சமயச் சடங்குகள் அடுத்தடுத்து நிலவுவதோடல்லாமல் அவை அமைதியான முறையில் போற்றப்பட்டும் வருகின்றன.

இந்துமதமானது எல்லா மதங்களையும் போற்றுகிறது. ஏனைய மதங்களை இது தூசிப்பதில்லை. எங்கிருந்து வந்தாலும் எந்த உருவில் வந்தாலும் இது உண்மையை மதித்துப் போற்றுகிறது.

வேதாந்தம், சைவம், சாக்தம், வைணவம் முதலிய பல்வேறு சமயக் கோட்பாடுகளை இந்துமதம் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பிட்டதோர் கொள்கையுடைய தனிமதம் என்பதைவிட இது ஒரு சமயப் பேரவை என்றால் சாலப் பொருந்தும். எல்லாவிதமா ன மக்களுக்கும் அவரவர் தகுதிக்கும் வளர்ச்சிக்கும் உகந்த முறையில் அ த்மிக உணர்வை அளிக்கிறது. இதுவே இந்தப் பெருந்தன்மை மிகும் மதத்தி ன் பேரழகு.

இந்து மதத்தின் தத்துவக் கருத்துக்க ... மிகச் சிறந்தவையாக அமைகின்றன. அதன் உயரிய ஒழுக்க முறைப் ே... தனைகள் தன்னிகரற்றதாக விளங்குகின்றன. மனிதனது தேவைக்குத் த... த முறையில் அவை அமைந்துள்ளன. இந்துமதம் ... ஒரு ...ழுமையான மதமாகத் திகழ்கிறது. ...பெரும் யோகிகள். மேன்மை வாய்ந்த மகாத்மாக்கள், ஞானிகள், உயரிய சமயாச்சாரியார்கள், புகழ் மிகும் தேச பக்தர்கள், அறிஞர்கள், வியத்தகு கற்புக்கரசிகள், போற்றுதற்குரிய போர்வீரர்கள் ஆகியோரைக் கணக்கில் அடங்காத முறையில் இந்துமதம் தோற்றுவித்திருக்கின்றது. இந்துமதத்தின் பெருமையை அறிந்து அதைப் போற்றி வழிபட்டு அதன் மூலமாக யாமெல்லாம் விழிப்புறுவோமாக.

மனிதனின் பகுத்தறிவு செயற்பட இந்துமதம் பரிபூரண சுதந்திரம் அளிக்கிறது. இச்சாசக்தியை அது கட்டுப்படுத்துவதில்லை. சிந்தனை வளர்வதற்கு அது தடையாக அமைவதில்லை. வழிபாடுகளில் இந்துமதம் ஒருவனுக்குப் பூரண சுதந்திரத்தை அளிக்கிறது.

# தமிழர்களுக்கான பரிகாரங்களை செய்து தீர்வினைத் தர வேண்டும்...!

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் இடம் பெற்று வருகிறது. வழக்கம்போல இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக 2009 ஆம் ஆண்டு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலைகள் தொடர்பிலான பேசுபொருள் வாய்மூலமான அறிக்கையிடலாக ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறும் பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்களிப்பு உள்வாங்கப்பட வேண்டும் என்பதான செய்தி அழகான வேடமுக ஒப்பனையோடு சொல்லப்பட்டிருக்கிறது. பார்வையாளர்களான தமிழர்களுக்கு இந்தச் செய்தியிலே எந்தவிதமான காத்திரமான, காருண்யமான ஆற்றுப்படுத்தல்களும் தீர்வுகளும் கிடைக்குமெனத் தெரியவில்லை.

மாறாக செய்திக்குரியவர்களான இந்த ஆற்றுகையின் முரண் நிலைக்குரியவர்களான நல்லாட்சி அரசவைக் கலைஞர்கள் இதற்கு ஏற்றாற்போல வழக்கமான தன்னலன் சார்ந்த பின்னூட்டல்களை அழகான வார்த்தைகளில் அமைதியின் வடிவம்போலத் தோற்றம் கொண்டு மேடையேறி அலங்கரித்திருக்கின்றனர். இதுவரை காலமும் செயல்வடிவமற்று சேடமிழுத்த தங்களது செயல் நிலைகளைச் சாதனைகளாக ஆற்றுகையின் கதாநாயகன் மொழிந்துவிட்டதாக மார்தட்டிக் கொள்கின்றனர்.

சர்வதேச பங்களிப்பை அரசு உதாசீனம் செய்யாது என்ற வாழ்த்துப் பாமாலையை கீர்த்தனையாக பாடியிருக்கின்றனர். அதிலும் வழக்கமான தாளப் பிரமாணத்தில் சரியாக நிற்கின்றபோதிலும் கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்றையும் வெவ்வேறு இராகங்களின் தொனியில் பாடி ஆத்மார்த்தமான சுருதியில் தாங்கள் இன்னமும் நிதானமின்றி இருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

சுதந்திரம், ஜனநாயகம், நல்லிணக்கம் ஆகியவை ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வலுப்பெறும் என்ற ரீதியிலே பல்லவியைப் பாடி முடித்தவர்கள் அரசு மீது மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சுமத்துகின்றபோதும் இனப் படுகொலை தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை. அவ்வாறான குற்றங்கள் நிகழ்ந்திருந்தால் விசாரணைகள் இடம்பெறும் என்பதாக அனுபல்லவியை பாடி முடித்துள்ளனர். உச்ச ஸ்தாயியில் சரணத்தை பாடியவர்கள் நல்லிணக்கம் என்பது ஓரிருவரில் வருவதல்ல. அதற்குத் தொடர் நடவடிக்கை வேண்டும் என்பதாக இன விரிசலில் ஒற்றுமைப்படுவதில் தமிழ் மக்கள் மீது இன்னமும் சிங்கள மக்களுக்கு இருந்து வருகின்ற தீராநோயின் அறிகுறியை வெளிப்படுத்தியுள்ளனர். இலங்கை அரசின் சாதனைகளை ஆணையாளர் ஏற்றுக்கொண்டு விட்டார் என்ற களிப்பில், கொந்தளிப்பில் ஆத்மார்த்தமாக இருந்திருக்க வேண்டிய கீர்த்தனையின் சுருதி, லயம், ஞானம் ஆகிய மூன்றிலும் சிறத்தல் இன்றி கீழ்நிலைப்பட்டு நிற்கின்றனர்.

ஆக இவர்கள் இன்னமும் பயிற்சி நிலையிலேயே இருந்து வருகின்றனர். ஓர் அரசாக, அதிகார வர்க்கமாக தமிழர் தரப்புக்குத் தீர்வினைக் கொடுக்கவேண்டும் என்ற முகிழ் நிலையை, பக்குவ நிலையை இன்னமும் அடையவில்லை. சந்தர்ப்ப வசங்களைச் சாதகமாக்கி சுயநலன் கொண்டு பல் இளிக்கும் செயற்பாடுகளையே செய்து வருகின்றனர். இதிலிருந்து விரைவாக மீளவேண்டும் இவர்கள். சுயநலம் கொண்ட பல் இளித்தல்களை தவிர்த்து தமிழர்களுக்கான பரிகாரங்களைச் செய்து தீர்வினைத் தர முன்வரவேண்டும்...!

இந்தச் சந்தர்ப்பத்திலே 1997ஆம் ஆண்டு விவேகானந்தர் இராமேஸ்வரத்தில் ஆற்றிய உண்மை வழிபாடு தொடர்பான சொற்பொழிவின் கருத்து நிலைகளை ஞாபகம் கொள்ளல் நன்று.

உடலும் மனமும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகளை இறைவன் நிறைவேற்றுகிறார். ஆனால், தாங்களே தூய்மையற்றவர்களாக இருந்து கொண்டு, பிறருக்குப் போதனை செய்பவர்கள் இறுதியில் தோல்வியே அடைகிறார்கள். புற வழிபாடு என்பது, அக வழிபாட்டின் அடையாளம் மட்டுமே ஆகும். அக வழிபாடும், தூய்மையும் தாம் உண்மையானவை.

இவையின்றிச் செய்யப்படும் புற வழிபாடு பயனற்றது. இதை நீங்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள். நாம் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; பிறகு ஒரு திருத்தலத்துக்குச் சென்றால், அந்தப் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிடும் என்று நினைக்கும் அளவுக்குக் கீழான நிலைக்கு, இந்தக் கலியுகத்தில் மக்கள் வந்துவிட்டார்கள். தூய்மையற்ற உள்ளத் துடன் கோயிலுக்குச் செல்லும் ஒருவன், ஏற்கெனவே தன்னிடம் இருக்கும் பாவங்களுடன் மேலும் ஒன்றை அதிகப்படுத்துகிறான் கோயிலுக்குப் புறப்பட்ட போது இருந்ததை விட, இன்னும் மோசமானவனாக அவன் வீடு திரும்புகிறான். மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கம் போக வேண்டும். எல்லோருக்கும் முன்னால் நான் முக்தி பெறவேண்டும் என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி. இவனுக்கு மீட்சி கிடையாது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர்களின் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். தொழிலில் வளர்ச்சிப் பணி குறைவின்றி நிறைவேறும். இலாபம் பன்மடங்கு உயரும். வெளியூரிலிருந்து சுப செய்தி வந்து சேரும்.

**இடபம்:** எதிர்ப்பாகப் பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில் வியாபார வளர்ச்சிக்காக, விடாமுயற்சியுடன் பாடுபடுவீர்கள். இலாபம் படிப்படியாக உயரும். உடல் நலனில் அக்கறை உண்டாகும்.

**மிதுனம்:** சிறு செயலையும் நேர்த்தியாகச் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்களுக்கு, பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**கடகம்:** அவமதித்து பேசிய சிலர் அன்பு பாராட்டுவர். தொழில், வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும்.

**சிங்கம்:** புதிய நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். சுமாரான இலாபம் கிடைக்கும். உடல் நலத்துக்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம்.

**கன்னி:** உறவினரின் உதவி கிடைப்பதில் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச்செலவுக்கு தடுமாற நேரிடலாம். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**துலாம் :** ஆன்மிக சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சியால், நல்ல முன்னேற்றம் உண்டாகும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம் :** குடும்பத்தினர் ஆதரவுடன் இருப்பர். தொழில் வியாபார தொடர்பு பலம்பெறும். நிலுவைப் பணம் வசூலாகும். வெகுநாள் தேடிய பொருள் புதிய முயற்சியால் கைவந்து சேரும்.

**தனுசு :** புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும். தொழில் வியாபாரத்தில், கடின உழைப்புத் தேவைப்படும். மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம் :** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கப் பெறுவீர்கள். இலாபம் உயரும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கும்பம் :** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இலாபம் திருப்தியளிக்கும். வழக்கு விவகாரத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.


**மீனம் :** பேச்சில் நிதானமாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் நேரம் தவறாமையை கடைபிடிக்கவும். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாறுதல் ஏற்படும்.




'பொய்', 'ராமன் தேடிய சீதை' போன்ற படங்களில் நடித்தவர், விமலா ராமன். மலையாளத்தில் கே.ராகவேந்திர ராவ் இயக்கும் 'ஓம் நமோ வெங்கடேசா' என்ற பக்திப் படத்தில், லக்சுமி வேடத்தில் இவர் நடித்துள்ளார். "மலையாளத்தில் பல படங்களில் நடித்தாலும், பிரியதர்ஷன் இயக்கத்தில் நடிக்க ஆசைப்பட்டேன். அது 'ஒப்பம்' மூலம் நிறைவேறியது. இதில் நான் மோகன்லால் ஜோடியாக நடிக்கிறேன். முறைப்படி நடனம் கற்றதால், பல நிகழ்ச்சிகளில் லக்சுமி, சரஸ்வதி, பார்வதி போன்ற கடவுள் வேடங்களில் தோன்றி ஆடி யிருக்கிறேன். எனது குரு மற்றும் தோழிகள், எனக்கு பெண் கடவுள் தோற்றம் மிகப்பொருத்தமாக இருக்கிறது என்று சொல்வார்கள். எனவே, ஒரு படத்தில் பெண் கடவுள் வேடத்தில் நடிக்க ஆசைப் பட்டேன். அது இப்போது நிறைவேறியுள்ளது" என்கிறார் அவர். தமிழ்ப் பெண் என்றாலும், தமிழ்ப் படங்களில் அதிகமாக நடிக்காதது குறித்து வருத்தப் படுகிறார் அவர்.

ரெட்டைசுழி((( @SENTHIL_WIN

மனுசனோட
பாலர் வயதில் வீடே உலகம்.
பதின் வயதில் உலகமே வீடு.
கடைசிக் காலத்தில் வீடே உலகம்
வாழ்க்கை வட்டம்






உணவு உண்ணும் பொழுது என்னுடல் மாசுபட்டுவிட்டாலோ, உடை உடுத்துவதில் உனக்கு ஏதும் சிரமம் இருந்தாலோ பொறுத்துக்கொள். ஒரு முறை உன்னுடைய குழந்தைப் பருவத்தில் உனக்கு உடை அணியச் சொல்லித் தருவதில் செலவழித்த மணித்துளிகளை நினைத்துப்பார்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | | | | | | 2 | |
| | | | 7 | | | | 1 | |
| | | 1 | 9 | | | 3 | | |
| 4 | | | 6 | 8 | | | | |
| | 6 | | | 5 | | | 4 | |
| | | | | 9 | 2 | | | 7 |
| | | 5 | | | 1 | 6 | | |
| | 9 | 4 | | | 6 | | | |
| | 2 | | | | | | 7 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 8 | 3 | 9 | 6 | 4 | 7 | 2 |
| 9 | 7 | 3 | 4 | 2 | 1 | 6 | 8 | 5 |
| 6 | 4 | 2 | 7 | 5 | 8 | 1 | 3 | 9 |
| 3 | 1 | 9 | 8 | 7 | 4 | 2 | 5 | 6 |
| 2 | 6 | 7 | 9 | 1 | 5 | 8 | 4 | 3 |
| 4 | 8 | 5 | 6 | 3 | 2 | 7 | 9 | 1 |
| 7 | 2 | 1 | 5 | 8 | 9 | 3 | 6 | 4 |
| 5 | 3 | 6 | 1 | 4 | 7 | 9 | 2 | 8 |
| 8 | 9 | 4 | 2 | 6 | 3 | 5 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## திருமணத்துக்கு முன்;
## கீழே படியுங்கள்

அவன் : ஆமாம், இதற்காகத்தானே நான்
இத்தனை நாளாய்க் காத்திருந்தேன்.
அவள் : நீ என்னை விட்டு விலக
நினைப்பாயா ?
அவன் : இல்லை, இல்லை, நான் கனவிலும்
அதை நினைத்ததில்லை
அவள் : நீ என்னை விரும்புகிறாயா ?
அவன் : ஆமாம், இன்றும், என்றென்றும்.
அவள் : என்னை ஏமாற்றிவிடுவாயா ?
அவன் : அதைவிட நான் இறப்பதே மேல்.
அவள் : எனக்கொரு முத்தம் தருவாயா ?
அவன் : கண்டிப்பாக, அதுதானே எனக்கு
மிகப் பெரிய சந்தோசமான தருணம்.
அவள் : என்னைத் திட்டுவாயா ?
அவன்: ஒருபோதும் இல்லை. அப்படிச்
செய்வேன் என்று நினைத்தாயா ?
அவள்: நீ என்னுடன் கடைசிவரை
கைகோர்த்து வருவாயா ?



திருமணத்துக்குப் பின்
கீழிருந்து மேலே படியுங்கள்

படித்தில் பிடித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## டாட்டூ பதிப்பு

யாழ்ப்பாணத்தில் ராட்டூ கலா சாரம் அறிமுகமாகியுள்ளது. டாட்டூ பதிக்க ஏற்படும் மிகுகுறைந்த செலவு 2 ஆயிரம் ரூபா. வர்ணம், அளவு என்பவற்றுக் கமைய அதன் பெறுமதி அதிகரிக்கும். 40 ஆயிரம் வரை டாட்டுக்கள் பதிக் கப்படுகின்றன.


## நாளை

ஆனி-18
சனிக்கிழமை - 02.07.2016
திதி: திரயோதசி
மு.இ.09.13 வரை
நட்சத்திரம்: ரோகிணி
மு.இ.09.59 வரை
ராகுகாலம்:
08.56-10.26 வரை
சுபநேரம்:
02.56-04.26 வரை
சனிப்பிரதோஷ விரதம்



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 900 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 600 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 600 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 320 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஓட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 350 | 300 | – |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 160 | 80 | – | – | 60 |
| கத்தரி | 80 | 60 | 80 | 80 | 70 | 50 | – | 40 |
| கரட் | 300 | 240 | 140–300 | 140 | 260 | 200 | – | 160 |
| மரவள்ளி | 100 | 80 | 80 | 80 | 100 | – | – | 50 |
| பயிற்றை | 80 | 60 | 80 | 120 | 80 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 200 | 240 | 160 | 100 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 150 | 110 | 120 | 160 | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 90 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 120 | 180 | 140 | 180 | – | 160 |
| பூசணி | 70 | 100 | 80 | 120 | 110 | 120 | – | 80 |
| தக்காளி | 250 | 240 | 200 | 240 | 260 | 300 | – | 200 |
| வாழைக்காய் | 200 | 80 | 80 | 120 | 60 | 60 | – | 40 |
| கீரை | 15 | 30 | 20 | 20 | 20 | 20 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 45 | 20 | 30 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 600 | 800 | 600 | 1000 | – | 500 |
| புடோல் | 70 | 80 | 80 | 140 | 80 | 120 | – | 100 |
| கோவா | 180 | 160 | 150 | 240 | 140 | 180 | – | 140 |
| வெண்டி | 120 | 90 | 100 | 120 | 80 | 120 | – | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 240 | 220 | 260 | – | 120 |
| லீக்ஸ் | 180 | 160 | 120 | 240 | 160–180 | 280 | – | 150 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30–38 | 20–30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 160 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 250 | 160–180 | 200 | – | 280 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 180 | 140 | 140 | 280 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 500 | 800 | 300 | 600 | – | 350 |

## முளைகட்டிய தானிய உணவுகள்

❋ பச்சைப்பயறு, கொண்டக்கடலை, வெந்தயம், எள்ளு, வேர்க்கடலை, வெள்ளரி விதை, கொள்ளு மற்றும் கறுப்பு உளுந்து போன்ற தானியங்களை வீட்டிலேயே முளைக்கச் செய்து சாப்பிடுவதுதான் முளை தானிய உணவு எனப்படும் இயற்கை உணவாகும்.

❋ இந்தத் தானியங்களை நன்றாகக் கழுவி 8 மணி நேரம் ஊற வைத்து பின்னர் ஈரமான பருத்தித் துணியில் சுற்றி வைத்து விட்டால் 8, 10 மணிக்குள் தானியம் முளைவிட்டு இருக்கும். இந்தத் தானிய உணவானது ஆரோக்கியத்தையும், அளவற்ற சக்தியையும் அள்ளித்தரும், மலிவான உன்னதமான சத்தான உணவு. இதன் பயனை உணர்ந்து கொண்டால் கட்டாயம் உங்கள் குடும்ப உணவாகவே மாறிவிடும்.

❋ இந்த உணவின் மூலம் புரதம், கல்சியம், சோடியம், இரும்புத்தாது, பொட்டாசியம் மற்றும் பொஸ்பரஸ் போன்றவைகள் கூடுதலாகக் கிடைப்பதுடன், விற்றமின் ஏ, பி1 மற்றும் பி2 போன்றவையும் அபரிமிதமாகக் கிடைக்கிறது.

❋ முளைவிட்ட பச்சைப்பயிறு சாப்பிட்டால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும். முளைவிட்ட எள்ளுச் சாப்பிட்டால் ஒல்லியானவர்களுக்கு உடம்பு வைக்கும், கண் பார்வை மேம்படும்.

❋ முளைவிட்ட கொண்டக்கடலையை விளையாட்டு வீரர்கள் மற்றும் கடினமான உடல் உழைப்பாளிகள் அதிகம் சாப்பிடலாம். காரணம் தங்களது சக்தி குறையாமல் பார்த்துக் கொள்ளலாம்.


❋ முளைவிட்ட கறுப்பு உளுந்து, தாய்ப் பால்ச் சுரப்பை அதிகரிக்கச் செய்யும்.

❋ முளைவிட்ட கொள்ளுச் சாப்பிட்டால் உடல் பருமன் குறையும். மூட்டுவலி தீரும்.

❋ எந்தவித நோய்களும் வராமல் தடுக்கும் சக்தியும் இந்த முளைவிட்ட தானியங்களுக்கு அதிகம் உண்டு.



## கரட் ஐஸ்கிறீம்



### தேவையானவை

கரட் - 4
பால் - ஒரு கப்
சீனி - கால் கப்
மஞ்சள் பொடி (அ) புட் கலர் - அரை சிட்டிகை
ஒன்றிரண்டாகப் பொடித்த நட்ஸ் கலவை - 3 தேக்கரண்டி
வனிலா எசன்ஸ் - கால் தேக்கரண்டி

### செய்முறை

தேவையான பொருள்களைத் தயாராக எடுத்துக் கொள்ளவும்.
கரட்டைத் தோல் நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
நறுக்கிய கரட்டை ஆவியில் வேக வைத்து, ஆறவிட்டு மிக்ஸியில் போட்டு விழுதாக அரைத்துக் கொள்ளவும்.
அரைத்த கரட்டுடன் சீனியைச் சேர்த்து ஒரு அடிகனமான பாத்திரத்தில் ஊற்றி சூடேற்றவும்.
கலவை நன்கு சூடேறியதும் அதில் பாலை ஊற்றி நன்கு கலந்து ஆறவிடவும்.
ஆறியதும் வனிலா எசன்ஸ், புட் கலர் சேர்த்துக் கலந்து குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.
[illegible] நேரம் கழித்து எடுத்து மிக்ஸியில் போட்டு ஒரு சுற்றுச் சுற்றியெடுத்து கப்புகளில் ஊற்றவும்.
அதில் பொடித்த நட்ஸ் தூவி மீண்டும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தெடுத்துப் பரிமாறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல் ( Dell ) இன் உச்ச விருதை வென்ற சிங்கர்




நீடித்து உழைக்கின்ற நுகர்வோர் சாதனங்களை விற்பனை செய்வதில் நாட்டில் முன்னணி வகித்து வருகின்ற சிங்கர் ஸ்ரீலங்கா பீஎல்சி அண்மையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் இடம்பெற்ற டெல் (Dell) தெற்காசியா மற்றும் கொரியா விநியோக உச்சி மாநாடு 2016 நிகழ்வில் தெற்காசிய அபிவிருத்தியடைந்து வருகின்ற சந்தைப்படுத்தல் குழுவில் உச்ச நுகர்வோர் விநியோகப் பங்காளருக்கான விருதை வென்றுள்ளது.

தெற்காசிய அபிவிருத்தியடைந்து வருகின்ற சந்தைப்படுத்தல் குழுவினால் நாடுகளிலுள்ள உச்ச நுகர் வோர் சில்லறை வர்த்தக பங்காளர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது. வருமானம், அர்ப்பணிப்புடனான ஈடுபாடு மற்றும் பிராந்தியத்திற்கான ஒட்டுமொத்த பங்களிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அவை தெரிவு செய்யப்படுகின்றன.

டெல் (Dell) தெற்காசியா மற்றும் கொரியா விநியோக உச்சி மாநாடு 2016 நிகழ்வில் இந்த விருதைப் பெற்றுக் கொண்ட ஒரேயொரு இலங்கை நிறுவனமாக சிங்கர் திகழ்கின்றது.

சிங்கர் மற்றும் டெல் (Dell) நிறுவனங்களுக்கிடையிலான பங்குடைமை 2014 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தொழிற்பாடுகளின் முதற் கட்டத்தில் டெல் (Dell) விற்பனையில் விரைவான வளர்ச்சியை சிங்கர் வெளிக்காண்பித்தது. அதன் விளைவாக இலங்கையில் டெல் (Dell) இன் ஒட்டுமொத்த சந்தைப்பங்கும் அதிகரித்துள்ளது.

சிங்கர் ஸ்ரீலங்கா பீஎல்சி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகத் துறைப் பணிப்பாளரான மகேஷ் விஜேவர்த்தன தெரிவித்ததாவது- இந்த விருதானது டெல் (Dell) வர்த்தக நாமத்தின் வலிமையை மீளவும் நிரூபித்துள்ளது. சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் உறுதியான விநியோக வலையமைப்பு மற்றும் நாட்டிலுள்ள மிகச் சிறந்த விற்பனைக்குப் பின்னரான சேவை வலையமைப்பு மற்றும் சிங்கரின் மூலமாக இலங்கை மக்களுக்கு அனுபவங்களை வழங்கும் ஊக்குவிப்புக்கள் அடங்கலாக தனித்துவமான வழங்கல்களே இதற்கு வழிகோலியுள்ளன.

இந்த உச்ச பிராந்திய சாதனையையிட்டு நாம் பெருமிதம் கொள்வதுடன், இலங்கையில் மிகச் சிறந்த டெல் (Dell) வழங்கல்களை நாம் தொடர்ந்தும் அறிமுகம் செய்வோம்.- என்றார்.

தெற்காசியா மற்றும் கொரியா விநியோக உச்சி மாநாடு 2016 நிகழ்வானது அனைத்து டெல் (Dell) விநியோக உறுப்பினர்களும் இடைத் தொடர்புபடுகின்ற பிராந்திய நிகழ்வுகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. நுகர்வோர் மற்றும் சில்லறை வர்த்தகம் ஆகிய இரு பிரிவுகளிலும் இலங்கை மற்றும் விசுவாசம் மிக்க வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் கௌரவத்தை சிங்கர் பெற்றுள்ளது.

இந்தநிகழ்வில் 30க்கும் மேற்பட்ட நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் 100க்கும் மேற்பட்ட விநியோகப் பங்காளர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான டெல் (Dell) இன் உள்நாட்டு முகாமையாளரான றொான் நுகவெல தெரிவித்தாவது-

**வணிகம்**

இந்த மகத்தான சாதனைக்காக நான் சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கர் மற்றும்டெல் (Dell) நிறுவனங்கள் கட்டியெழுப்பியுள்ள பங்குடைமையானது சிங்கரின் நம்பிக்கைமிக்க மேன்மையின் பக்கபலத்துடன் நாட்டின் அனைத்து பாகங்களிலும் அதிசிறந்த உற்பத்திகளை வழங்குவதற்கு இடமளித்துள்ளது..- என்றார்.

நாடெங்கிலும் வியாபித்துள்ள 420க்கும் மேற்பட்ட காட்சியறைகள் மற்றும் அதே எண்ணிக்கையிலான விற்பனைக்கு பின்னரான சேவை வலையமைப்பினூடாக வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தை சிங்கர் வழங்கிவருகின்றது. நிறுவனத்தின் முயற்சிகளுக்காக அது ஏராளமான விருதுகளை வென்றுள்ளதுடன், இவை அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக நாட்டில் மக்களின் அபிமானத்தை வென்றுள்ள வர்த்தகநாமமாக முதலிடத்தில் திகழ்ந்து வருகின்றது.

# நுட்பம்

## நோட்டிபிகேஷனால் பரவுகின்றது வைரஸ்

உலகில் அதிகம் பேரால் பயன்படுத்தப்படும் சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தில் கருத்துகள், ஒளிப்படங்கள், செய்திகள் உலக அளவில் உடனுக்குடன் பதிவிடப்படுகின்றன.

இந்தச் செயற்பாட்டின் மூலம் வைரஸ்கள் அதிகமாகப் பரவுகின்றன என எச்சரிக்கப்பட்டுள்ளது. நண்பர்கள் பெயரில் நம் பக்கத்திற்கு வரும் நோட்டிபிகேஷன்களால் இந்த வைரஸ் பரவுவதாக கூறப்படுகின்றது.




ஒளிப்படங்கள் மூலம் வரும்அறிவிப்புகளால் மால்வேர் மடிக்கணினிக்கு பதிவிறக்கம் செய்யப்படுகிறது.

இதனை கிளிக் செய்வதன் மூலம் வைரஸ் செயற்படத் தொடங்குகின்றது. குரோம் மட்டுமல்லாமல், எட்ஜ், பயர்ஃபாக்ஸ், சபாரி, ஒப்பேரா ஆகிய இயங்கு தளங்கள் மூலமும் இந்தவகை வைரஸ்கள் பரவுகின்றன. அதனால் உங்கள் பக்கத்திற்கு வரும் நோட்டிபிகேஷன்களை கவனமாக கையாள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இரவு கைபேசி பாவித்தால் பார்வையிழப்பு ஏற்படும்

இரவு நேரங்களில் தொடர்ந்து தொடுதிரைக் கைபேசிகளைப் பாவித்தால் பார்வையிழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பார்வையிழப்பு எனப்படும் இந்நோய், இருட்டில் தொடர்ச்சியாக தொடுதிரைக் கைபேசியைப் பயன்படுத்தும் போது ஒரு கண்ணில் மட்டும் ஏற்படும் பார்வை இழப்பாகும்.

குறிப்பாக, வலது புறமாக படுத்தால் இடது கண்ணால் தான் கைபேசியை அதிகம் பார்க்க நேரிடும். அப்படியான ஒரு நிலையில் ஒரு கண்ணில் ஒளிமிகும் நிலையையும் மறு கண் இருளான நிலையையும் சந்திக்கும் போது இந்த பாதிப்பு ஏற்படுகிறது.

நமது விழித்திரைகள் எந்தவொரு கமராவை விடவும் வெவ்வேறு ஒளி நிலைகளை அற்புதமாக கையாளக் கூடியதாக இருப்பினும் மிக அரிதாக பார்வையிழப்பு ஏற்படுகிறது.

இரவு நேரங்களில் விழித்திருந்து அதிக நேரம் தொடுதிரைக் கைபேசிகளைப் பாவிப்பதை நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது







யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் புதிய கண்டுபிடிப்புக் கண்காட்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமானது. 'பனங்காட்டில் புத்திக் கூர்மை' எனும் தொனிப் பொருளில் இந்தப் புதிய கண்டுபிடிப்புக் கண்காட்சி இடம்பெற்றது. கண்காட்சிக் கூடத்தை யாழ்.பாதுகாப்புப் படைத்தளபதி மகேஸ் சேனநாயக்க மற்றும் யாழ்.மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் திறந்து வைத்ததுடன் காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் கண்டுபிடிப்புக்களையும் பார்வையிட்டனர்.
(ற-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி; கொழும்பில் நேற்றுப் பேரணி




கொழும்பு, ஜூலை 1

பன்னாட்டுச் சித்திரவதைகளுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு 'சித்திரவதைகளுக்கு முற்றுப்புள்ளி' என்ற தொனிப் பொருளில் கொழும்பில் நேற்று வியாழக்கிழமை பேரணி நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்த இந்த விழிப்புணர்வூட்டும் பேரணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

பொரளையில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலை மையகத்தில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி டொரின்டன் பகுதிவரை சென்றது. இந்தப் பேரணியில் நூற்றுக்கும் அதிக மானவர்கள் கலந்து கொண்டதோடு, சித்திரவதையை இல்லாதொழிப்போம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர். (வ-5)

## ராணுவத்தைக்

தெரிவித்ததாவது: காணாமற்போனோர் தொடர்பாக செயற்படும் அலுவலகத்தை அமைப்பதற்கான சட்ட வரைவை அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. இது நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த இராணுவத்தினரைக் காவு கொடுக்கும் செயற்பாடாகும்.

கடந்த அரசினால் காணாமற்போனோரைக் கண்டறிவது குறித்த ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களை உள்ளடக்கிய பிரதேசங்களுக்குச் சென்று விசாரணை நடத்தி, அதுதொடர்பான அறிக்கையொன்றையும் அந்த ஆணைக்குழு சமர்ப்பித்திருந்தது. இவ்வாறு இருக்கையில், தற்போது புதிய அலுவலகம் ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொள்வதானது, மேற்குலக நாடுகளின் தூண்டுதல்களின் அடிப்படையில் இராணுவத்தினரைக் காவு கொடுக்கும் செயலாகும்.

மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வீதியில் இறங்கி நடமாடுவதற்கு வழியமைத்த இராணுவத்தினர், தற்போது நாட்டின் பெரிய குற்றவாளிகளாகச் சித்திரிக்கப்படுகின்றனர். பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினருக்கு எதிராக ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ளவர்கள் மீதும் குற்றச்சாட்டுப் பதிவுசெய்யும் ஒரு நடவடிக்கையே இந்தக் காணாமற்போனோர் தொடர்பாக நிறுவப்படவுள்ள அலுவலகமாகும்.

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டிய இராணுவத்தினரைப் பன்னாடுகளுடன் இணைந்து காவு கொடுக்க முயலும் இந்த ஆட்சியாளர்களின் செயற்பாட்டுக்கு அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவித்து, காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவுவது குறித்த சட்ட வரைவை தோல்வியடையச் செய்ய வேண்டும் – என்றார்.

இதேவேளை காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவது மற்றும் அதனூடாக, காணாமற்போனவர் குறித்த சான்றிதழ்களை அவர்களது உறவினர்களுக்கு வழங்குவதற்கான சட்ட வரைவை கடந்த மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அந்த சட்டவரைவு மீதான விவாதம் இந்த மாதம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே மகிந்த ஆதரவு மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (வ-5)

## மனித

கள் சபை யின் கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று மாலை நடந்த அமர்வில் உரையாற்றுகையிலேயே, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதிநிதி இவ்வாறு கண்டித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, இலங்கை அரசு மனித உரிமை மீறல் குறித்து ஆராய சில நடவடிக்கைகளை எடுத்தது. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைக்க நடவடிக்கை எடுத்தமை முக்கிய படியாகும்.

எவ்வாறெனினும் அரசு வழங்கிய பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாக பன்னாட்டுத் தரத்துடன் கூடிய சட்டம் வரவேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

போர்க் குற்றங்கள் குறித்த நீதி விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளையும், சட்டத்தரணிகளையும், விசாரணையாளர்களையும் பங்குபற்ற வைக்குமாறு ஜெனிவா பிரேரணையில் வலியுறுத்தப்பட்டது. எனினும் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறமாட்டர்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால கூறினார். இந்த நிலமையானது பன்னாட்டுப் பங்களிப்பை கேள்விக்குட்படுத்தலாம் – என்றார்.

இதே அமர்வில் உரையாற்றிய ஐ. நா. கண்காணிப்பகத்தின் பிரதிநிதி தெரிவித்ததாவது:

அண்மைக் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கையில் போர்க்குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் இடம்பெற்றதாகக் கருதப்படுகின்றது. அரசின் தகவல்படி 8 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர், 6 ஆயிரத்து 350 பேர் காணாமற்போயுள்ளனர். எனினும் ஐ.நா. நிபுணர் குழுவானது 40 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என்று கூறுகிறது. தமிழ் ஆண்கள் மற்றும் பெண்கள் சித்திரவதைக்கு, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் தொடர்கிறது. பன்னாட்டு நீதிபதிகள் விசாரணைப் பொறிமுறையில் உள்ளடக்கப்பட வேண்டுமென ஜெனிவாப் பிரேரணை கூறுகிறது. ஆனால் இலங்கையானது உள்ளக விசாரணைப் பொறிமுறையை மட்டுமே நிறுவுவதற்கு அனுமதியளித்துள்ளது.

அநீதிகளை இழைத்தோர் சட்டத்தில் இருந்து தப்பிக்க முடியாது. அரசின் செயற்பாடுகளானது பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டுமே தவிர, இடமாற்றமாக அமையக் கூடாது – என்றார். (உ-வ-5)

## தகவல்

யாகக்கொண்டே, இந்த நடவ டிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த மாதம் வெளியிடப்படுமென அரச தரப்புத் தகவல்களை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டது.

இதன்பிரகாரம் 4, 000 க்கும் மேற்பட்ட அரச நிறுவனங்களில் இருந்து பொதுமக்களால் கோரப்படுகின்ற தகவல்களை வழங்குவதற்கான ஏது நிலையை ஏற்படுத்தும் பொருட்டு, இந்தத் தகவல் பரிமாற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், இலங்கை வரலாற்றிலேயே அரச சேவையில் ஒரு பதவிநிலை சார்ந்து மிக அதிகளவான பட்டதாரிகள் ஒரே தடவையில் அரச சேவையினுள் உள்ளீர்க்கப்படவுள்ளமையும் இதுவே முதற் தடவை என்று கூறப்படுகிறது. (வ-ரி2,22)

## நம்பகமான

வேண்டியது அவசியமாகும். இவ்வாறு தெரிவித்துள்ளது பன்னாட்டு ஜூரிகள் ஆணைக்குழு.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத் தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அந்த அமைப்பின் பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினார்.

ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு மேற்கொள்ளும் அர்ப்பணிப்பை வரவேற்கிறோம். காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் அமைத்தலை உதாரணமாகக் குறிப்பிடலாம். எனினும் தீர்மான விடயத்தில் இன்னும் நடைமுறைப்படுத்த வேண்டியவைகள் அதிகம் உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் விசாரணைப் பொறிமுறையை தாமதமின்றி நிறுவுமாறு கோரிக்கை விடுக்கிறோம் – என்றார் பன்னாட்டு ஜூரிகள் ஆணைக்குழுவின் பிரதிநிதி. (வ-5)

## மனித உரிமைகள் சபை

என்று நம்புகின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித் தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பில், கூட்டமைப்பின் நிலைப் பாடு என்ன? என்று 'உதயன்' பத்திரிகை எதிர்க்கட்சித் தலைவரிடம் வினவியது. அதற்கு அளித்த பதிலில் அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையையும், இலங்கை தொடர்பான அமர்வில் பங்கேற்ற மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள், இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தெரிவித்த கருத்துக்களையும் நான் மனதார வரவேற்கின்றேன்.

உண்மையை நிலைநாட்டும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையும், உறுப்பு நாடுகளின் அழுத்தமும் அமைந்துள்ளன.

ஐ.நா. தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிதானமாகக் கையாண்டது. அதில் திருப்திகரமான வெற்றியையும் பெற்றது. இதனை மேலும் நிதானமாக முன்னெடுக்க வேண்டிய சூழலில் இருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படியும், உறுப்பு நாடுகள் தெரிவித்ததன் அடிப்படையிலும் இலங்கை அரசு செயற்படும் என்று நம்புகின்றேன் – என்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்றது. அதில், இலங்கை தொடர்பில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாய்மூல அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் வெளியிடப்பட்டது. அதில் இலங்கையின் பொறுப்புக் கூறல் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை உள்வாங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார் ஆணையாளர். அத்துடன் முன்னேற்றங்கள் போதாது எனவும், வடக்கு – கிழக்கில் இராணுவ இருப்பு தொடர்ந்து நிலவுவதாகவும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோன்று மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள், இலங்கை பொறுப்புக் கூறல் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன. இந்தக் கருத்துக்களையே கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் வரவேற்றார். (வ-5)

## 1,500 ஏக்கர்

மகிந்த ஆட்சியில் 6 ஆயிரத்து 387 ஏக்கர் நிலப்பரப்பு வலி. வடக்கில் சுவீகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஆயிரத்து 53 ஏக்கர், 701 ஏக்கர் இறுதியாக 201ஏக்கர் என்று ஆயிரத்து 955 ஏக்கர் இதுவரையில் விடுவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் மயிலிட்டி – தையிட்டி ஆகிய பிரதேசங்களை விடுவிக்கக் கோரி மீள்குடியேற்ற அமைச்சினால் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் அரச தரப்பினர் வசமுள்ள ஆயிரத்து 500 ஏக்கரை விடுவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (வ-5)

## ஐ.நா.மனித

தெரிவித்தார். சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:


விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறமாட்டார்கள் என்று அரசு கூறுகிறது. இதனால் தமிழ் மக்கள் ஆச்சரியம் அடையவில்லை. காரணம் தமிழ் மக்கள் இலங்கையிடமிருந்து நீதியை எதிர்பார்க்கவில்லை. இலங்கை பன்னாட்டு நீதிபதிகள் தொடர்பில் ஐ.நா.வுக்கு வாக்குறுதியை அளித்து விட்டு, தற்போது அதனை முடியாது என்று கூறுகிறது என்றால், தமிழ் மக்கள் விடயத்தில் அது எவ்வாறு செயற்படுகின்றது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

கடந்த கால வரலாறுகளைப் பார்க்கும் போது, இலங்கையினால் தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாது என்பது தெளிவாகின்றது. பன்னாட்டுத் தலையீடு இன்றி தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது. தமிழர்களை ஆக்கிரமித்துக் கொண்டு ஆட்சியாளர்கள் நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றனர். தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்படாமல், அவர்களின் அரசியல் உரிமை உறுதிப்படுத்தப்படாமல், எந்தவொரு நல்லிணக்கத்தையும் அடைய முடியாது.

எனவே நீதி வழங்கும் விசாரணைப் பொறிமுறையானது பன்னாட்டு நீதிபதிகளையும் சட்டத்தரணிகளையும், விசாரணையாளர்களையும் உள்ளடக்க வேண்டும். இதைனை ஐ.நா. உறுதிப்படுத்த வேண்டும். வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்ற ஐ.நா. அழுத்தம் கொடுக்கவேண்டும் – என்றார். (வ-5)

## மரண அறிவித்தல்

### வடிவேல் பவளவேல்



தோற்றம் 03 . 07 . 1947

மறைவு 29 . 06 . 2016

ஏழாலை தெற்கு. மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேல் பவளவேல் நேற்று முன்தினம் (29.06.2016) புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு – பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து – சிதம்பரம் தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்,
குடும்பத்தினர்.

ஏழாலை தெற்கு.
மயிலங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

சாவகச்சேரி பகுதியில் வீடு ஒன்றில் வீட்டு பணிபுரிவதற்கும், குழந்தைகளை பராமரிப்பதற்கும் பணிப்பெண் தேவை

தொடர்புக்கு: 0775269373, 0774815025

# டி.ஐ.ஜியாக ஏழு பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜூலை 1
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஏழு பேருக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் ஆணைக் குழுவினால் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜெயசுந்தரவின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண உள்ளிட்ட 7 பேரே இவ்வாறு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, அஜித் ரோஹண, வசந்த விக்ரமசிங்க, பத்மலால் சந்துன்கஹவத்த, சம்பிக சிறிவர்தன, பிரியன்த ஜயகொடி, நிமல் பெரேரா, மர்வின் விக்ரமசிங்க ஆகியோரே பிரதி பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். (வ)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

**WALK -IN – INTERVIEW**

Walk in interview for appointments to the following posts will be held on **05.07.2016 at 1.30 p.m** at the Board Room of this University.

**Temporary Lecturer / Temporary Demonstrator in Accounting, Marketing, Human Resource Management, Financial Management, Commerce**

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs. 26,020/ p.m. (Fixed) |
| Temporary Demonstrator | Rs. 21,370/- p.m. (fixed) |

**Temporary Lecturer**

1. A Degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   **OR**
2. A Degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   **OR**
3. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least second class honours and (b) a recognized postgraduate degree in the relevant subject.

**Temporary Demonstrator**

The qualifications are same for the post of Temporary Lecturer. Class requirements are not necessary.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and **self prepared application**.

**Registrar**
University of Jaffna
30.06.2016

**Majestic Cineplex Jaffna**

**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை 021- 2227712

CeylonTheatres

www.ceylontheatres.lk

# அரசுக்கு எதிராக மாபெரும் பேரணி

கொழும்பு, ஜூலை 1
நல்லாட்சி அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக மகிந்த ஆதரவு பொது எதிரணியினர் ஏற்பாடு செய்துள்ள பேரணி ஜூலை 28ஆம் திகதி கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் ஆரம்பித்து, ஓகஸ்ட் முதலாம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளதாக பொது எதிரணியின் அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

“தேசிய திட்டம் எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் பேரணியில் அரசுக்கு எதிரான கட்சிகளும் சிவில் அமைப்புகளும் கலந்து கொள்ளலாம். நல்லாட்சி அரசுக்கு நாளாந்தம் எதிர்ப்புகள் அதிகரித்து வரும் இந்த வேளையில் எமது பேரணியில் லட்சக் கணக்கான மக்கள் கலந்து கொள்வது உறுதி” என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ். (வ–சி)

**வேலை வாய்ப்பு**

110 நாடுகளில் இயங்கிவரும் எமது International Company இற்கு நிர்வாகம் சம்பந்தமான வேலை வெற்றிடங்கள் உள்ளன.

O/L, A/L படித்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தகுதிகாண் காலத்துக்கு பின்னர் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான வாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு

077 2986763, 076 7948311

**ஊர்காவற்றுறை பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)**
**கிளைக்குழுத் தெரிவிற்கான அறிவித்தல்**
**- 03.07.2016**

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச் சபைக்கு வந்து வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அநேகமான அங்கத்தவர்கள் இடப்பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்லை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து கிளைப் பொதுச் சபைக் கூட்டத்துக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| கிளைகளின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி | நேரம் | கிளைப்பொதுக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 1 | திரு. வி. ஜெயந்தன் | 03.07.2016 | மு.ப. 10.00 | தலைமை அலுவலகம் ஊர்.ப.நோ.கூ.சங்கம் |
| பருத்தியடைப்பு | 2 | திரு. தே. வேணுகோபாலன் | 03.07.2016 | மு.ப. 10.00 | பருத்தியடைப்பு சனசமூக நிலைய மண்டபம் |
| கரம்பொன் | 3 | திரு. ம. கபிலன் | 03.07.2016 | மு.ப. 10.00 | கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் பாடசாலை மண்டபம் |
| கரம்பொன் கிழக்கு | 4 | திரு. கு. நிசாந்தன் | 03.07.2016 | மு.ப. 10.00 | கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் பாடசாலை மண்டபம் |
| பொன்னாச்சிக்கடை சந்தி | 5 | திரு. இ. கஜேந்திரன் | 03.07.2016 | மு.ப. 10.00 | பொது மண்டபம் ஊர்காவற்றுறை |
| நாரந்தனை | 6 | திரு. நா. ஜெயவதனன் | 03.07.2016 | மு.ப. 10.00 | பொது மண்டபம் நாரந்தனை |
| தம்பாட்டி | 7 | திரு. வ. நிதர்சன் | 03.07.2016 | மு.ப. 10.00 | பொது மண்டபம் தம்பாட்டி |
| நாரந்தனை தெற்கு | 8 | திரு. நா. குமணதாசன் | 03.07.2016 | மு.ப. 10.00 | நாரந்தனை றோ.க. பாடசாலை மண்டபம் |
| புளியங்கூடல் சந்தி | 9 | திரு. இ. தயாகரன் | 03.07.2016 | மு.ப. 10.00 | மகாமாரி சனசமூக நிலைய மண்டபம் |
| புளியங்கூடல் தெற்கு | 10 | திரு. இ. புவன்ராஜ் | 03.07.2016 | மு.ப. 10.00 | பொது மண்டபம் புளியங்கூடல் |
| கருவில் | 11 | திரு. வ. கிருசாந் | 03.07.2016 | மு.ப. 10.00 | அன்னை மேரி மாதா கோவில் மண்டபம் கருவில |
| சரவணை | 12 | திரு. ஜெ. சதீஸ் | 03.07.2016 | மு.ப. 10.00 | நாரந்தனை கந்தசாமி கோவில் மண்டபம் |
| மெலிஞ்சிமுனை | 13 | திரு. க. சசிகரன் | 03.07.2016 | மு.ப. 10.00 | மெலிஞ்சமுனை றோ.க.பாடசாலை மண்டபம் |
| எழுவைதீவு | 14 | திரு. ப. தவப்பிரியன் | 03.07.2016 | மு.ப. 10.00 | எழுவைதீவு முன்பள்ளி மண்டபம் |

01/07/2016

திருமதி. மதுமதி [illegible]
கூட்டுறவு அபிவிருத்தி [illegible]
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்
வடமாகாணம்

**கண்ணீர் அஞ்சலி**

எமது புவியியற்றுறை பேராசிரியர்
**ஏ.எஸ்.சூசை ஆனந்தன்** அவர்களின் தாயார்

**திருமதி**
**அகஸ்ரின் பபியோலா குரூஸ்**

அவர்கள் நேற்று (30.06.2016) வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா வங்காலை புனித ஆனாள் அன்னையின் திருப்பாதங்களில் இளைப்பாறுதலடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**புவியியல் மற்றும் திட்டமிடல் சமூகம்,**
**புவியியற்றுறை**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(J 2548)
(10.17)

**சண்முகராசா பரமேஸ்வரி ஞாபகார்த்தமாக**
**இளந்தாரகை விளையாட்டு கழகம்**
**நடாத்தும்**
**மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டி**



கிளிநொச்சி முல்லைத்தீவு யாழ்ப்பாணம் வவுனியா மாவட்டங்களை உள்ளடங்கிய கழகங்கள் பங்கு பெறலாம்

* பதிவுக்கட்டணம்-1000/=
* 10 பந்துபரிமாற்றங்கள்
* 11பேர் கொண்ட அணி

1ம் பரிசு–15000 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணம்
2ம் பரிசு–7500 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணம்

இடம்–இளந்தாரகை விளையாட்டு மைதானம்
பதிவுகளுக்கான இறுதி திகதி–02.06.2016(சனிக்கிழமை)

தொடர்புகளுக்கு–
0777356476,0777178145,0766663031

# மர ஆலை முற்றாக எரிந்து நாசம்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி தேவாலய வீதியிலுள்ள மர ஆலை மற்றும் அருகிலிருந்த வீடு என்பன தீயினால் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மர ஆலையில் சேரும் தூர்சிகளை ஒன்று சேர்த்து நேற்றுமுன்தினம் மாலை நேரம் தீ வைத்ததாகவும், அதுவே இந்தத் தீ விபத்து இடம்பெற காரணமாகும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவித்த காணிகளுக்கு செல்வோர் அவதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வலி.வடக்கில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குக் காணிகளைப் பார்வையிடுவதோடு, துப்புரவுப் பணிகளில் ஈடுபடும் மக்கள் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

குறித்த பகுதிகளுக்குச் செல்லும் மக்களுக்கு அங்கு வைத்து 'சொன்ட்' மற்றும் 'யுனிசெப்' நிறுவனங்களினால் மிதிவெடி அபாய விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் மூலம் மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.

காணிகளைத் துப்புரவு செய்யும் போது, சந்தேகத்திற்கிடமான பொருள்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்கவேண்டும். அதனைத் தொடவோ, உரசவோ கூடாது. குப்பைகளுக்கு தீ மூட்டுவதைப் பொதுவாக மாலைநேரங்களில்செய்யுங்கள்.

சந்தேகத்துக்கிடமான பொருள்கள் தொடர்பில் அருகில் உள்ள இராணுவ காவலரணுக்கோ, அல்லது பொலிஸ் நிலையத்திற்கோ தகவல் வழங்குவதன் மூலம், அவற்றை அவர்கள் பாதுகாப்பாக எடுப்பதற்கு உதவியாக இருக்கும். இதன் மூலம் வீணான இழப்புக்களைத் தவிர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-107)

# நாமல் எம்.பிக்கு எதிராக வழக்கு



கொழும்பு, ஜூலை 1

ஊழல் விசாரணை ஆணைக்குழுவை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு வாக்கு மூலங்களை வழங்குவதற்கு வருமாறு பலமுறை நாமல் ராஜபக்சவிற்கு அறிவிக்கப்பட்டது. எனினும் அவர் வாக்கு மூலங்களை வழங்க மறுத்து வருவதாக ஊழல் விசாரணை ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இது, இலங்கை ஊழல் விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் படி தண்டனை பெறக்கூடிய ஒரு குற்றமென்று அந்த ஆணைக்குழு நீதிமன்றுக்கு அறிவித்தது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக நாமல் ராஜபக்சவிற்கு தகுந்த தண்டனையை வழங்குமாறு கோரி ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கைத் தாக்கல் செய்துதது. (வ-5)

## மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு

தென்மராட்சி, ஜூலை 1

நுங்கு வெட்ட மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து சாவடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நாவற்குளி ஐயனார் கோவிலடியில் நடந்தது.

வன்னியில் வெடி பொருளில் அகப்பட்டுக் காலை இழந்த அவர், செயற்கைக் கால் பொருத்தி நடப்பவர். நேற்று முன்தினம் மாலை வீட்டுக்கு அண்மையில் உள்ள வடலிப் பனையில் ஏறி, நுங்கு வெட்டியபோது கால் தவறிக் கீழே வீழ்ந்தார். யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் சாவடைந்தார் எனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை நடத்தி, சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான், பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற-ஜ-9)

## பருத்தித்துறைக் கடற்கரையில் நேற்று சிரமதானப் பணிகள்

பருத்தித்துறை நீதிமன்றால் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டவர்கள், பருத்தித்துறை நகரசபையுடன் இணைந்து பருத்தித்துறைக் கடற்கரையில் நேற்று சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை நீதிவானின் பணிப்புக்கு அமைய அவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

"சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம், இயற்கையுடன் ஒன்றிணைவோம்" எனும் தொனிப் பொருளில் இந்தச் சிரமாதானப் பணி மேற்கொள்ளப்பட்டன.

சமுதாய சீர்திருத்த அதிகாரி சிவஞானம் இதயதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பணியில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்ட 45 பேர் ஈடுபட்டனர். (ற-ஜ-107)

## பஸ் கட்டணங்களை அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 1

பஸ் கட்டணங்களை 6 சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய செலவீனங்கள் பஸ் சேவைகளை நடத்துவதற்கு போது மானதாக இல்லை. இதற்காக போராட்டங்களில் ஈடுபடப் போவதில்லை. இருப்பினும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன் – என்றார் கெமுனு விஜேரத்ன. (5)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்கள் 11 பேருக்கும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

கடந்த 2ஆம் திகதி நெடுந்தீவுக்கு மேற்குக் கடலில் விசைப் படகுடன் நுழைந்த 4 மீனவர்கள், 5 ஆம் திகதி ஒரு விசைப்படகுடன் நெடுந்தீவுக்கு வடக்கே மீன்பிடித்த தழிழ்நாடு இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள், கடந்த 16 ஆம் திகதி காரைநகர் கோவளம் கடற்பரப்புக்குள் ஒரு விசைப்படகுடன் மீன்பிடித்த 3 மீனவர்கள் காங்கேசன்துறைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து உரிய அறிவுறுத்தல் கிடைக்கவில்லை என நீதிவானின் கவனத்துக்கு , நீரியல் வளதுறை அதிகாரிகள் தெரியப்படுத்தினர். மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (ற-ஜ-4,107)

## பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு

### ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

கிராமப்புறப் பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே, அரசு கல்வி தொடர்பாக அதிக நிதி ஒதுக்கீடுகளைச் செய்கின்றது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணங்களில் உள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் இன்னமும், கழிப்றை வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், கதிரை, மேசைகள் போன்ற தளபாடங்கள் இன்மை என இன்னமும் பௌதீக வளப் பிரச்சினைகள் உள்ளன.

முதலமைச்சர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

உயர்தரப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு, பெற்றோர்கள் முண்டியடிப்தற்கு



பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் முக்கிய காரணங்களாக உள்ளன. பாடசாலைகளின் பௌதீக வளத் தரத்தை மேம்படுத்துவதே அரசின் கொள்கை– என்று அவர் தெரிவித்தார். (ற-ஜ-ரி2,22)

## நூலகத்துக்கு பொருள்கள் கையளிப்பு

மீசாலை பொது நூலக சிறுவர் பகுதிக்குத் தேவையான பொருள்கள் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

புலம்பெயர் நாட்டிலிருந்து வந்துள்ள வைத்தியநாதர் ரட்ணகுமாரால் மீசாலை பொது நூலக சிறுவர் பகுதி பொறுப்பெடுக்கப்பட்டு வர்ணம் தீட்டி பிரிவுக்குரிய மேசைகள், கதிரைகள், கணினிகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

நூலக சிறுவர் பிரிவுக்குரிய பொருள்களை இன்று சாவகச்சேரி நகரசபைச் செயலாளரிடம் அன்பளிப்பாக வழங்கவுள்ளார். (ற-ஜ-9)

## மாடு கடத்திய குற்றச்சாட்டில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 1

நாம்பன் மாட்டைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்கரை வீதி குருநகரில் நேற்று முன்தினமிரவு அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவரும் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

அரியாலைப் பகுதியில் இருந்து நாம்பன் மாட்டைக் கடத்தியவர்கள், அதனைக் குருநகர் பகுதிக்கு கொண்டு செல்லவுள்ளனர் என்று கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த நபர்கள் கடற்கரை வீதியில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

கைதானவர்கள் யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-107)

## நினைவு தினக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடபுலத்து இரண்டாம் தலைமுறை இடதுசாரித் தோழர் சிவா சுப்பிரமணியத்தின் நினைவு தினக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு யாழ். பொதுநூலக சிற்றுண்டி மண்டபத்தில் நடைபெறும்.

வடபகுதி கிராமிய உ[illegible]ருத்தி அமைப்பின் தலை[illegible] தலைமையில் கூட்டம் இடம்பெறும். (ற-ஜ-ரி)

## சாரணர் வாரம் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 1

இலங்கை சாரணர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சாரணர் சேவை மற்றும் ஒத்துழைப்பு வாரம் இன்று முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு குடிமக்களுக்குச் சேவை வழங்குவதன் மூலம் கிடைகின்ற நிதியில், குழுக்களின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

[illegible] வருகை தரும் சாரணர் குழுக்[illegible] ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுக்குமாறு சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் புஷ்பகுமார மஹகம்முல்லகே கேட்டுள்ளார். (வ)

## சின்னம் சூட்டும் விழா

யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் படசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஞானசிகாமணி அன்னப்பா அறிவாலய மண்டபத்தில் இடம்பெறும்.


இந்த நிகழ்வுக்கு அனைவரையும் வருகை தருமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாள்களின் உலகில் வாழ்கிறார் ரவி சாஸ்திரி

## கங்குலி காட்டம்

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவி தனக்குக் கிடைக்காமல் போனதற்கு கங்குலி தான் காரணம் என்று ரவி சாஸ்திரி தெரிவித்திருந்த நிலையில், சாஸ்திரி முட்டாள்களின் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என கங்குலி பதிலடி கொடுத்தார்.
இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு சாஸ்திரியும் விண்ணப்பித்திருந்தார். இறுதியில் சாஸ்திரிக்கும், கும்ளேக்கும் இடையில் கடும்போட்டி நிலவியது. கங்குலி தலைமையிலான சச்சின், லக்ஸ்மன் ஆகியோரைக் கொண்ட தெரிவுக் குழு கும்ளேயைத் தெரிவு செய்தது. இதற்கு சாஸ்திரி அதிருப்தி தெரிவித்தார். கங்குலி தனது பதவிக்கு நியாயம் செய்யவில்லை எனக் குறிப்பிட்டார். இந்த நிலையிலேயே கங்குலி, சாஸ்திரி முட்டாள்களின் உலகில் வாழ்ந்து கொண்டிருப்பதாக பதிலடி கொடுத்தார்.
ரவி சாஸ்திரியின் கருத்துகள் என்னை காயப்படுத்தியதுடன், வருத்தம் அடையவும் வைத்துள்ளன. அவரின் கருத்துகள் தனி மனிதரை குறிவைப்பது போல் உள்ளது. அவருக்கு பயிற்சியாளர் பதவி கிடைக்காமல் போனதற்கு நான்தான் காரணம் என்று நினைத்து அவர் முட்டாள்களின் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)




# கிண்ணத்தை வசப்படுத்துவதை உறுதி செய்தது இங்கிலாந்து

இலங்கை அணிக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தையும் கைப்பற்றி கிண்ணம் வெல்வதை உறுதிசெய்தது இங்கிலாந்து.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஓர் ஓட்டத்துடன் ரண்அவுட் செய்யப்பட்டார் குசல் பெரேரா. குணதிலகவுடன் இணைந்து கச்சிதமாக இன்னிங்ஸை கட்டமைத்தார் குசல் மென்டிஸ். மேலதிக இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இலங்கை. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். இணைப்பாட்டமாக 128 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மெண்டிஸ். மெண்டிஸை வெளியேற்றிய ரசிட் சிறிது நேரத்தில் குணதிலகவையும் வெளியேற்றினார். மழை குறுக்கிட ஆட்டம் 42 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக மட்டுப்படுத்தப்பட்டது. மத்தியூஸ், சந்திமலால் மீண்டுமொரு இணைப்பாட்டம் அரங்கேறியது. ரி-20 ஆட்டத்தின் பாணியில் இருவரும் அடித்தாடி வேகமான அரைச்சதங்களைப் பதிவுசெய்தனர். 63 ஓட்டங்களுடன் சந்திமலை போல்ட் செய்தார் வில்லி. பிரசன்னாவால் பின்னடைவே எஞ்சியது. மத்தியூஸ் வேறுசில பவுண்டரிகளையும் பதிவுசெய்ய முடிவில் இலங்கை 305-5 பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக வில்லி, ரசிட் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
டக்வேர்த் லூயிஸ் முறைப்படி இங்கிலாந்துக்கு இலக்காக 252 பந்துகளில் 308 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் மொயின் அலி. இரண்டே ஓட்டங்களுடன் இருக்கைக்கு திரும்பினார் மொயின். றோய், ரூட் இணை நீண்டு நிலைபெற்றது. ஐம்பது, நூறு என ஓட்டங்கள் கடந்துகொண்டிருந்தன. இலக்குகள் வீழ்த்தப்பட்டபாடில்லை. இங்கிலாந்து 167 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரூட். மோர்கனால் முடிந்து 22 ஓட்டங்கள் மட்டுமே. மறுமுனையில் 150 ஓட்டங்களை நிறைவுசெய்தார் றோய். பரிஸ் ரௌவ், றோய் இணை பிறிதொரு இணைப்பாட்டத்தை அரங்கேற்றியது. இலக்கை எட்டும் தருவாயில் 162 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார் றோய். 11 பந்துகள் மிதமிருக்க ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தார் பட்லர்.
பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரதீப் 2 இலக்குகளையும், லக்மல், குணதிலக இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் இங்கிலாந்து 2:0 என்று முன்னிலை வகிக்கிறது. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. பிறிதொரு ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இறுதி ஆட்டத்தில் இலங்கை வென்றாலும் கிண்ணம் இங்கிலாந்திடமே செல்லும். இறுதியாட்டம் நாளை நடைபெறும். (ம)



# இங்கிலாந்தை வீழ்த்த முடியும் நம்பிக்கை தெரிவித்தார் ஆர்தர்

## ஆமிருக்கும் அட்வைஸ்

பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக நியமிக்கப்பட்டு, தனது முதலாவது தொடருக்காக இங்கிலாந்துக்குச் சென்றுள்ள மிக்கி ஆர்தர், பாகிஸ்தானால் இங்கிலாந்தை வீழ்த்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.
நான்கு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடருக்காகவும், ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடருக்காகவும் ஒரு ரி-20 ஆட்டத்திலும் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்குச் சென்றுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகிறது.
இந்த நிலையிலேயே ஆர்தர் இங்கிலாந்தை வீழ்த்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.
டெஸ்ட் ஆட்டங்களில் பாகிஸ்தான் பலமான அணியாகவே உள்ளது. கடந்த காலப் பெறுபேறுகள் இதற்கு சிறந்த சான்று. ஆமிர் அணியில் இணைந்துள்ளமை அணியின் பந்துவீச்சை மேலும் பலப்படுத்தியதாக அமைந்துள்ளது. துடுப்பாட்ட வரிசையும் பலமாக உள்ளது. அனைத்தும் சரியாக அமைந்தால் நிச்சயம் பாகிஸ்தானால் இங்கிலாந்தை வீழ்த்த முடியும். ஆமிரைப் பொறுத்தவரை இந்தத் தொடரில் அவர் பொறுமை காப்பது மிக அவசியம். சூதாட்ட விவகாரத்தில் எந்த மைதானத்தில் தடை பெற்றாரோ அங்கிருந்தே டெஸ்ட் வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்கிறார். அவர் மறக்க நினைக்கும் விடயங்களை இங்கிலாந்து ரசிகர்களும் இங்கிலாந்து வீரர்களும் நினைவுபடுத்த எத்தனிக்கலாம். குறிப்பாக வார்த்தை மோதல்களில் இந்த விவகாரம் இடம்பெறலாம். இவ்வாறான நிலை ஏற்பட்டால் ஆமிர் பொறுமை பேணுவது அவசியமாகிறது என ஆர்தர் மேலும் தெரிவித்தார். (ம)

### யூரோத் தோல்வி எதிரொலி; ஆஸ்திரியா தலைவர் ஓய்வு



யூரோக் கிண்ணத் தொடரிலிருந்து ஆஸ்திரியா வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் அந்த அணியின் தலைவரான பியுச் பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.
ஐஸ்லாந்து அணிக்கு எதிரான நடைபெற்ற ஆட்டம் தான் என்னுடைய கடைசி ஆட்டமாகும். தேசிய அணிக்காக 10 ஆண்டுகளாக விளையாடியது பெருமையாக உள்ளது. எல்லாவற்றையும் நாட்டுப் பற்றுடன் செய்தேன். ஆஸ்திரியா அணி உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற எனது வாழ்த்துக்கள் என பியுச் தனது ஓய்வு உரையில் குறிப்பிட்டார். (ம)


### ரி–20 உலகக் கிண்ணம் 18 அணிகளுக்கு இடம்?

2018ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் 18 அணிகள் பங்குபற்ற ஆலோசனை நடத்தி வருகிறது சர்வதேச கிரிக்கெட் சபை.
இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் தகுதிச் சுற்று மாகச் சேர்த்து மொத்தமாக 16 அணிகளே விளையாடியிருந்தன. இவற்றிலிருந்து 10 அணிகள் பிரதான சுற்றுக்கு உள்வாங்கப்பட்டன. இந்த முறையை மாற்றியமைத்து 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் 18 அணிகளின் பங்குபற்றலை ஏற்படுத்தி பிரதான சுற்றில் 12 அணிகள் உள்வாங்கப்பட பரிசீலனை செய்து வருகிறது சர்வதேச கிரிக்கெட் சபை. (ம)



# மெஸ்ஸிக்கு ஆர்ஜென்ரீனாவில் சிலை

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி ஓய்வு முடிவை அறிவித்த இரண்டே நாள்களில் அவரது உயரத்தையொத்த வெண்கலச் சிலையைத் திறந்து கௌரவித்துள்ளனர் ஆர்ஜென்ரீனா ரசிகர்கள்.
கோப்பா அமெரிக்கத் தொடரின் இறுதியாட்டத்தில் சிலியிடம் தோல்வியடைந்த பிற்பாடு ஓய்வை அறிவித்துச் சென்றார் மெஸ்ஸி. மெஸ்ஸி மீண்டும் வரவேண்டும் என்று ஆதரவுக் குரல்கள் வலுத்திருந்த நிலையில் தற்போது அவர் வெண்கலச் சிலை திறந்து வைத்து கௌரவிக்கப்பட்டுள்ளார்.
ஆர்ஜென்ரீனாவின் தலைநகர் பியூனர் அயர்ஸிலேயே இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பியூனர் அயர்ஸ் நகரின் ஆளுனர், மெஸ்ஸி தனது முடிவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**யாழ். தாச்சித் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி அணி மோதவுள்ளது.

**அம்பாள் வி.க. தொடர்**

அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. ஆண்கள் பிரிவில் பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் பி அணியும் மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் ஏ அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணியும் மோதவுள்ளன. பெண்கள் பிரிவில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பட்டபிளை அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணியும் மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணியும் மோதவுள்ளன. ஆண்களுக்கான ஆட்டங்கள் யாழ். மத்தியின் கூடைப்பந்தாட்டத் திடலிலும், பெண்களுக்கான ஆட்டங்கள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலிலும் இடம்பெறவுள்ளன.

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதவுள்ளது. (ம-23)

# 30 தொடர் வெற்றிகள்; மிரட்டும் ஜோகோவிக்



விம்பிள்டன் தொடரில் நேற்றுநடைபெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்றதன் மூலம் கிராண்டஸ்லாம் மதிப்பைப் பெற்ற தொடர்களில் தொடர்ச்சியாக 30ஆவது வெற்றியைப் பதிவுசெய்தார் ஜோகோவிக்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த ஆட்டமொன்றில் நடப்புச் சம்பியனும் முதல் நிலை வீரருமான செர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார்பிரான்ஸின் மன்னரினோ. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஜோகோவிக் இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவெற்றி பெற்றார். மூன்றாவது செற்றில் போராட்டத்தை வெளிப்படுத்தினார் மன்னரினோ. அந்த செற்றில் சிரமத்தை எதிர்கொண்டாலும் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் வெற்றிபெற்றார் ஜோகோவிக். (ம)

## ஆனந்தா, உதயசூரியன் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் ஆனந்தா, உதயசூரியன் அணிகள் வெற்றி பெற்றன.

அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணியை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தா அணி மோதியது. இதில் மானிப்பாய் ஆனந்தா அணி 11:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி வள்ளுவர் அணியை எதிர்த்து உடுவில் உதயசூரியன் அணி மோதியது. இதில் உடுவில் உதயசூரியன் அணி 3:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## மெய்வன்மைப் போட்டிகள்; கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கு, மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள் தொடர்பான அறிவுறுத்தல் கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் துரையப்பா விளையாட்டரங்கில் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 5 தினங்கள் நடைபெறவுள்ளன. குறித்த போட்டிகளில் வடமராட்சி சார்பாக பங்குபற்றும் வீர வீராங்கனைகளுக்கான ஏற்பாடுகளுடன் தொடர்புடையதாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும். வலய மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள குறித்த கலந்துரையாடலில் அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108)

## வென்றது சென். மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 1

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். மேரிஸ் அணி வெற்றி பெற்றது.

தொடர் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து இரணமாதாநகர் சென். மேரிஸ் அணி மோதியது. இதில் இரணமாதாநகர் சென். மேரிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஹென்றிஸ் - டயமன்ஸ் அரையிறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தும் சவால் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஹென்றிஸ் - டயமன்ஸ் அணிகள் இன்று அரையிறுதியில் மோதவுள்ளன. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-422)

## சமரவீரவுக்கு ஆஸி. குறி மற்றொரு மகேல ஆவாரா?

ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக சமரவீரவை நியமிக்க ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை முனைப்புக்காட்டி வருவதாக அறியவருகிறது.

ஆஸ்திரேலிய அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்து மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும், ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும், இரண்டு ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில் ஆடுகளப் புரிதல்கள், இலங்கையின் பலம், பலவீனம் என்பன வற்றைப்பற்றி அறிவதற்காகவே இலங்கையின் முன்னாள் வீரரான சமரவீரவை ஆஸ்திரேலியா இலக்கு வைப்பதாகச் சொல்லப்படுகிறது.

இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகள் ஏதேனும் ஒருநாட்டுக்கு நீண்ட காலச் சுற்றுப்பயணம் மேற்கொண்டால் அந்த நாட்டின் முன்னாள் வீரர் ஒருவரைப் பயிற்சியாளர் என்ற போர்வையில் ஒற்றனாகப் பயன்படுத்துகின்றன என்ற விமர்சனங்கள் காலங்காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்தும், இலங்கையும் ஒரே பிரிவில் இடம்பெற்றிருந்தன. இந்தத் தொடரில் இலங்கையை வீழ்த்துவதற்காகவும் ஆடுகளப் புரிதல்களுக்காகவும் மகேலவை துடுப்பாட்ட ஆலோசகராக நியமித்திருந்தது இங்கிலாந்து. மகேலவின் இந்த நியமனத்துக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான திலங்க சுமதிபால தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். தற்போது சமரவீரவுக்கு வலை வீசுகிறது ஆஸி. (ம)



## 62 நிமிடங்களில் முடிந்த ஆட்டம் ரட்வன்ஸ்கா அசத்தல் வெற்றி

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் 62 நிமிடங்களில் வெற்றி பெற்றார் ரட்வன்ஸ்கா.

போலந்தின் ராட்வன்காவை எதிர்த்து உக்ரைனின் கோஸ்லோவா மோதினார். முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்ற ரட்வன்ஸ்கா இரண்டாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின், கோக்லியை நீக்கியமை கடினமான முடிவென்கிறார் சங்கா



தனதுகனவுஅணியில்இருந்து சச்சின், கோக்லி இருவரையும் நீக்கியமை மிகவும் கடினமான முடிவு எனக் குறிப்பிட்டுள்ளார் சங்கா.

லோட்ஸ் நிர்வாகம் சில வீரர்களிடம் கனவு அணிகளை அறிவிக்குமாறு கேட்டது. சங்கா அறிவித்த கனவு அணியில்சச்சின், கோக்லி இருவரும் இடம் பெறவில்லை. கோக்லியின் புறக்கணிப்பை இந்திய ரசிகர்களாலும் சச்சினின் புறக்கணிப்பை கிரிக்கெட் ரசிகர்களாலும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இந்தநிலையில்இருவரையும் நீக்கியது கடினமான முடிவு என்று சங்கா தெரிவித்தார்.

சச்சின், கோக்லி இருவரும் கிரிக்கெட் உலகம் கண்ட சிறந்த வீரர்கள் என்பதில் சந்தேகமில்லை. எனக்குப் பிடித்தமான வீரர்களில் இந்த இருவருக்கும் பிரதான இடமுண்டு என்பதையும் குறிப்பிடுகின்றேன். இருவரையும் நீக்கியமை மிகவும் கடினமான முடிவாகவே இருந்தது என சங்கா மேலும் தெரிவித்தார். (ம)

## வேலையாள்கள் தேவை

இல. 279, ஸ்ரான்லி வீதியில் இயங்கும் உணவகத்துக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

★ சமையல் செய்பவர்
★ தேனீர் தயாரிப்பவர்
★ உபசரிப்பாளர்

தங்கிநின்று வேலை செய்பவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

077 410 3245

# பந்துவீச்சில் அதிக கவனம்: தெரிவித்தார் அனில் கும்ளே

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளரான அனில் கும்ளே பந்துவீச்சு மட்டில் அதிக கவனம் செலுத்தப் போவதாகத் தெரிவித்தார்.

இந்த மாதம் மத்திய பகுதியில் இந்தியா-மேற்கிந்தியத்தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளநிலையில், குறித்த தொடருக்கான பயிற்சிமுகாம் பெங்களூரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. முதல்நாள் பயிற்சி முடிந்த பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கும்ளே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்திய அணியைப் பொறுத்த மட்டில் துடுப்பாட்டம் களத்தடுப்பும் சிறப்பாகவே உள்ளது. இவற்றுடன் ஒப்பிடும் வகையில் பந்துவீச்சு இல்லை. கடந்த ஓரிரு மாதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியல்ல இது. சிறந்த பந்துவீச்சுவரிசையென்பது கடந்தசில வருடங்களாகவே இந்தியாவுக்கு எட்டாக்கனியாகவே அமைந்துள்ளது. இந்த நிலையை மாற்றவே விரும்புகின்றேன். பந்துவீச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதமாகவே எனது பயிற்சிகள் அமையும்" என கும்ளே மேலும் தெரிவித்தார். (ம)

# இங்கிலாந்துடன் இணைந்து வெளியேறினார் றோய்



யூரோ கிண்ணத் தொடரிலிருந்து இங்கிலாந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அந்த அணியின் பயிற்சியாளரான றோய் பதவி விலகுவதாக அறிவித்தார்.

நடப்பு வருட யூரோக் கிண்ணத் தொடர் பிரான்ஸில் நடைபெற்றுவருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற சுப்பர் 16 சுற்று ஆட்டமொன்றில் (காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டம்) இங்கிலாந்தும் ஐஸ்லாந்தும் மோதின. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியது இங்கிலாந்து. யூரோ கிண்ணத் தொடரின் வரலாற்றில் முதன்முதலாக அரையிறுதிக்குத் தகுதிபெற்று வரலாற்றுச் சாதனை படைத்தது ஐஸ்லாந்து. இந்த நிலையில், இங்கிலாந்தின் தோல்விக்குப்பொறுப்பேற்று பதவி விலகுவதாக அந்த அணியின் பயிற்சியாளரானறோய் நேற்று முன்தினம் அறிவித்தார். (ம)

## VACANCIES

A leading institution in jaffna requesting the following

### ASSISTANT ACCOUNTANT

**Qualifications :-**

- B.Com Accounting or equivalent qualification.
- Holder of CPA Professional Module E or above will be an advantage.
- Must be computer literate and knowledge of Accounting packages will be and added advantage.
- At least 2 years working experience in an Audit firm or Commercial organization.

**Key Result areas :-**

- To maintain and process Accounting Data, postings etc.
- To prepare periodic performance reports.
- To prepare and analyse periodic financial reports, reconciliations etc.
- Any other relevant duties as may be assigned by head of Accounts
- Internal controls and Checks.
- Stock controls and co-ordination

**Salary :-**
Attractive remuneration packages will be offered to the right candidates commensurate with qualification and experience.

**Mode of Application :**
Interested candidates should apply enclosing the following :-

- Detailed curriculum vitae with two passport size photographs.
- Certified copies of relevant academic professional certificates.
- Name and Address of three references.

**Application to be sent to:**

Add. No: 2334
C/o Uthayan
361, Kasthuriyar Road, Jaffna.

vvacancy2@gmail.com

## வங்கியியற் கற்கை நெறி
CBF / IABF, DBF / DABF

இக் கற்கை நெறிகளுக்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில் எமது வழமையான ஆசிரியர் குழாத்தால் கற்பிக்கப்படும். புதிய பிரிவு ஆரம்பம் 02.07.2016 (சனி)

Note :- இதுவரை காலமும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகில் இயங்கிய வகுப்புக்கள் அனைத்தும் யாழ் நகர் மத்தியில்.

தொடர்பிற்கு: K.ஸ்ரீபரன்
(கணக்கீட்டு ஆசான்)
T.P: 077 459 8430
ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி
(சிக்னல் சந்திக்கு) அருகில் யாழ்ப்பாணம்.

## FRENCH LANGUAGE CENTRE
FLC "FOR THE BEST FRENCH FOREVER"

## FRENCH CLASSES

பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்...

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

## வட இந்திய காசி யாத்திரை

**ஆரம்பம்: 06.08.2016** **நாள்கள்: 19** **யாத்திரீகர்: 15 பேர்**

**செல்லுமிடங்கள் :** **டெல்லி,** அட்ஷயதாம் நாராயணர் கோயில் உட்பட சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா** தாஜ்மகால் செங்கோட்டைபார்த்தல். **அலகாபாத்** திருவேணி சங்கமம், புனித நீராடல் **ஹரித்துவார்** சுற்றிப்பார்த்தல், கங்காபூசை தரிசனம். **ரிஷிகேஸ்** தொங்குபாலம் உட்பட சுற்றிப்பார்த்தல் சிவானந்த ஆச்சிரமம் உட்பட **குருச்சேத்திரம்** பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம். வேறு இடங்களும் பார்த்தல். சீத்தாமடி **காசியில்** 3 நாள்கள். 15 இடங்கள் பார்த்தல். கங்காபூசை, காசிவிஸ்வநாதர், அன்னபூரணி உட்பட **மதுரா** கிருஷ்ணஜென்ம பூமி **இராமேஸ்வரம், மதுரை, திருப்புலாணி, நவபாஷாணம், உத்திரகோசமங்கை, திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்காபுரம், காளகஸ்திரி** உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:**
பயணம் 5 விமானம் வரும் மற்றய பயணம் A.C பஸ். உணவு மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைத்த மூன்றுவேளை உணவு. ஒரு நாளைக்கு ஒரு லீற்றர் குடிநீர், சுகாதாரமான 2 பேருக்கு ஒரு குளியலறை இணைந்த அறைகள், காலை, மாலை, காப்பி, ரீ உட்பட விருப்பமுடையவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைப்பதால் கோயில்களில் பணிபுரிவோரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம். விவரம் கேட்டறிந்து பதிவுசெய்யவும் வயதானவர்கள் பாதுகாப்புடன் அழைத்துச்சென்று அழைத்துவரப்படுவார்கள்.

**மேலதிக விவரங்களுக்கு**
கலாநிதி ஸ்ரீரெங்கநாதன் (மகன் ராஜன்)
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11
தொ.பே. 077 768 0102, 077 736 2154
(சி.22155)
Facebook: sridevisriranganathan.thuraiappa

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

SLEAS
சனி, ஞாயிறு, புதன் காலை 9.00 → 4.00 மணிவரை

கணக்காய்வாளர்
ஞாயிறு 9.00 → 4.00

வடமாகாண வரி, நன்நடத்தை உத்தியோகத்தர்
சனி 1.30 → 5.00

சட்டமாணி நுழைவு
ஞாயிறு 2.00 மணி

T.P: 0766 883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கியருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.